இன்றைய காலநிலை



கூடிய வெப்பநிலை 33 °c
குறைந்த வெப்பநிலை 27 °c
வெப்பமான காலநிலை


தையும் விட்டுக் கொடுக்க முடியாது
பக். 06


டுப்படுத்தவிரைகின்றனர் இராணுவத்தினர்
பக். 07


அத்தினா் சென்.சேவியர், சென்.செபஸ்ரியன்
பக். 22


விசாரணை
பக். 23

உதயன்

பக்கம் : 24
வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

UTHAYAN - A Lively National Tamil Daily

சுடர்: 29 கதிர்: 090 வள்ளுவர் ஆண்டு: 2045 மாசி 12, திங்கள் 24.02.2014

# அந்தமான் காடுகளில் புலிகள் பீதியைக் கிளப்புகிறது இந்தியா

## அடர் காடுகளுக்குள் மறைந்து பயிற்சியில் அவர்கள் ஈடுபடலாம் என்றும் யூனியன் நிர்வாகம் அறிக்கை

புதுடில்லி, பெப்ரவரி 24
இந்தியாவின் யூனியன் பிரதேசங்களில் ஒன்றான அந்தமான், நிக்கோபார் தீவுகளை விடுதலைப் புலிகளின் எஞ்சிய உறுப்பினர்கள் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளை நிராகரிக்க முடியாது என்று அந்தப் பகுதியின் நிர்வாகிகள் தமக்கு அறிவித்துள்ளதாக இந்திய உள்துறை அமைச்சகம் கூறியுள்ளது.


கோப்புப்படம்

அந்தமான், நிக்கோபார் தீவுகள் என்பது 572 சிறுசிறு தீவுகளை உள்ளடக்கிய ஒரு யூனியன் பிரதேசம். இவற்றில் 38 தீவுகளில் ஆள்கள் நடமாட்டமே கிடையாது. இத்தகைய ஆள்கள் நடமாட்டம் அற்ற தீவுகளில் உள்ள காடுகளில் புலிகளின் எஞ்சியுள்ள உறுப்பினர்கள் பயிற்சி பெறுவதற்கும் ஆயுதங்கள் மற்றும் வெடி பொருள்களை மறைத்து வைப்பதற்கும் சாத்தியங்கள் இல்லை என நிராகரித்துவிட முடியாது என்று யூனியன் நிர்வாகிகள் தமக்கு அறிவித்துள்ளதாக இந்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

'இலங்கைக்கு அருகில் தமக்கான பாதுகாப்பு பதுங்கிடம் ஒன்றை விடுதலைப் புலிகளின் எஞ்சியுள்ள போராளிகள் தேடக்கூடும். அவ்வாறானவர்களுக்கு எமது பிரதேசத்தில் உள்ள ஆள்கள் அற்ற தீவுகள் தற்காலிக பதுங்கிடங்களாக மாற வாய்ப்புண்டு' இப்படி யூனியன் நிர்வாகிகள் தமக்கு அறிவித்திருப்பதாக இந்திய உள்துறை அமைச்சகம் கூறுகிறது.

இந்திய பெருநிலப்பரப்பில் வாழும் தமிழர்கள் போன்றே அந்தமான், நிக்கோபார் தீவு

21 ஆம் பக்கம் பார்க்க

### இ.போ.ச. - தனியார் சாரதிகளிடையே நேற்று மோதல்

*கிளிநொச்சியில் பயணிகளுக்கு நெருக்கடி*

கிளிநொச்சி, பெப்.24
கிளிநொச்சி- ஸ்கந்தபுரம் வீதியில் பயணிகள் சேவையிலீடுபடும் இ.போ.ச. - தனியார் பஸ்களிடையே புறப்படும் நேர முரண்பாட்டால் முறுகல் ஏற்பட்டது. இதனால் பயணிகள் நேற்று பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டனர்.

கிளிநொச்சி பஸ் தரிப்பிடத்தில் இருந்து கனகபுரம் வீதியூடாக ஸ்கந்தபுரம் நோக்கி பயணிக்கும் இ.போ.ச. பஸ் குறிப்பிட்ட நேரத்துக்குப் புறப்படாது தாமதமாகப் புறப்பட்டதால் தமக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்து தனியார் பஸ் சாரதி ஒருவர் இ.போ.ச. பஸ் சாரதியுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

நடு வீதியில் வைத்து இருவரும் வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டதால் அவ் வீதியூடான போக்குவரத்தும் சில மணி நேரம் பாதிக்கப்பட்டது.

21 ஆம் பக்கம் பார்க்க

## ஆசியாவில் கால்பதிக்கவே இலங்கை மீது பிரேரணை

*அமெரிக்காவைப் போட்டுத் தாக்குகிறது இலங்கை*
*கட்டளையிடும் அதிகாரம் ஐ.நாவுக்கும் இல்லையாம்*

கொழும்பு, பெப். 24
இலங்கை மீது அனைத்துலக போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்தும் யோசனையை ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அதன் ஆணையாளர் நவநீதம்பிள்ளை முன்வைக்கவுள்ள நிலையில், இலங்கைக்கு கட்டளை பிறப்பிக்கும் அதிகாரம் மனித உரிமைகள் சபைக்கு கிடை யாது என்று இலங்கை அரசு நேற்று தெரிவித்தது.

ஆசியப் பிராந்தியத்தில் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்தவே ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா பிரேரணை கொண்டுவருகிறது என்றும் அரசு கடுமையாகச் சாடியது.

அத்துடன், இறுதிப்போரில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் சனல்- 4 வெளியிட்டுள்ள, 'யுத்த சூனிய வலயம்' என்ற திரைப்படத்தை வெளியிட தடைவிதித்த இந்தியாவின் முடிவு வரவேற்கத்தக்கது எனவும் அரசு கூறியது.

அதேவேளை, ஜெனிவாசவாலை

21 ஆம் பக்கம் பார்க்க


இறந்தோருக்கான ஆத்ம சாந்தி பிரார்த்தனை

## திருக்கேதீஸ்வரத்தில் நேற்று ஆத்மசாந்திப் பிரார்த்தனை

*மன்னார் புதைகுழியில் புதைக்கப்பட்டோருக்காக*

மன்னார் .பெப்.24
மன்னார் திருக்கேதீஸ்வரம் புனித பூமியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மனிதப் புதைகுழியில் புதையுண்டவர்களுக்கான ஆத்ம சாந்தி பிரார்த்தனை நிகழ்வு நேற்று பாலாவி தீர்த்தக்கரையில் நடைபெற்றது.

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச்சபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த பிரார்த்தனை நிகழ்வில் புதைகுழியில் புதைக்கப்பட்டவர்களுக்கான ஆத்ம சாந்தி பிரார்த்தனையும், ஏகாதச 11 ருத்ர ஹோம பிரார்த்தனையும்

21 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையுடனான நட்புறவே ஆவணப்பட தடைக்கு காரணம்

*இந்திய முடிவு குறித்து கெலும் மக்ரே கருத்து*

கொழும்பு, பெப். 24
இலங்கையில் இறுதிக் கட்டப் போரின்போது இடம்பெற்றதாக கூறப்படும் போர்க்குற்றங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட 'போர் தவிர்ப்பு வலயம்' ஆங்கிலத் திரைப்படத்தை தமது நாட்டுதிரையரங்குகளில் வெளியிட இந்திய திரைப்பட தணிக்

21 ஆம் பக்கம் பார்க்க

### ஆப்கான் ஜனாதிபதியின் இலங்கைப் பயணம் நிறுத்தம்

கொழும்பு, பெப்.24
உத்தியோகபூர்வ பயணமாக நேற்று இலங்கை வர திட்டமிட்டிருந்த ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீட் கர்சாய் தனது பயணத்தை இறுதி நேரத்தில் கைவிட்டுள்ளார் .

ஆப்கானிஸ்தானின் கிழக்கிலுள்ள கனார் மாவட்டத்தில், தலிபான்கள் நடத்திய தாக்குதலில் 17 ஆப்கானிஸ்தான் படையினர் கொல்லப்பட்டு, 6 பேர் காணாமற்போயுள்ளதை அடுத்தே, இந்தப் பயணம் கைவிடப்பட்டதாக ஆப்கான் அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எனினும், ஆப்கானிஸ்தானில் இது போன்ற தாக்குதல்கள் வழக்கமானதே என்பதால், அவரின் இலங்கைப் பயணம் தடைப்பட்டதற்கு வேறு காரணங்கள் இருக்கலாம் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

# 81

மன்னார், பெப். 24
மன்னார் - திருக்கேதீஸ்வரம் புனித பூமியில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழி நேற்று அகலப்படுத்தப்பட்டு 30 ஆவது தடவையாகத் தோண்டப்பட்டது. இதன் போது மேலும் 2 எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

இதுவரையில் குறித்த புதைகுழி யிலிருந்து மொத்தமாக 81 எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுட்டுள்ளன.

இந்தமனிதப்புதைகுழி31ஆவது

21 ஆம் பக்கம் பார்க்க

## தமிழக அரசின் விடுதலை முடிவு முழு ஆசியாவுக்கும் அச்சுறுத்தல்

*ராஜீவ் கொலைக் கைதிகள் தொடர்பில் இலங்கை அரசு கடும் எச்சரிக்கை*

கொழும்பு, பெப். 24
முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியைக் கொலை செய்தவர்களை இந்திய அரசு விடுவித்தால் அது தவறான முன்னுதாரணமாக அமைந்துவிடும் என்றும் இது விடயத்தில் தமிழக அரசின் முடிவானது முழு ஆசியாவுக்கும் அச்சுறுத்தலானது என்றும் இலங்கை அரசு சுட்டிக்காட்டியுள்ளது.


மருதானையில் அமைந்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தேசிய மொழிகள் மற்றும் நல்லிணக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தவை வருமாறு -

"ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில்

21 ஆம் பக்கம் பார்க்க



மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



கிளிநொச்சியில் இருந்து பளைக்கு பரீட்சார்த்த ரயில் சேவை நேற்று நடைபெற்றது. ரயில்வே திணைக்கள பொதுமுகாமையாளர் ஆரியரத்தின கலந்து கொண்டு பரீட்சார்த்த சேவையை ஆரம் பித்துவைத்தார். இதன்போது எதிர்வரும் 4ஆம் திகதி முதல் பளைவரை ரயில் சேவை கிரமமாக நடைபெறும் எனஅவர் அறிவித்தார் (ஐ)

# இலங்கை அரசு கால அவகாசம் கோருவது தமிழர் பகுதியில் இனப் பரம்பலை மாற்றவே

### அமெரிக்க அதிகாரிகளுக்கு விளக்கமளித்தார் ரவிகரன்

நெடுங்கேணி, பெப். 24

இலங்கை அரசு ஐ.நாவிடம் கால அவகாசம் கோருவது தமிழர் பகுதிகளில் இனப் பரம்பலை மாற்றியமைக்கவே. ஐ.நா. இனியும் கால அவகாசம் வழங்கினால் தமிழர் பகுதியில் சிங்களக் குடியேற்றங்கள் தவிர்க்க முடியாதது. எனவே எதிர்வரும் மார்ச் மாத அமர்விலாவது தமிழர் தரப்புக்கு உண்மையான நீதி கிடைப்பதற்கு சர்வதேச பிரதிநிதிகள் துணை நிற்க வேண்டும். இவ்வாறு அமெரிக்க அரசியல் அதிகாரிகளிடம் வலியுறுத்தினார் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன்.

நேற்றுக் காலை முல்லைத்தீவுக்குப் பயணம் மேற்கொண்ட அமெரிக்க அரசியல் அதிகாரி மைக்கேல் பு. எர்வின் அங்கு வடமாகாண சபை உறுப்பினர் ரவிகரனை சந்தித்து கலந்துரையாடினார்.

சுமார் இரண்டு மணி நேரம் நடைபெற்ற இந்த சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே ரவிகரன் இதனைத் தெரிவித்தார்.

அமெரிக்க அரசியல் அதிகாரி ஊடானசந்திப்பின் போது தமிழர் பகுதிகளில் முன்னெடுக்கப்படும் சிங்கள குடியேற்றங்கள் தொடர்பில் பல்வேறு ஆவணஆதாரங்களுடன்விளக்கம் அளித்தேன்.



மைக்கேல் பு. எர்வின் - ரவிகரன் சந்திப்பு

அதிகார பலத்தின் உதவியுடன் ஆயுத பலத்தின் முன்னிலையில் தமிழர்களின்பூர்வீக பிரதேசங்களில் நடைபெறும் இந்த நில அபகரிப்புகள் எல்லையற்றுதொடர்வது குறித்து தமிழ் மக்கள் எண்ணிலடங்கா முறைப் பாடுகளை எம்மிடம் தந்த வண்ணம் உள்ளனர்.

அவ்வாறான விவரங்களைத் தான் அமெரிக்க அதிகாரிகளிடம் காண்பித்தேன். இவை தவிர பல ஆயிரகணக்கான ஏக்கர் நிலங்கள், தோட்டக் காணிகள் தொடர்ந்தும் அபகரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

குறிப்பாக இன விகிதாகசாரத்தை மாற்றும் முயற்சியாகவே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. கிழக்கு மாகாணத்தில் 58.96 வீதமாக இருந்த தமிழர்கள் தமிழர்களின் விகிதாசாரம் 2012 இன் கணக்கெடுப்புப்படி 39.79 வீதமாக குறைந்துள்ளது. அதே நேரம் 4.66 வீதமாக இருந்த சிங்கள மக்களின் விகிதாசாரம் 2012 இல் 23.15 வீதமாக உயர்ந்துள்ளது. குறிப்பாக தமிழர் பகுதிகளில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட குடியேற்றங்களின் மூலமாக அரசு இந்த பரம்பலை மாற்றியமைத்துள்ளது.

இப்போது இந்த நடவடிக்கைகள் வட பகுதியில் மேற்கொள்ளப்படுகின்றன. முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் சிங்கள குடியேற்றங்களுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஐ.நா. சபையில் அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானங்களின் போது அரசு கால அவகாசத்தைக் கோரிச் சர்வதேசத்தை ஏமாற்றி தமிழர் பகுதிகளில் சிங்கள மக்களை குடியேற்றி வருகின்றது.

இனியும் கால அவகாசம் வழங்குவது இலங்கை அரசுக்கு சாதகமாகவே அமையும். எனவே இம்முறை கொண்டு வரும்தீர்மானத்தை தமிழ் மக்களின் விருப்பத்திற்கேற்ற நிரந்தர தீர்வைநோக்கி நகர்த்தும் வகையில்வெளிப்படுத்த வேண்டும் எனவும் அமெரிக்க அரசியல் அதிகாரியைக் கேட்டுக் கொண்டேன் - என்றார். (ஐ-435)

## ஆளில்லா விமானங்கள் இனி வனங்களை கண்காணிக்கும்

கொழும்பு, பெப். 24

இலங்கையின் தென்பகுதியில் வனப் பிரதேசங்களில் இடம்பெறும் சட்டவிரோத நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு விமானப்படையின் ஆள் இல்லாத வேவு விமானங்களைப் பயன்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை வனஜீவராசிகள் திணைக்களம் முன்னெடுத்துள்ளது.

போர்க் காலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளை கண்காணிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த 'கேலமா' எனப்படும் ஆளில்லா விமானமே இவ்வாறு செயற்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக உடவல வனப் பகுதியில் இடம்பெறுகின்ற சட்டவிரோத செயற்பாடுகளை கண்டறிவதற்காக இந்த விமானம் நேற்று ஞாயிற்றுக் கிழமை சேவையில் ஈடுபட்ட தாக வனஜீவராசிகள் திணைக்களம் அறிவித்துள்ளது. (ஐ)

## மாங்குளம் விபத்தில் படுகாயமடைந்தவர் சாவு

யாழ்ப்பாணம், பெப். 24

மாங்குளத்தில் இரண்டு வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பெண் ஒருவர் சிகிச்சை பயனளிக்காது நேற்று முன்தினம் உயிரிழந்தார் என்று வைத்தியசாலைத் தரப்புத் தெரிவித்தது.

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த சிவனேசன் தர்மிலா (வயது 31) என்பவரே சிகிச்சை பயனளிக்காது நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

ஏ-9 வீதியில் மாங்குளம் பழையமுறிகண்டியை அண்மித்து கடந்த 11 ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் இரண்டு சிறார்கள் உட்பட 5 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 6 பேர் காயங்களுடன் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து திருமணத்துக்குச் சென்ற 9 பேரும் ஜேர்மனியிலிருந்து கொழும்பு வந்திருந்த 2 பேருமாக 11 பேர் கொழும்பிலிருந்து ஹைஏஸ் வாகனத்தில் இரவு யாழ்ப்பாணத்துக்குத் திரும்பிக்கொண்டிருந்த சமயம் வீதியோரமாக நிறுத்தப்பட்டிருந்த டிப்பர் வாகனத்துடன் மோதிய தில் இந்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-4-14)

## முகப்புத்தகம் குறித்து அவதானம் தேவை

### ஜனாதிபதி மஹிந்த வேண்டுகோள்

கொழும்பு, பெப். 24

சமூக வலைத்தளமான முகப்புத்தகத்தை சிறுவர்கள் பயன்படுத்துவது தொடர்பில் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டுமெனப் பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஹெட்டிபொலவிலுள்ள மிந்தோதய பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இந்த வேண்டு கோளை முன்வைத்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முகப்புத்தக விடயம் தொடர்பில் மூன்று முதல் நான்கு வருடங்களுக்கு முன்னரே பெற்றோருக்கு எச்சரிக்கை விடுத்துள்ளேன்.

நாம் சிறுவர்களைத் தவறான பாதையில் செல்ல விட்டால், இந்த நாட்டுக்கு நல்லதல்ல. பெற்றோர்களே விழிப்புடன் இருக்க வேண்டும். அதே வேளை, பிள்ளைகளும் முகப்புத்தகத்தை பற்றிய சரியான புரிந்துணர்வைக் கொண்டிருக்க வேண்டும். மேலும், இதிலுள்ள நன்மை தீமைகளையும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும் - என்றார். (ஐ)

## சிறகு வலை பயன்பாடு குறித்து கலந்துரையாடல்

யாழ்ப்பாணம். பெப். 24

யாழ். மாவட்டத்தில் கரையோரப் பகுதிகளில் சிறகுவலைப் பயன்பாடு தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். நீரியல் வளத்திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக்கலந்துரையாடலில் யாழ். மாவட்ட கிராமிய சம்மேளனாங்களின் தலைவர்கள் மற்றும் செயலாளர்களைக் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட நீரியல் வளத்திணைக்கள உதவிப்பணிப்பாளர் எஸ். கணேசமூர்த்தி அறிவித்துள்ளார். (ஐ-14)

# ஜனவரி மாதத்தில் மட்டும் 8 900 மில். ரூபா செலவு

### எரிபொருள் பாவனைக்கு என்கிறது மின்சார சபை

கொழும்பு, பெப். 24

இந்த ஆண்டின் ஜனவரி மாதத்தில் எரிபொருள் பாவனையின் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு 8,900 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதத்தில் நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் இருந்து 308 மெகாவோல்ற் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கே திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால் நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையம் திடீரென முடங்கிப் போனதால் 31 மெகாவோல்ற் மணித்தியால மின்சாரத்தை மாத்திரமே உற்பத்தி செய்ய முடிந்துள்ளது என்று மின்சார சபையின் உள்ளகத் தகவல் மார்க்கங்கள் தெரிவித்தன.

கடந்த ஜனவரி மாதத்தில் நுரைச்சோலையில் உற்பத்தி செய்யப்பட்டிருந்த 31 மெகாவோல்ற் மணித்தியால மின்சாரத்தை விட, ஜனவரி மாதத்தில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள மேலதிக மின்சாரம் எரிபொருளைப் பயன்படுத்தியே உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தில் 17 ரூபா செலவில் உற்பத்தி செய்யக் கூடிய மின்சார அலகொன்றை எரிபொருள் மூலம் மின்சாரத்தை உற் பத்தி செய்யும் தனியார் நிறுவனமொன்றிடமிருந்து விலைக்கு வாங்கும்போது மின்சார அலகொன்றுக்கு 25 ரூபாவுக்கு மேற்பட்ட தொகையை செலவிட வேண்டி ஏற்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் நீர் மின் உற்பத்தி நிலையங்கள் பராமரிப்பு மற்றும் புதுப்பித்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டதால் நீர்மின் உற்பத்தி அளவு கீழிறங்கி உள்ளது என்று இலங்கை மின்சார சபையின் மேலதிக பொது முகாமையாளர் எம்.சி. விக்கிரம சேகர தெரிவித்தார். (ச-22)

## ஆணின் சடலம் மீட்பு

தென்மராட்சி, பெப். 24

மட்டுவில் புத்தூர் வீதியில் வண்ணாத்துப் பாலத்திற்கு அருகில் ஆணின் சடலம் ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது.

மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த ஆண்டி உதயகுமார் (வயது - 43) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சடலம் மீட்கப்பட்ட இடத்தில் அவர் பயணம் செய்த மோட்டார் சைக்கிள் காணப்பட்டதாகவும், அவ் வீதியால் பயணம் செய்த படையினரே குறித்த சடலத்தை மீட்டுச் சாவகச்சேரி வைத்தியசாலையில் ஒப்படைத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-400)

## புதிய மீன்சந்தை மார்ச்சில் பாவனைக்கு



புதிய சந்தையின் மாற்றம்

தென்மராட்சி, பெப்.24
சாவகச்சேரி நகரசபையினால் தனன்களப்பு வீதியில் 8 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுவரும் மீன் சந்தை கட்டடத் தொகுதி அடுத்த மாதம் பொது மக்கள் பாவனைக்கு வழங்கப்படவுள்ளதாக நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார்.
இதுவரை காலமும் பொதுச் சந்தைக்கு அருகில் மீன் சந்தை இயங்கி வந்ததாகவும், பொது மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க தனன்களப்பு வீதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் நவீன வசதிகளுடனான மீன்சந்தைக் கட்டட வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளதால் மார்ச் மாதம் தொடக்கம் புதிய மீன் சந்தை இயங்கும் என்றும் தெரிவித்தார்.
ஏற்கெனவே இறைச்சிக் கடைத் தொகுதி அமைக்கப்பட்ட வளாகத்தில் மீன்சந்தை அமைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (வ-9)

# மீண்டும் செயற்படவுள்ள மாவட்ட உரக் களஞ்சியம்

### 40 ஆண்டுகளின் பின்னர் வரணியில்

வரணி, பெப்.24
வரணிப் பிரதேசத்தில் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னர் இயங்கி வந்த மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் உரம் வழங்கும் களஞ்சியமாக இயங்கி வந்த மாவட்ட உரக் களஞ்சியம் மீண்டும் செயற்பட உள்ளதாகத் தெரியவருகிறது.
வரணி பிரதேசத்தில் அமைந்திருந்த 52 ஆவது பிரிகேட் இராணுவத் தளத்தினுள் இதுவரை காலமும் குறித்த களஞ்சியக் கட்டடம் உள்ளடக்கப்பட்டு இருந்த நிலையில் குறித்த பிரிகேட் தளம் எழுதுமட்டுவாழ் ஆசைப்பிள்ளை ஏற்றம் பகுதிக்கு மாற்றப்பட்ட நிலையில் குறித்த கட்டடம் மீண்டும் உர நிறுவனத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட உள்ளது.
இது தொடர்பில் வரையறுக்கப்பட்ட உரக் கூட்டுத்தாபனம் குறித்த களஞ்சியத்து முன்பாக தனது பெயர்ப்பலகையில்கடந்த




உரக்களஞ்சியக் கட்டடம் அமைந்த பகுதியில் நடப்பட்ட பெயர்ப் பலகை

வரம்காட்சிப்படுத்தியுள்ளது
குறித்த இராணுவ முகாம் தளபாடங்கள் கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக அகற்றப்பட்டுக் கொண்டே இருக்கும் நிலையில் பொதுமக்களின் வீடுகள், காணிகள் என்பன இது அவர்களிடம் கையளிக்கப்படவில்லை. முழுமையாக படைத்தரப்பினர் வெளியேறும்போது குறித்த உரக்களஞ்சியம் விடுவிக்கப்படும் சாத்தியம் உள்ளது.
குறித்த களஞ்சியத்தை வரணிப் பிரதேசத்தில் அமைப்பதற்காக பிரதான காரண கர்த்தாவாக விளங்கி செயற்பட்டவர் அந்தக் காலத்தில் கிராம அதிகாரியாகச் செயற்பட்டு வந்த அமரர் அ.நடராசா அவர்களையே சாரும் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-122)

## அரியாலை, கொழும்புத்துறையில் சைக்கிள்கள் திருட்டு அதிகரிப்பு

### வீடுகள், கடைகள் உடைப்பும் தொடர்கிறது


கொழும்புத்துறை, பெப்.24
அரியாலை, கொழும்புத் துறைப் பகுதிகளில் சைக்கிள் திருட்டுக்கள் அதிகரித்துள்ளன. கடந்த வாரம் இரு சைக்கிள்கள் களவாடப்பட்டுள்ளன.
அரியாலை சனசமூக நிலையத்துக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள் பட்டப் பகலில் திருட்டுப் போய் விட்டது.
அதேவேளை கொழும்புத் துறை ஆனந்தன் வடலி வீதி 2 ஆம் ஒழுங்கையில் உள்ள வீடொன்றில் பூட்டிய நிலையில் வைக்கப்பட்டிருந்த சைக்கிளை இரவு வேளையில் திருடர்கள் வளவினுள் புகுந்து தூக்கிச் சென்றுள்ளனர்.
இந்தப் பகுதிகளில் விற்பனை நிலையங்கள், வீடுகள், ஆலயங்கள் உடைக்கப்பட்டு திருட்டுக்கள் தொடர்ந்து நடை பெற்று வருவதுடன் இரும்புக் கேற்றுகள் களவாடப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (ஓ-135)

**இந்தப் பகுதிகளில் விற்பனை நிலையங்கள், வீடுகள், ஆலயங்கள் உடைக்கப்பட்டு திருட்டுக்கள் தொடர்ந்து நடை பெற்று வருவதுடன் இரும்புக் கேற்றுகள் கள வாடப்பட்டு வருவ தும் குறிப்பிடத் தக்கது.**

## பொதி சுமப்போருக்கான அறிவிப்பு பார்வைக்கு

### திருநெல்வேலிப் பொதுச் சந்தையில்

யாழ்ப்பாணம், பெப்.24
திருநெல்வேலி பொதுச் சந்தையில் பொதி சுமப்பவர்களுக்கான அறிவிப்பை நல்லூர்ப் பிரதேச சபை பார்வைக்கு வைத்துள்ளது.
பார்வைக்கு வைக்கப்பட்ட அந்தத் துண்டுப் பிரசுரத்தில்: "சந்தையில் விவசாயிகளுடனோ வியாபாரிகளுடனோ எவ்விதமுறைகேடானநடவடிக்கையில் ஈடுபடக் கூடாது. ஒழுங்கீனமாக நடக்கும் பட்சத்தில் சந்தையை விட்டு வெளி யேற்றப்பட நேரிடும் என்பதை அறியத்தருகின்றோம்" என்ற விடயங்களை பிரதேச சபை குறிப்பிட்டுள்ளது.
கடந்த வாரத்தில் விவசாயி ஒருவருடன் இரண்டு வியாபாரிகளும் மூன்று பொதி சுமப்பவர்களும் முரண்பட்டுக் கொண்டதை அடுத்து இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. (வ-7)




பார்வைக்கு வைக்கப்பட்ட துண்டுப் பிரசுரம்

## இலவச மருத்துவ பரிசோதனை

யாழ்ப்பாணம், பெப்.24
தென்மராட்சி முதியோர் பேரவையினர் சங்கத்தானை, கோயிற்குடியிருப்பு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கான இலவச மருத்துவ பரிசோதனை முகாமை நாளை மறுதினம் புதன்கிழமை சங்கத்தானை கிராம அலுவலர் அலுவலகத்தில் நடத்தவுள்ளனர்.
பரிசோதனை முகாமில் நீரிழிவு, இரத்த அழுக்கம், பொது மருத்துவம் போன்றவை இடம் பெறுமென பேரவைத் தலைவர் மருத்துவர் எஸ். எஸ்.அருளானந்தம் தெரிவித்தார்.
பேரவையால் கடந்தமாதம் தென்மராட்சி தெற்குப் பிரதேச மக்களுக் கான பரிசோதனை முகாமினை மறவன் புலோவில் நடத்தியமை குறிப்பிடத்தக்கது. (வ-9)

# சிவராத்திரி விரதத்தை முன்னிட்டு சிவ வாரமாகப் பிரகடனம்

### 21 ஆம் திகதி முதல் 27 வரையில்

யாழ்ப்பாணம், பெப்.24
சிவராத்திரியை முன்னிட்டு சிவ நற்பணி மன்றங்களான சிவத்தமிழ் மானிட விடியற் கழகம், சிவதொண்டர் சிவ மங்கையர் அமைப்புகள், சைவநெறிக்கூடம் ஆகியன இணைந்து கடந்த 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமையிலிருந்து 27 ஆம் திகதி வரையான ஒரு வார காலத்தை சிவ வாரமாக பிரக டனப்படுத்தி அனுஷ்டித்து வரு கின்றன.
இந்தக் காலப்பகுதியில் பாடசாலைகளில் சிவதொண்டர், சிவமங்கையர் அமைப்புகளை உருவாக்குதல், தமிழ் வழிபாட்டுப் பிரசாரம், பிடியரிசித் திட்டம், மது, புகைத்தல் விலக்குப் பிரசாரம், சிரமதானப் பணிகள், அறநெறிப் பாடசாலைகள் உருவாக்கல், கூட்டுப் பிரார்த்தனைகள் ஏற்பாடு செய்தல், சிவமங்கையரின் கைப்பணிப் பொருள்கள் உற்பத்தி முன்னெடுப்புகள் போன்ற பல்வேறு செயற்பாடுகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.
இதன் முதற்கட்டமாக கடந்த 21 ஆம் திகதி தெல்லிப்பழை, உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் ஏற்பாடு செய்த புகைத்தல் எதிர்ப்பு விழிப்புணர்வுப் பேரணிக்கு பூரண ஆதரவை வழங்கியதுடன் சிவதொண்டர்களும் சிவமங்கையர்களும் அதில் கலந்துகொண்டனர்.
மேலும், எதிர்வரும் சிவராத்திரி தினத்தன்று, சிவதொண்டர்களால் சம்புநாத ஈஸ்வரத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சிவபெருமானின் 21 அடி திருச்சொரூபத்துக்கு முன்பாகப் பல்வேறு நிகழ்வுகள் நடத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக, சிவத்தமிழ் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நிகழ்வுகள் உள்ளிட்ட பல்வேறு கலை நிகழ்வுகளும் முற்றுமுழுநாக தமிழ் வழிபாடுகளும் சம்புநாதஈஸ்வரத் தீர்த்தக் கரையில் அமைக்கப்பட்டுள்ள ஆதிமூல லிங்க நாதருக்கு அடியார்களின் கைகளினால் கடல் தீர்த்தத்தினால் அபிஷேகமும் தமிழ்த் திருமுறை வழிபாடும் நடை பெறவுள்ளன.
கடந்த சில வருடங்களாக சிவத்தமிழ் மானிட விடியற் கழகத்தால் சிவராத்திரியை ஒட்டிய காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட மேற்படி அறப் பணிச் செயற்பாடுகள் இந்த முறை சிவ நற்பணி மன்றங்களுடன் இணைந்து நடத்தப்படவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ஓ)

**சம்புநாதஈஸ்வரத் தீர்த்தக் கரையில் அமைக்கப் பட்டுள்ள ஆதிமூல லிங்க நாதருக்கு அடியார்களின் கைகளினால் கடல் தீர்த்தத்தினால் அபிஷேகமும் தமிழ்த் திருமுறை வழிபாடும் நடை பெறவுள்ளன.**

## உணவகங்களில் சுத்தம் பேணுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், பெப்.24
நல்லூர் பிரதேச சபைப் பகுதியில் உள்ள அனைத்து உணவகங்களும் சுத்தம் பேணுமாறும் அதற்கான துரித நடவடிக்கைகள் உடன் மேற்கொள்ள வேண்டும் என்று நல்லூர் பிரதேச சபை அறிவித்துள்ளது.
உணவகங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்த வேலைகளை எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னதாக பூர்த்தி செய்யப்படவேண்டும். சுகாதார நடைமுறைகள் திருப்திகரமாக அமைய வேண்டும். உணவகங்கள் மீது திடீர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படும். இதன்போது,சுகாதார மற்ற சூழ்நிலை காணப்படும். உணவகங்கள் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்று பிரதேச சபை மேலும் தெரிவித்துள்ளது. (வ-7)

## முல்லைத்தீவு மருத்துவமனையில் நட்பு நிலையம் இன்று ஆரம்பம்

முல்லைத்தீவு, பெப்.24
முல்லைத்தீவு பொது மருத்துவமனை வளாக கட்டடத்தில் கெயார் சர்வதேச நிறுவன அனுசரலணையுடன் நட்பு நிலையம் எனும் பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளது.
இன்று திங்கள் காலை 9 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு நிலையத்தைத் திறந்து வைக்கவுள்ளார்.
குறித்த நிலையம் வன்முறைகளால் பாதிக்கப்படும் பெண்களுக்கு உளவள சேவைகளையும் உதவி களையும் வழங்கும் இணைப்பு நிலையமாக இயங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## உதைபந்துப் போட்டியில் அடிதடி பத்துக்கும் மேற்பட்டோர் காயம்

வலி. வடக்கு, பெப். 24
உதைபந்தாட்டப் போட்டியில் ஆதரவாளர்கள் இடையே ஏற்பட்ட கைகலப்பு அடிதடியாக மாறியது. இதன்போது பத்துக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்று வலிகாமம் பகுதியில் இடம்பெற்றது.

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் அண்ணா விளையாட்டுக் கழகமும் கல்வளை விநாயகர் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

போட்டி முடிவடைந்ததும் அண்ணா விளையாட்டுக் கழக ஆதரவாளர்கள் மத்தியஸ்தருடன் முரண்பட்டனர். இதனால் பார்வையாளர்களுக்கும் அண்ணா விளையாட்டுக் கழகு ஆதரவாளர்களுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு அது அடிதடியாக மாறியது. இதில் மோட்டார் சைக்கிள்கள், தனியார் மினி பஸ் என்பன அடித்து நொருக்கப்பட்டன.

குறிப்பிட்ட சம்பவத்தில் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் தலைவர், செயலாளர் உட்பட பத்துக்கும் மேற்பட்டோர் காயங்களுக்க உள்ளாகினர்.

இதில் அராலியைச் சோந்த நவரத்தினம் நாகேந்திரம் (வயது- 28) , நாகேஸ்வரன் ஜீவதாஸ் (வயது-27) ஆகிய இருவரும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். ஏனையோர் சிறு காயங்களுக்கு மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற்றனர். சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸாரும் இராணுவத்தினரும் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததுடன் , விசாரணையையும் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ86)

## இராமேஸ்வரம் மீனவர்கள் ஆர்ப்பாட்டம்



ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள்

இராமேஸ்வரம், பெப்.24
இலங்கைச் சிறையிலுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்கக் கோரி இராமேஸ்வரத்தில் மீனவர்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் இலங்கை - இந்திய மீனவர் பேச்சை துரிதப்படுத்துமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழக மீனவர்கள் கடந்த 31 வருடங்களுக்கும் மேலாக தொடர்ந்து இலங்கை கடற்படையால் சிறைப்பிடித்துச் செல்லப்பட்டு வருகின்றனர். சிறைப்பிடிக்கப்படுவதுடன் மீனவர்களின் படகுகள் மற்றும் மீன்பிடி வலைகள் உள்ளிட்ட அவர்களின் வாழ்வாதாரமிக்க பொருள்களையும் இலங்கை படையினர் சேதப்படுத்துகின்றனர்.

இந்த அத்துமீறல்களை தடுக்கும் வகையில் மத்திய மற்றும் மாநில அரசுகள் இலங்கை அரசுடன் பேசி மீனவர்களின் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்குமாறு ஆர்ப்பாட்டத்தின்போது தமது கோரிக்கைகளை முன்வைத்தனர். (வ)

## இலங்கையிலிருந்து கடத்திய தங்கத்துடன் இருவர் கைது



கடத்தப்பட்ட தங்கம் மற்றும் மீனவர்கள், பொலிஸார்

இராமேஸ்வரம், பெப்.24
இலங்கையில் இருந்து தமிழகத்துக்கு கடத்தி வரப்பட்ட 35 கிலோ தங்கத்தை பொலிஸார் பறிமுதல் செய்து 2 மீனவர்களைக் கைதுசெய்துள்ளனர்.

இலங்கையில் இருந்து தங்கம் கடத்தி வரப்படுவதாக மண்டபத்தில் உள்ள தமிழக கடலோர காவல் பிரிவு பொலிஸாருக்கு இரகசியத் தகவல் வந்தது. அதையடுத்து, மண்டபம் கடலோர காவல் பிரிவு பொலிஸ் அதிகாரி தலைமையிலான பொலிஸார் பாம்பன் ரயில் நிலையத்தில் சோதனை மேற்கொண்டனர்.

அப்போது, சந்தேகத்துக்கு இடமான நிலையில் ரயிலில் ஏற காத்திருந்த இருவரை பிடித்து பொலிஸார் விசாரணை செய்தனர். விசாரணையில், அவர்கள் இருவரும் மீனவர்கள் என்றும், இராமேஸ்வரம் புதி ரோடு பகுதியைச் சேர்ந்த தமிழரசன் மற்றும் காளிதாஸ் என்றும் தெரிய வந்திருக்கிறது.

இருவரிடமும் இருந்து சுமார் 35 கிலோ எடை கொண்ட 12 கோடி ரூபா மதிப்புள்ள தங்க கட்டிகளை பறிமுதல் செய்த பொலிஸார் அவர்களைக் கைது செய்தனர். மேலும் பொலிஸார் நடத்திய விசாரணையில்,

"இலங்கையில் இருந்து வந்த கடத்தல் நபர்கள், கடலில் மீன் பிடித்து கொண்டிருந்த மீனவர்கள் இருவரிடமும் தங்க கட்டிகளைக் கொடுத்து மதுரையில் ஒரு நபரிடம் ஒப்படைக்க கூறியிருக்கின்றனர். இதற்கு கூலியாக 60 ஆயிரம் ரூபா பேசியுள்ளதும் தெரியவந்துள்ளது.

## முருகனைச் சந்தித்த நளினி குமுறியவாறு கதறி அழுதார்

சென்னை, பெப்.24
இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை அனுபவித்து வருகின்ற நளினி அவரது கணவனான முருகனை நேற்று முன்தினம் சந்தித்த போது குமுறிக் குமுறி கதறியழுது விட்டதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோர் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

வேலூர் சிறைச்சாலையில் 15 தினங்களுக்கு ஒருமுறை நடைபெறும் நளினி, முருகன் சந்திப்பு நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. பொலிஸார் முருகனை பெண்கள் சிறைச்சாலைக்கு அழைத்துச் சென்றனர்.



முருகன் நளினி

அன்றைய தினம் காலை 7.30 மணி தொடக்கம் 8 மணி வரை முருகன்-நளினி சந்தித்துப் பேசினர். அப்போது தூக்குத் தண்டனை ரத்து குறித்தும், லண்டனில் மருத்துவருக்குப் படிக்கும் மகள் அரித்ரா பற்றியும் உருக்கமாக பேசிக் கொண்டதாகக் கூறப்படுகிறது.

விடுதலை தடைசெய்யப்பட்டது குறித்து பேசியபோது நளினி கதறியழுதுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சந்திப்புக்கு பின்னர் முருகன் மீண்டும் ஆண்கள் சிறையில் அடைக்கப்பட்டார். (வ)

## தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகளுக்கு . சிறுநீரக கோளாறு

சென்னை, பெப்.24
தமிழகம், மதுரையில் உள்ள இலங்கை அகதிகளின் மத்தியில் சிறுநீரக கோளாறு தொடர்பான நோய்கள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருவாரூர் அகதி முகாமில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

இந்த முகாமில் கடந்த நான்கு வருடங்களில், சிறுநீரகக் கோளாறு நோயால் 9 அகதிகளின் இறப்புகள் பதிவாகி இருக்கின்றன.

முகாமுக்கு விநியோகிக்கப்படுகின்ற தரமற்ற நீர் விநியோகமே இதற்கான காரணம் என்று 'த ரைம்ஸ் ஒப் இந்தியா' தெரிவித்துள்ளது. (வ)

## மாணவருக்கு கௌரவிப்பு

கல்முனை அல்மிஸ்பாஹ் மகா வித்தியாலத்தில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் வைபவம் அண்மையில் பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் ஏ.எம்.எம். பரீட் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில், கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஏ.எம். பறக்கத்துள் ளாஹ், கல்முனை வலயக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் இஸட். எம்.நதீர் மௌலவி, பிரதி அதிபர் யூ.எல்.எம். அமீன், உதவி அதிபர் ஏ.எச். அன்ஸார் ஆகியோருடன் ஆசிரியர்கள், பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்திக்குழு அங்கத்தவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச)

**அலுமாரி திருத்துதல், வடிவமைத்தல்**

சகல விதமான பழைய இரும்பு அலுமாரிகள் திருத்துதல் மற்றும் புதிய டிசைன்களில் கேற், அலுமாரிகள் வடிவமைப்பதற்கு அழையுங்கள்.

**0777630752**

**வட இலங்கைச் சுதேச வைத்தியசபை**
**விசேட கூட்ட அறிவித்தல்**
(லங்கா சித்த ஆயுள் வேத கல்லூரியின் சகல மாணவர்களுக்கும் சித்திபெற்ற மாணவர்களுக்கும்)

வட இலங்கை சுதேச வைத்தியசபையின் கீழியங்கும் லங்கா சித்த ஆயுள்வேத வைத்திய கல்லூரியின் மாணவர்களின் வைத்தியர் வேலைவாய்ப்பு சம்பந்தமாகவும் உயர் பட்டக் கல்விப் பீடம் அமைக்கப்பட்டு அக் கல்லூரியில் சித்தியெய்திய மாணவர்களின் உயர்பட்ட கல்வி தொடர வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதற்கு கல்லூரி விரிவுரையாளர்களிற்கும் நிரந்தர வேலைவாய்ப்புப் பெற்றுக்கொள்ளும் முகமாகவும் கல்லூரி மண்டபத்தில் இன்று 24.02.2014 திங்கட்கிழமை பி.ப. 12.30 மணிக்கு கூட்டம் இடம் பெறும். இக் கூட்டத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர்களும் வடமாகாண சபை உறுப்பினர்களும் கலந்து கொள்கின்றனர்.

*தலைவர்/செயலாளர், வட இலங்கை சுதேச வைத்தியசபை.*

## ஜெயலலிதாவுக்கு உறுதுணையாக நிற்போம்

### *பாரதிராஜா தெரிவிப்பு*

சென்னை, பெப்.24
"இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலைக் கைதிகளை விடுதலை செய்ய நடவடிக்கை எடுத்த முதல்வர் ஜெயலலிதாவுக்கு ஒட்டுமொத்த தமிழர்களும் உறுதுணையாக நிற்பார்கள்' என்று இயக்குநர் பாரதிராஜா தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன், சாந்தன், முருகன், நளினி உட்பட 7 பேரின் விடுதலை நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவித்து தமிழ் திரையுலகம் சார்பில், சென்னை வட பழனியில் உள்ள ஆர்.கே.வி. ஸ்ரூடியோவில் இயக்குநர் பாரதிராஜா தலைமையில் கூட்டம் நடை பெற்றது.

இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே, அவர் இவ்வாறு கூறினார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்;

"உலக நாடுகள் அனைத்தும் தூக்குத் தண்டனையை எதிர்க்கும் சூழ்நிலையில் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் உச்ச நீதிமன்றம் தலைமை நீதிபதி சதாசிவம் மிகச் சரியான தீர்ப்பை வழங்கியுள்ளார். குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுதலை செய்வது மாநில அரசின் முடிவு என்று அவர் தீர்ப்பு கூறியதும் முதல்வர் ஜெயலலிதா தாய்மை உணர்வுடன் பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகிய 3 பேர் உட்பட சிறையில் இருக்கும் 7 பேரையும் விடுதலை செய்ய உத்தரவிட்டார்.



பாரதிராஜா

இதற்காக உலகத் தமிழர்கள் அத்தனைபேரும், கண்ணீரால் முதல்வர் ஜெயலலிதாவுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும். மறப்பதும், மன்னிப்பதும் மனித மாண்பு. முதல் முறையாக தமிழன் தலை நிமிர்ந்து நிற்பதற்கான ஒரு முடிவை முதல்வர் ஜெயலலிதா எடுத்திருக்கிறார். இதற்காக ஒட்டுமொத்த தமிழர்களும் அவருக்கு உறுதுணையாக நிற்பார்கள்"- என்றார். (வ)



சொந்த மைதானத்தில் மகிழ்வோடு மாணவர்களால் நிகழ்த்தப்படும் இடைவேளை காட்சி

## 86 வருடங்களுக்குப் பின்னர் சொந்த மைதானத்தில் வி.போட்டி

### நுணாவில் மேற்கு அ.த.க.பாடசாலை நடத்தியது

நுணாவில் மேற்கு அ.த.க. பாடசாலை 86 வருடங்களின் பின்னர்தனதுசொந்தமைதானத்தில் கடந்த வியாழன் விளையாட்டுப்போட்டிகளைநடத்தியது.

1928 ஆம் ஆண்டு இந்தப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் வருடாந்தம் நுணாவில் மத்தி மணங்குணாய் பிள்ளையார் ஆலய முன்றிலில் நடத்தி வந்தது.

பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் 2000 ஆம் ஆண்டு வரை இயங்கி வந்த குறித்த பாடசாலையின் கட்டடம் போர் காலப்பகுதியில் முற்றாகச் சேதமடைந்தது. 2002 ஆம் ஆண்டு மீள்குடியமர்வின் பின்னர் இக்காணியில் படையினரின் முன்னிலைக் காவலரண் இருந்ததால் அருகில் உள்ள காணி கொள்வனவு செய்யப்பட்டு பாடசாலைக் கட்டடம் அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது.

முன்னைய பாடசாலைக் கட்டடம் இருந்த காணியில் நிலை கொண்டிருந்தபடையினர்வெளியேறியதை அடுத்து அந்தப் பகுதியைச் சேர்ந்த எஸ்.சுரேஸ் என்பவர் தனது சொந்த நிதியில் வாகனங்கள் மூலம் காணியை துப்புரவு செய்து வழங்கியிருந்தார். அதை அடுத்து முதன் முறையாக பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டிகள் சொந்த மைதானத்தில் இடம்பெற்றன. (வ-9)

# பாதுகாப்பற்ற கிணறுகளுக்கு வேலி அமைக்கத் தீர்மானம்

### பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில்

வடமராட்சி, பெப்.24

பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்குள் இருக்கும் பாதுகாப்பற்ற நிலையில் உள்ள கிணறுகளைப் பாதுகாப்பாக மாற்றுவதற்கு தற்காலிக ஏற்பாடாக குறித்த கிணறுகளைச் சுற்றி உடனடியாக வேலி அல்லது முட்கம்பி வேலி அமைப்பதற்கு விவசாய சம்மேளனங்கள் மற்றும் கமக்காரர் அமைப்புக்கள் தீர்மானித்துள்ளன.

பாதுகாப்பற்ற கிணறுகள் தொடர்பாக பருத்தித்துறை பிரதேச சபையின் வேண்டுகோளுக்கு அமைய புலோலி கமநல சேவை நிலைய மண்டபத்தில் பெரும்பாக உத்தியோகத்தர் திருமதி சிவகௌரி திருப்பதி தலைமையில் விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் பூ.சஞ்சீவன் மற்றும் பிரதேச விவசாய சம்மேளனங்கள் கமக்காரர் அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் பூ.சஞ்சீவன் கருத்துத் தெரிவிக்கையில்:-

"பிரதேசத்தில் உள்ள தோட்டங்கள் மற்றும் வயல் வெளிகளில் பாதுகாப்பற்ற நிலையில் காணப்படும் அதிகமான கிணறுகளை பாதுகாப்பாக மாற்ற வேண்டும். பாதுகாப்பற்ற கிணறுகளுக்கு அவற்றின் சொந்தக்காரர்களே அவற்றைப் பராமரிக்க வேண்டியவர்களாவர். அவற்றைப் பராமரிக்காவிடின் கிணற்றுச் சொந்தக்காரர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு பிரதேச சபைக்குரியதாகும். ஏனெனில் அவ்வாறான கிணறுகளில் சிறுவர்கள், முதியோர்கள் விழுந்து பாதிப்புக்குள்ளாகின்றார்கள் என்பது மட்டும் அன்றி இறப்புகளும் ஏற்படுகின்றன. அண்மையில் பட்டம் விட்ட சிறுவன் ஒருவனும் பாதுகாப்பற்ற கிணற்றுக்குள் விழுந்து பரிதாபமாகஇறந்துள்ளான். இப்படியான சம்பவங்கள் கட்டாயம் தவிர்க்கப்பட வேண்டிய ஒன் றாகும். இந்தப் பிரதேசத்தில் உள்ள 21 விவசாய சம்மேளனங்களுக்கும் பாதுகாப்பற்ற கிணறுகளின் பொறுப்பு உள்ளது.

பாதுகாப்பற்ற கிணறு தொடர்பில் தனிநபர் ஒருவர் வழக்குத் தொடர்ந்தால் பிரதேச சபைகள் நீதிமன்றத்துக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்படும். அதனால் தான் விவசாய சம்மேளனங்கள் ஊடாக விவசாயிகளுக்குத் தெரிவிக்க வேண்டும். அதற்கு விவசாய சம்மேளனங்கள், கமக்கார அமைப்புகளுக்குப் பொறுப்பான உங்களை இந்தக் கலந்துரையாடலுக்கு அழைத்துள்ளோம்.

சம்மேளனங்களின் கருத்துப்படி உடனடியாக பாதுகாப்பற்ற கிணறுகளை பாதுகாப்பாக மாற்றுவதற்கு சிமெந்துக் கட்டுகளை உயர்த்திக் கட்டுவது என்பது சாத்தியமற்ற நிலையில் உள்ளது. ஏனெனில் விவசாய நிலையங்களில் தற்போது பயிர்ச்செய்கை இடம் பெறுகின்றன. இந்த நிலையில் கட்டுமானங்களை உடனடியாக மேற்கொள்ள முடியாத சூழ்நிலையுள்ளது. அதற்கு தற்காலிக ஏற்பாடாக பாதுகாப்பற்ற நிலையில் உள்ள கிணறுகளைச் சுற்றி வேலி அமைக்க நடவடிக்கை எடுப்பதாக விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளமை வரவேற்கத்தக்கது. அந்த நடவடிக் கையை விரைவாக மேற்கொள்ளு மாறு கேட்டுக்கொள்கின்றேன்"-என்றார்.

பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பாதுகாப்பற்ற கிணறுகளில் கடந்த சில ஆண்டுகளாக சிறுவர்கள், வயோதிபர்கள் தவறுதலாக விழுந்து இறந்துள்ளனர். பட்டம் விட்ட சிறுவன் ஒருவன் பாதுகாப்பற்ற கிணறு ஒன்றில் விழுந்து உயிரிழந்த சம்பவங்கள் இறுதியாக இடம்பெற்றது. அதைத் தொடர்ந்து பிரதேசத்தில் உள்ள பாதுகாப்பற்ற கிணறுகளை பாதுகாப்பாக வைத்துக்கொள்ள உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் பருத்தித்துறை பிரதேச சபைக்கு அறிவித்திருந்தது. அதனை அடுத்தே பாதுகாப்பற்ற கிணறுகள் தொடர்பாக பருத்தித்துறை பிரதேச சபை இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது. (வ-173)

## கட்டாக்காலி நாய்களை பிடிப்பதற்கு ஏற்பாடுகள்

### வலி.தென் மேற்குப் பிரதேசத்தில்

வலி.தென்மேற்கு, பெப்.24

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் நடமாடும் கட்டாக்காலி நாய்களை இல்லாதொழிக்க முன்வந்துள்ள பிரதேச சபை, சுகாதாரப் பகுதியினருடன் இணைந்து நாய்களைப் பிடிப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் விசர் நாய்களின் தொல்லைகள் அதிகரித்துள்ளதால் பலர் பாதிக்கப்பட்டுச் சிகிச்சைகளுக்கு உள்ளானது டன் உயிரிழந்தும் உள்ளனர்.

இதேவேளை, குட்டைநாய்களின் நடமாட்டமும் அதிகரித்துள்ளன. பொதுச் சந்தைகளில் குட்டை நாய்கள் படுத்துறங்குவதால் அங்கு செல்லும் மக்கள் அச்சத்துடன் தங்கள் தேவைகளை மேற்கொள்ள வேண்டிய நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளனர். குறிப்பாக கடலு ணவுகளை விற்பனை செய்யும் கட்டடங்களில் படுத்துறங்குவதால் சுகாதாரத்துக்கும் பங்கம் ஏற்படுகின்றது.

இந்த நிலை குறித்து பிரதேச சபையின் பதில் தவிசாளருக்கு பொது மக்கள் முறைப்பாடு செய்தமையை அடுத்து மேற்படி நாய்களின் தொல்லைகளிலிருந்து மக்களைக் காப்பாற்ற முன்வந்துள்ள தவிசாளர் சுகாதாரப் பிரிவினரின் ஆலோசனையுடன் மாற்று நடவடிக்கைக்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார். (வ-115)



ஆஸ்பத்திரி வீதியில் காணப்படும் ஒரு குழியை காணலாம்

## யாழ்.நகரில் ஆஸ்பத்திரி வீதியில் அடுத்தடுத்துப் பல குழிகள்

### விபத்துக்கள் ஏற்படும் அபாயநிலை

கொழும்புத்துறை, பெப்.24

யாழ்.ஆஸ்பத்திரி வீதிக்கு காப்பெற் இடப்பட்டுள்ள போதிலும் பல இடங்களில் நடு வீதியில் குழிகள் காணப்படுவதால் வாகனங்கள் அவற்றில் விழுந்து விபத்துக்கள் ஏற்படும் அபாயம் உள்ளதாக சாரதிகளும், பொது மக்களும் கவலைதெரிவிக்கின்றனர்.

ஆஸ்பத்திரி வீதி வேம்படிச் சந்தியில் ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் நிறுவனத்துக்கு முன்பாக இரு குழிகளும், போதனா வைத்தியாசாலை வைரவர் கோயிலுக்கு அண்மித்து கழிவு நீர்கான் சுத்திகரிப்பு மூடி உடைந்த நிலையிலும் காணப்படுகின்றன.

போக்குவரத்து நெரிசல் மிகுந்த இந்த வீதியில் இடையிடையே குழிகள் காணப்படுவதால் வாகனங்கள் குறிப்பாக மோட்டார் சைக்கிள்களில் செல்வோர் விபத்துக்களைச் சந்தித்து வருகின்றனர் என்று விசனம் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-135)

## இருளில் மூழ்கி உள்ள நெல்லியடி நகர வீதிகள்

நெல்லியடி நகரப் பகுதியில் வீதி மின்விளக்குகள் ஒளிராமையால் இரவு, அதிகாலை வேளைகளில் பொதுமக்கள் பெரிதும் சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர்.

வடமராட்சிப் பிரதேசத்தில் முக்கிய நகரமாக வளர்ச்சிய டைந்து வரும் நெல்லியடிநகரில் பொருத்தப்பட்டுள்ள வீதி மின் விளக்குகள் பழுதடைந்துள்ளன.

நகரின் நான்கு புறங்களில் இருந்தும் அதிகாலை வேளை பல்வேறு இடங்களுக்கு பயணிப்பதாகவும், அன்றாடக் கடமைகளை முடித்துக் கொண்டு வீடு திரும்புவதற்காகவும் பஸ்களில் பயணிக்கும் பொதுமக்கள் இரவு அதிகாலை வேளைகளில் பெரிதும் கஷ்டத்துக்குள்ளாகின்றனர். இது குறித்து கரவெட்டிப் பிரதேச சபை எந்தவித மாற்று நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாதது குறித்து பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (வ-173)



வழங்கப்படும் பழங்களை கைதடி இல்ல முதியோர்கள் மகிழ்வோடு உண்கின்றனர்

## உயர்தர வகுப்புகளை ஆரம்பிக்க கோரிக்கை

### அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலையில்

அச்சுவேலி, பெப்.24

அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்புக்களை ஆரம்பிக்க அனுமதி வழங்க வேண்டும் என்று பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். அண்மையில் வெளிவரவிருக்கும் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்து உயர்தரம் கற்பதற்கு தகுதிபெறும் மாணவர்களின் வசதியையும் சமகாலச் சூழலையும் கருத்தில் கொண்டு கோரிக்கை வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

கோப்பாய் கல்விக் கோட்டத்தில் அமைந்துள்ள அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலையில் தரம் ஒன்று முதல் பதினொன்று வரையான வகுப்புகளில 450 மாணவர்கள் வரை கல்வி கற்கின்றனர். ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் மட்டும் 50 மாணவர்கள் வரையில் கல்வி கற்கின்றனர். அவர்களுக்கு இரண்டு வகுப்புப் பிரிவுகள் நடத்தப்படுகின்றன.

விவசாய கிராமியச் சூழலில் முன்னணி வகிக்கும் பாடசாலை மாணவர்களின் எதிர் காலத்தையும் சமகாலச் சூழலில் மாணவர் சமூகம் வெளி இடங்களுக்குச் செல்வதால் எதிர்கொள்ளும் பாதிப்புக்களையும் கருத்தில்கொண்டு ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

கோப்பாய் கல்விக் கோட்டத்தில் உள்ள தரம் -2 பாடசாலைகளில் வளர்முக நிலையில் உள்ள அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலையில் இருந்து பெருமளவு மாணவர்கள் ஜி.சீ.ஈ. சாதாரணதரத்தில் சித்தியடைந்து உயர்தரத்தில் கல்வி கற்பதற்கு வெளியிடங்களுக்குச் செல்கின்றனர்.

மாணவர்கள் வெளியிடங்களுக்குச் செல்வதால் ஏற்படக் கூடிய பொருளாதாரக் குறைபாடுகள் மற்றும் பாதிப்புக்களை கருத்தில் கொண்டு வதிவிடச் சூழலில் கல்வி கற்பதற்கு வசதியாக ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் கலை, வர்த்தக வகுப்புப் பிரிவுகளை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

பாடசாலையின் அமைவிடச் சூழல், மாணவர்களின் கடந்த கால பரீட்சை பெறுபேற்று வீதம் மற்றும் பாடசாலையின் எதிர்கால வளர்ச்சியின் அவசியம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பெற்றோரின் கோரிக்கையை வடக்கு மாகாண கல்வி நிர்வாகம் சாதகமான முறையில் பரிசீலிக்க வேண்டும் என்று பெற்றோர் வலியுறுத்தியுள்ளனர். (வ-11)

## முதியோருக்கு பழங்கள் வழங்கி மகிழ்வித்த புலம்பெயர் தமிழர்

### பெற்றோரின் நினைவாக கைதடி இல்லத்தில்

அரியாலை சரஸ்வதி சன சமூக நிலையத்தின் சமூக நல நோக்கத்துக்கு அமைவாக அந்த நிலையத்தில் அங்கத்தவரும், புலம் பெயர்ந்து தற்போது ஜேர்மனி நாட்டில் வசிப்பவருமாகிய சு.கணேசதாஸ் தனது பெற்றோராகிய அமரர்களான சுப்பிரமணியம் - யோகம்மா ஆகியோரின் ஞாபகார்த் தமாக கைதடி அரச முதியோர் இல்லத்தில் வசிக்கும் முதியோர்களுக்கு ஒரேஞ், அப்பிள் உட்படப் பல வகையான பழங்களை அன்பளிப்பாக வழங்கி உதவியுள்ளார்.

இந்த உதவி மூலம் நூற்றுக்கு மேற்பட்ட முதியவர்கள் "நீண்ட காலத்தின் பின் பெருமளவு பழங்களை நாவுக்கு ருசியாக உண்ணக்கூடியதாக இருந்ததாகவும் தமது பிள்ளைகள் கவனிக்க மறுக்கும் இந்த நேரத்தில் இப்படியான நல்ல உள்ளம் கொண்டவர்கள் உதவுவது தமக்கு கடவுள் தான் கொடையே" எனவும் முதியோர்களால் நன்றி கூறப்பட்டதையும் அங்கு அவதானிக்க முடிந்தது. (ஒ-288)

# நாட்டின் ஓர் அங்குலத்தையும் விட்டுக் கொடுக்க முடியாது

## பரப்புரைக் கூட்டத்தில் நரேந்திர மோடி தெரிவிப்பு

புதுடில்லி, பெப்.24
இந்தியாவின் ஒரு அங்குல இடத்தைக் கூட பிற நாடுகளுக்கு விட்டுக் கொடுக்க முடியாது என்று காட்டமாகத் தெரிவித்துள்ளார் பா.ஜ.க. பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி.

அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள இடாநகரில் இடம்பெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் கூறிய தாவது.

"அருணாச்சலப் பிரதேச மக்கள் துணிச்சல் மிகுந்தவர்கள், அவர்கள் சீனர்களைக் கண்டு பயப்படுவதில்லை. இந்தியாவின் ஓர் அங்குல இடத்தைக் கூட பிறநாடுகளுக்கு விட்டுக் கொடுக்க முடியாது. நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் திடமில்லாத காங்கிரஸ் அரசே காரணம். காங்கிரஸ் அரசின் கொள்கைகளாலேயே பிறநாடுகளின் அத்துமீறல்கள் தொடர்கின்றன. விரைவில் இவற்றில் எல்லாம் மாற்றம் ஏற்படும். தற்போதைய காங்கிரஸ் கட்சியின் குடும்ப அரசியலுக்கு முடிவு கட்டப்படும்"- என்று தெரிவித்துள்ளார்.(ற)



அருணாசல பிரதேசத்தில் பொதுக்கூட்டத்தில் பங்கேற்ற நரேந்திரமோடி. அம்மாநில பழங்குடி மக்களின் பாரம்பரிய தொப்பியை அணிந்து உரையாற்றினார்.

# காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி வேண்டாம்

## தி.மு.க. வேட்பாளர்கள் கருத்து

சென்னை, பெப்.24
நாடாளுமன்றத் தேர்தலுக்கான தி.மு.க. கட்சியின் வேட்பாளர் நேர்காணல் தற்போது மும்முரமாக நடைபெற்று வருகின்றது.

அந்தக் கட்சியின் தலைவர் மு.கருணாநிதியில் மேற்பார்வையில் நடைபெறும் இந்த நேர்காணலில் கலந்துகொண்ட பலரும் தி.மு.க. காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி அமைக்கக் கூடாது என்று கருத்துத் தெரிவித்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகம், புதுச்சேரியில் ஆகிய மாநிலங்களில் உள்ள 40 தொகுதிகளிலும் தி.மு.க. களமிறங்குகின்றது. அந்தத் தொகுதிகளில் தி.மு.க. சார்பாகப் போட்டியிடுவதற்கு ஆயிரத்து 200 பேர் விருப்ப மனுத் தாக்கல் செய்திருந்தனர். அவர்களுக்கான நேர்காணல் தற்போது சென்னையில் உள்ள அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. தலைவர் கருணாநிதி. பொதுச்செயலாளர் அன்பழகன், பொருளாளர் மு.க.ஸ்டாலின் ஆகியோரால் நடத்தப்பட்டு வருகின்றது. நேர்காணலில் பங்கேற்றவர்களிடம் "தேர்தலில் யாருடன் கூட்டணி அமைக்கலாம்?" என்ற கேள்வியும் கேட்கப்பட்டுள்ளது.



வேட்பாளர்களிடம் நேர்காணல் நடத்தும் கருணாநிதி.

அதற்குப் பெரும்பாலானவர்கள் காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி அமைக்கக் கூடாது என்றே கருத்துத் தெரிவித்துள்ளனர் என்று அறிவாலயவட்டாரங்கள் கூறுகின்றன. (ற)

# காங்கிரஸின் தோல்வி நிச்சயம்

## எதிர்வு கூறுகிறார் அத்வானி

புதுடில்லி, பெப்.24
ஊழல் குற்றச்சாட்டுகள் மற்றும் நிர்வாகச் சீர்கேடுகளால் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி வரலாறு காணாத தோல்வியைத் தழுவும் என்று தெரிவித்துள்ளார் பா.ஜ.கவின் மூத்த தலைவர் அத்வானி.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் முன்னெப்போதும் இல்லாத அளவில் பா.ஜ.க. அதிக அளவில் வாக்குகள் பெற்றுத் தனிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெறும். பா.ஜ.கவுக்கு இப்போது எழுந்துள்ள ஆதரவு போன்று இதற்கு முன்னர் நான் கண்டது இல்லை. இந்தியா சுதந்திரம் அடைந்த காலம் முதல் இந்திய அரசியலில் முக்கிய பங்கு வகிக்கும் காங்கிரஸ் கட்சிக்கு இம்முறை மிகவும் சொற்ப அளவிலான வாக்குகளே கிடைக்கும். தேர்தலின் பின்னர் தொங்கு நாடாளுமன்றம் அமைவதற்கு வாய்ப்பே இல்லை"- என்று தெரிவித்துள்ளார்.(ற)

# 7 தமிழர்களின் விடுதலையை எதிர்க்கும் சோனியா, ராகுல் கொடும்பாவிகள் எரிப்பு

## தமிழகம், புதுச்சேரியில் நாம் தமிழர் கட்சி போராட்டம்

சென்னை, பெப்.24
இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனையை அனுபவித்துவரும் 7 தமிழர்களின் விடுதலைக்கு எதிர்ப்புத் தெரிவித்த காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி, துணைத் தலைவர் ராகுல் காந்தி ஆகியோரின் கொடும்பாவிகள் எரிக்கப்பட்டு தமிழகம் மற்றும் புதுவையில் போராட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.ராஜீவ் கொலை வழக்கில் தண்டனை பெற்றவர்களை விடுதலை செய்யும் தமிழக அரசின் முடிவுக்கு முட்டுக்கட்டை போட்டு வருகிறது காங்கிரஸ் கட்சி தலைமையிலான இந்திய மத்திய அரசு.



ரயிலை மறித்து போராட்டத்தில் ஈடுபடும் நாம் தமிழர் கட்சியினர்

மூன்று தமிழரின் தூக்கை இரத்துச் செய்தமையை எதிர்த்தும் மத்திய அரசு நீதிமன்றில் மறு சீராய்வு மனுவும் தாக்கல் செய்துள்ளது. மத்திய அரசின் இந்த நிலைப்பாட்டைக் கண்டித்து காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி, துணைத் தலைவர் ராகுல் ஆகியோர் உருவபொம்மைகள் தமிழகம் மற்றும் புதுவையில் பல இடங்களில் நாம் தமிழர் கட்சியினரால் எரிக்கப்பட்டன. சென்னை தாம்பரம் ரயில் நிலையத்தில் நாம் தமிழர் கட்சியினர் மின் ரயில்களை மறித்து சோனியா-ராகுல் கொடும்பாவிகளை எரித்தனர். அதேபோன்று பெரம்பூர் ரயில் நிலையம் அருகே உள்ள அம்பேத்கர் சிலை அருகே நாம் தமிழர் கட்சியினர் சோனியா, ராகுல் உருவபொம்மையை எரித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். புதுச்சேரியில் காமராஜர் சிலை அருகே கொடும்பாவிகள் எரிக்கப்பட்டன. கடலூர், கோவையிலும் இதேபோல் கொடும்பாவி உருவங்கள் எரிக்கப்பட்டன.(ற)

# குஜராத் கலவரத்தை மக்கள் மறக்க மாட்டார்கள்

புதுடில்லி, பெப்.24
குஜராத்தில் 2002 ஆம் ஆண்டு நரேந்திர மோடியின் ஆட்சிக்காலத்தில் நடந்த கலவரத்தை நாட்டு மக்கள் மறக்கமாட்டார்கள் என்று தெரிவித்துள்ளார் தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,

"பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் நாட்டின் தலை எழுத்தையே மாற்றிவிடுவதாக மோடி கூறுகின்றார். குஜராத்தில் அவரது ஆட்சியில் 2002ஆம் ஆண்டு நிகழ்ந்த கலவரத்தின் போது நடத்தப்பட்ட மிகப் பெரிய இழப்புகளை நாட்டு மக்கள் அறிவார்கள்.

ஆட்சி அதிகாரத்தைக் கேட்கும் பா.ஜ.கவினரின் அணுகுமுறை சமூகத்தில் குறிப்பிட்ட பிரிவினரை புறக்கணிக்கும் விதமாக உள்ளது." என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, குஜராத் கலவரம் தொடர்பாக நரேந்திர மோடி குற்றமற்றவர் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள நிலையில், அது குறித்து கேள்வி எழுப்பக் கூடாது என்று சில வாரங்களுக்கு முன்பு சரத்பவார் கூறியிருந்தார். (ற)

# ஊழல் ஆதாரங்களை சிதைத்துவிட்டது காங்.

## சுஷ்மா சுவராஜ் குற்றச்சாட்டு

புதுடில்லி, பெப்.24
ஊழல்களுக்கு எதிரான அனைத்து ஆவணங்களை காங்கிரஸ் அரசு சிதைத்து விட்டது என்று குற்றஞ்சாட்டியுள்ளார் பா.ஜ.கவின் முக்கிய தலைவர்களில் ஒருவரான சுஷ்மா சுவராஜ்.

புதுடில்லியில் ஊடகவியலாளர்களைச் சந்தித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,

"நடந்து முடிந்த நாடாளுமன்றக் கூட்டத் தொடர் முடங்கியமைக்கு காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்கள்தான் பெருமளவு காரணமாக இருந்தனர். அந்த விடயத்தில் பா.ஜ.கவைக் குற்றஞ்சாட்டுவது தவறு.

இந்திய மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையம், மத்தியகணக்குதணிக்கைஆணையம் ஆகியவை நாட்டின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடுகின்றது என்று மத்திய அரசு குற்றஞ்சாட்டுகின்றது. ஆனால் இந்த அமைப்புகள் ஜனநாயக அமைப்பின் முக்கிய அங்கங்களாகும். காங்கிரஸ் அரசு தமது ஊழல்களுக்கு எதிராக இருந்த ஆவணங்களைத் திட்டமிட்டு சிதைத்து விட்டது. அதன் மூலம் அவர்கள் தப்பிவிடலாம் என்று கணக்குப் போடுகின்றனர்.

15ஆவது நாடாளுமன்றக் கூட்டத்தொடரின் செயற்பாடுகள் வருத்தமளிக்கிறது. 16ஆவது நாடாளுமன்றத்தில் பா.ஜ.க. எந்த வகையில் பங்கேற்கும் என்பதை மக்கள் தீர்மானிப்பார்கள்.-" என்று தெரிவித்துள்ளார். (ற)


# "நானும் ஒருநாள் பிரதமராவேன்"

## லாலு பிரசாத் யாதவின் நம்பிக்கை இது

புதுடில்லி, பெப்.24
தாம் நாட்டின் பிரதமராக வேண்டும் என்ற கனவு இன்னமும் தகர்ந்துபோய்விடவில்லை. என்றோ ஒருநாள் நாட்டின் பிரதமராகப் பதவியேற்பேன் என்று தெரிவித்துள்ளார் ராஷ்டிரிய ஜனதா தளத் தலைவர் லாலு பிரசாத் யாதவ்.

தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் கூறும்போது,

"மதவாதச் சக்திகள் ஆட்சிக்கு வருவதைத் தடுக்கவே காங்கிரஸுடன் கூட்டணி அமைத்திருக்கின்றோம். நரேந்திர மோடி, அரவிந்த் கேஜ்ரிவால் போன்றோர் எந்த வகையிலும் ஆட்சி அதிகாரத்துக்கு வந்துவிடக் கூடாது என்பதுதான் என் நோக்கம்.



லாலு பிரசாத்

எனக்கு ராம் விலாஸ் பாஸ்வானுடனோ காங்கிரஸுடனோ எந்தப் பிரச்சினையும் இல்லை. நான் சிறைக்கு செல்லக் காரணம் ராகுல் காந்தி என்று கூறப்படுவதில் உண்மை ஏதும் இல்லை. அப்படியான ஒரு பொய் திட்டமிட்டு பரப்பப்படுகிறது.

நாங்கள் மூன்றாவது அணியில் இடம்பெறவில்லை. 3 ஆவது அணியில் உள்ள கட்சிகளின் ஒவ்வொரு தலைவரும் தானே பிரதமர் ஆக வேண்டும் என்ற விருப்பத்தில் உள்ளனர். எனக்கும் பிரதமராக வேண்டும் என்ற கனவு இருக்கிறது. அந்தக் கனவு இன்னமும் தகர்ந்துபோய்விடவில்லை. நானும் ஒருநாள் நாட்டின் பிரதமராக வருவேன்" - என்று தெரிவித்துள்ளார். (ற)

# ஆம் ஆத்மி அலுவலகம் மீது தாக்குதல்

மும்பை, பெப்.24
மும்பையில் உள்ள ஆம் ஆத்மி கட்சியின் அலுவலகம் இனந்தெரியாதவர்களால் தாக்கி சேதமாக்கப்பட்டுள்ளது. அலுவலகத்துக்குள் நுழைந்த 20க்கும் மேற்பட்டவர்கள் அங்கிருந்த பொருள்கள் அனைத்தையும் அடித்து நொருக்கியுள்ளனர். இந்தத் தாக்குதலுக்கு தேசியவாத காங்கிரஸினரே காரணம் என்று ஆம் ஆத்மி கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.(ற)

# உக்ரைனில் போராட்டம் உக்கிரம்; ஜனாதிபதி தப்பியோட்டம்


இராணுவ வாகனங்கள் மீது பெற்றோல் குண்டுகள் கொண்டு தாக்குதல் நடத்தும் போராட்டக்காரர் ஒருவர்.

கீவ், பெப்.24

உக்ரைனில் அரசுக்கு எதிரான போராட்டங்கள் உக்கிரமடைந்துள்ளதை அடுத்து அந்த நாட்டு ஜனாதிபதி விக்டர் யானுகோவிச் தலைநகரை விட்டு வெளியேறிவிட்டார் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உக்ரைனை ஐரோப்பிய யூனியனில் இணைக்கும் ஒப்பந்தத்தில் யானுகோவிச் மறுத்ததை அடுத்தே அவருக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்தனர். ஜனாதிபதியின் இந்த முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கடந்த 3 மாத காலமாக பெரும் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. ஜனாதிபதி உடனடியாகப் பதவி விலக வேண்டும். புதிதாகத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே போராட்டங்களில் ஈடுபடுவோரின் கோரிக்கையாக உள்ளது.

இந்தநிலையில் கடந்த சனிக்கிழமை பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே இடம்பெற்ற கடுமையான மோதல்களின் முடிவில் தலைநகர் கீவ் போராட்டக்காரர்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. அதையடுத்து ஜனாதிபதி விக்டர் யானுகோவிச் கீவ் நகரில் இருந்து வெளியேறிச் சென்றுவிட்டார் என்று எதிர்க்கட்சித் தலைவர் விட்டாலி கிளிட்ஸ்கோ நேற்று அறிவித்துள்ளார். எனினும் யானுகோவிச் தற்போது எங்குள்ளார் என்பது குறித்த தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

அதேவேளை, அரசியல் கைதியாக உக்ரைன் அரசால் இதுவரை சிறையில் அடைக்கப்பட்டிருந்த அந்நாட்டின் எதிர்க்கட்சியின் முன்னாள் தலைவரும், முன்னாள் பிரதமருமான யூலியா டைமோஷென்கா நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளார். சுதந்திர சதுக்கத்தில் கூடியிருந்த பெருந்தொகையான மக்கள் முன்பு உரையாற்றிய அவர் "யானுகோவிச்சின் சர்வாதிகாரம் வீழ்ந்தது. ஜனநாயகம் வென்றது" என்று கருத்துத் தெரிவித்துள்ளார். (ற)

## 19 கர்தினால்கள் புதிதாக நியமனம்

வத்திக்கான், பெப்.24

போப்பாண்டவர் பிரான்சிஸ் புதிதாக 19 கர்தினால்களை நியமனம் செய்துள்ளார்.

அர்ஜெண்ரீனாவைச் சேர்ந்தவரான போப்பாண்டவர் பிரான்சிஸ் வளர்ந்து வரும் நாடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், தென் அமெரிக்காவைச் சேர்ந்த 5 பிஷப்கள், ஆபிரிக்க மற்றும் ஆசிய நாடுகளைச்சேர்ந்ததலா 2 பிஷப்கள் ஆகியோருக்கு கர்தினால் பதவிகளை வழங்கியுள்ளார்.

இது தொடர்பாக புதிய கர்தினால்களுக்கு போப் எழுதியுள்ள கடிதத்தில், "கர்தினால் என்பது பதவி உயர்வு மட்டுமல்ல, ஒரு கௌரவமுமாகும். இந்தப் பொறுப்பின் மூலம் எளிமையாக வாழ்ந்து விரிவான அன்புடன், தொலைநோக்குப் பார்வையுடன் சேவை செய்வதே முக்கியம்" என்று குறிப்பிட்டுள்ளார். (ற)

# வன்முறைகளைக் கட்டுப்படுத்த விரைகின்றனர் இராணுவத்தினர்

### *வெனிசுவேலா ஜனாதிபதி மதுரோ அதிரடி நடவடிக்கை*

கராக்கஸ், பெப்.24

வெனிசூவேலாவில் கடந்த இரு வாரங்களாக தொடர்ந்து நடைபெற்றுவரும் போராட்டங்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் முயற்சியாக போராட்டங்கள் நடைபெற்று வரும் பகுதிகளுக்கு இராணுவத்தின் பரசூட் படைப் பிரிவை அனுப்பி வைத்துள்ளார் ஜனாதிபதி நிகோலஸ் மதுரோ.



வெனிசுவேலாவில் ஜனாதிபதி மதுரோவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் பெரும் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றன. அந்தப் போராட்டங்களில் மாணவர்களும் இணைந்துள்ளனர். போராட்டங்களில் இதுவரை 4 பேர் உயிரிழந்துள்ளனர். ஏராளமானவர்கள் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்த நிலையில், போராட்டங்கள் அதிகமாக நடைபெறும் பகுதிகளுக்கு இராணுவத்தினரை அனுப்பி வைத்துள்ளார் ஜனாதிபதி நிகோலஸ் மதுரோ. தலைநகர் கராக்காஸ் மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகளில் இராணுவத்தினர் நிலைநிறுத்தப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. அந்தப் பகுதிகளில் கடைகள், வர்த்தக மையங்கள் மூடப்பட்டுள்ளன. போராட்டக்காரர்கள் ஆங்காங்கு தீ வைத்தும், தடுப்புகளை ஏற்படுத்தியும் உள்ளதால் பிரதான வீதிகள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன.

அதேவேளை, கைது செய்யப்பட்ட போராட்டக்காரர்களை விடுவித்து, நம்பகத்தன்மையான பேச்சுக்களில் வெனிசுவேலா அரசு ஈடுபட வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா வலியுறுத்தியுள்ளார். எனினும் ஒபாமாவின் கருத்தைக் கடுமையாக மறுத்துள்ள மதுரோ, "ஒபாமாவின் தலையீடு, நாட்டின் உள்விவகாரங்களில் புதிய கொடூரமான அந்நிய சக்தி தலையிடுவதாக உள்ளது" என்று தெரிவித்துள்ளார். (ற)

## போதை பொருள் கடத்தல் மன்னன் கைது

லண்டன், பெப்.24

மெக்ஸிகோவைச் சேர்ந்த போதைப் பொருள் கடத்தல் மன்னன், 13 ஆண்டுகளுக்கு பிறகு கைது செய்யப்பட்டுள்ளான்.

மெக்ஸிகோவின் மிகப்பெரிய போதைப் பொருள் கடத்தல் கும்பல் தலைவன் ஜோகுயின் எல்சாபோ குஷ்மேன். சர்வதேச அளவில் போதைப் பொருள் கடத்தலில் முன்னணியில் இருக்கும் ஜோகுயின், அமெரிக்கா உட்பட பல நாடுகளில் போதைப் பொருள் குற்ற வழக்குகளில் தொடர்புடையவன். அவன் குறித்து தகவல் அளிப்பவர்களுக்கு ரூபா 90 கோடி பரிசு தொகை வழங்குவதாக அமெரிக்கா அறிவித்திருந்தது.

கடந்த 13 ஆண்டுகளாக பொலிஸார் தேடிவந்த நிலையில், மெக்ஸிகோ பசிபிக் கடற்கரை நகரமான மஷட்லானில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளான். தற்போது அவனிடம் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று கூறப்படுகின்றது. (ற)

# தேர்தலில் போட்டியிட மனுக் கொடுத்த நாய்

நியூயோர்க், பெப்.24

அமெரிக்க மேயர் தேர்தலில் போட்டியிட நாய் ஒன்று மனுதாக்கல் செய்துள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணம் இர்விங் நகர மேயர் தேர்தல் மே மாதம் 5 ஆம் திகதி நடைபெற உள்ளது. அந்தத் தேர்தலில் போட்டியிட வெஸ்டி என்ற இனத்தை சேர்ந்த நாய் சார்பில், அதன் உரிமையாளர் மைக் ஹேறாவர்ட் கடந்த 18ஆம் திகதி மனுதாக்கல் செய்துள்ளார். அத்துடன் பிரசாரத்திலும் ஈடுபடத் தொடங்கியுள்ளார். அந்த நாயின் பெயர் டைலான்.

வேட்பு மனுவில், பெண் நாய் வெஸ்டியின் மகன் டைலான் என்று பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மனுவை பார்த்த தேர்தல் அதிகாரி அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்துள்ளார்.


டைலானுடன் உரிமையாளர்

அந்த மனுவில் குளறுபடிகள் இருக்கின்றன என்றும், மேயர் தேர்தலில் போட்டியிடத் தகுதி இல்லை என்றும் தெரிவித்து அந்த மனு தற்போது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து மைக் ஹேறாவர்ட் கூறுகையில், "இர்விங் நகரில் சில பிரச்சினைகள் இருக்கின்றன. அது பற்றிடைலானுக்குசில கருத்துகள் உள்ளன" என்று தெரிவித்துள்ளார்.

1984ஆம் ஆண்டு முதல் மைக் ஹேறாவர்ட் அரசியலை கிண்டல் செய்து நிறைய கட்டுரைகள் எழுதி வருகின்றார். (ற)

## இத்தாலியின் புதிய பிரதமர் பதவியேற்பு

ரோம், பெப்.24

இத்தாலியின் பிரதமராக மட்டெயோ ரென்ஷி கடந்த சனிக்கிழமை பதவியேற்றுள்ளார்.

முன்னதாகப் பிரதமர் பதவி வகித்த என்ரிகோ லெட்டா மீது ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்பட்ட அதிருப்தியை அடுத்து புதிய பிரதமரை தேர்வு செய்ய வாக்கெடுப்பு நடைபெற்றது. அதில் என்ரிகோ லெட்டா தோல்வி அடைந்தார். ஜனநாயகக் கட்சியின் செயலாளர் மட்டெயோ ரென்ஷி வெற்றி பெற்றார். அதையடுத்து லெட்டா பிரதமர் பதவியில் இருந்து விலகினார். இந்த நிலையில் புதிய பிரதமராக 39 வயதுடைய மட்டெயோ ரென்ஷி சனிக்கிழமை பதவி ஏற்றுக் கொண்டார். அதன் மூலம் இத்தாலியின் மிகவும் வயது குறைந்த பிரதமர் என்ற பெருமையை ரென்ஷி பெற்றுள்ளார். (ற)

# திபெத் ஒருங்கிணைப்பாளராக சாரா சேவால் நியமனம்

### *வெளிவிவகார அமைச்சர் ஜோன் கெரி அறிவிப்பு*

நியூயோர்க், பெப்.24

திபெத்துக்கான சிறப்பு ஒருங்கிணைப்பாளராக அமெரிக்க வெளியுறவுத்துறை துணை அமைச்சர் சாரா சேவாலின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்று அறிவித்துள்ளார் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெரி.

அமெரிக்க ஜனாபதிபதி பராக் ஒபாமாவுடன், திபெத் ஆன்மிகத் தலைவர் தலாய் லாமா நடத்திய பேச்சுக்களின் பின்னரே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஒபாமாவை தலாய் லாமா சந்திப்பது சீனாவுடனான அமெரிக்க உறவில் விரிசலை ஏற்படுத்தும் என்று சீன அரசு எச்சரித்திருந்தது. எனினும் அந்த எச்சரிக்கையை மீறி ஒபாமா-தலாய்லாமா சந்திப்பு திட்டமிட்டப்படி நடைபெற்றது.


ஜோன் கெரி

இந்நிலையில், திபெத்துக்கான சிறப்பு ஒருங்கிணைப்பாளராக சாரா சேவால் அறிவிக்கப்பட்டுள்ளார். சீன அரசுக்கும் தலாய்லாமா அல்லது அவரது பிரதிநிதிகளுக்கும் இடையே உரிய அமைதிப் பேச்சு நடைபெற நடவடிக்கை எடுப்பது சாரா சேவாலின் பொறுப்பாகும்.

அமெரிக்க குடிமைப் பாதுகாப்பு, ஜனநாயகம் மற்றும் மனித உரிமைப் பிரிவின் வெளியுறவுத் துறை உதவி அமைச்சராக சாரா சேவால் கடந்த 20ஆம் திகதியே பதவியேற்றுக் கொண்டார். (ற)

## ஈராக் இராணுவ ஹெலி மீது தாக்குதல்

பாக்தாத், பெப்.24

ஈராக்கில் அரசுக்கு சொந்தமான ஹெலிகொப்டர் ஒன்றை பயங்கரவாதிகள் சுட்டு வீழ்த்தியுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஈராக்கின் வடக்குப் பகுதியில் பறப்பில் ஈடுபட்டிருந்த இராணுவத்துக்குச் சொந்தமான ஹெலி மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அதில் பயணித்த நால்வர் உயிரிழந்துள்ளனர்.

எனினும் இதுகுறித்து ஈராக் அரசு உத்தியோகபூர்வமான தகவல் எதனையும் வெளியிடவில்லை. (ற)

# மாநாட்டில் பங்குபற்றுமாறு ஐ.நா.செயலருக்கு அழைப்பு

## அமைச்சர் டலஸ் நியூயோர்க்கில் பான்கீ-மூனுடன் பேச்சு

கொழும்பு,பெப்.24

கொழும்பில் எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ள உலக இளைஞர் மாநாட்டில் பங்குபற்ற வருமாறு ஐ. நா. செயலாளர் நாயகம் பான்கீ மூனுக்கு இலங்கை அழைப்பு விடுத்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அழைப்பிதமுடன் நியூயோர்க் சென்றுள்ள இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும, ஐ. நா. செயலரைச்சந்தித்து இந்த அழைப்பை விடுத்தார்.

எதிர்வரும் மே மாதம் நடைபெறவிருக்கும் உலக இளைஞர் மாநாட்டுக்குத் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்த பான்கீ மூன், அழைப்புக்கு நன்றி தெரிவித்தார்.

அவர் வேலைப்பழுவுக்கு மத்தியில் இந்த



இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும, ஐ. நா. செயலர் பான் கீ மூனைச் சந்தித்தபோது....

உறுதிமொழி வழங்கியுள்ளார்.

இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும மற்றும் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தலைவர் லலித் பியூம் பெரேரா, ஐ. நா. வுக்கான இலங்கையின் நிரந் தர வதிவிடப் பிரதிநிதி பாலித கொஹன ஆகியோர் பான்-கீ மூனைச் சந்தித்துள்ளனர். மாநாட்டுக்கான ஏற்பாடுகள் மற்றும் அதன் குறிக்கோள் குறித்து ஐ. நா. செயலருக்கு விளக்கமளித்ததுடன், அண்மையில் வெளியிடப்பட்ட இலங்கையின் இளைஞர் கொள்கைத் திட்டத்தின் பிர தியை அமைச்சர் டலஸ் அழகப்பெரும, பான்-கீ மூனிடம் கையளித்தார். தனது இரண்டாவது தவணைக் காலத்தில் பிரதான திட்டத்தில் இளைஞர்களுக்கே முக்கியத்துவம் அளிக்கப்படுவ தாகச் சுட்டிக்காட்டிய பான்-கீ மூன், உலக சனத்தொகையில் பாதிக்கும் அதிகமாகவுள்ள 25 வயதுக்கும் குறைவானவர்களே இளைஞர் உலகமாகும் என்று கூறினார்.

கொழும்பில் நடைபெறவிருக்கும் உலக இளைஞர் மாநாட் டின் மூலம் வெளியிடப்படவி ருக்கும் கொழும்பு இளைஞர் செயற்றிட்டம் 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னரான பல்துறை செயற்பாடுகள் குறித்து கவனம் செலுத்த உதவியாக இருக்கும் என்று அவர் கூறினார். (ச)

**வீடு விற்பனைக்கு**

மானிப்பாய் நவாலியில் வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 3628145 (45078) (10.14)

**கணினி திருத்தம்**

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.

அழையுங்கள். 0779086737 Computer Repair

GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.

**ஆங்கில ஆசிரியர் தேவை**

முன்பள்ளிக்கு அனுபவமுள்ள ஆங்கில ஆசிரியர் தேவை.

விண்ணப்பிப்போர் 28.02.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நேரில் வரவும்

இடம் : திருநெல்வேலி சிமாட் கிட்ஸ்
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

(சி/12572) (10.14)

## செயற்கையான நுரையீரலை தயாரித்தது வைத்தியர் குழு

செயற்கையாகத் தயாரித்து வெற்றிகரமாக உடலில் பொருத்தி செயற்படுத்தக் கூடிய செயற்கை



செயற்கை நுரையீரல்

நுரையீரலொன்றை வைத்தியர்கள் குழு தயாரித்துள்ளது.

பிளாஸ்ரிக்கினால் உருவாக்கப்பட்டுள்ள இந்த உறுப்பினால் ஆண் டொன்றில் பல ஆயிரம் நோயாளர்களின் உயிர்களைக் காப்பாற்றிக் கொள்ளக் கூடியதாக இருக்கும் என்று வைத்தியர்கள்குழுநம்பிக்கை வெளியிட் டுள்ளது.

நுரையீரல் புற்றுநோயால் ஆண் டொன்றில் உயிரிழக்கும் நோயாளர்களுக்கு இந்தச் செயற்கை நுரை யீரல் பேருதவியாக அமையும் என்று அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

உடலுக்கு ஏற்ற சாதாரண அளவில் தயாரிக்கப்பட் டுள்ள இந்த செயற்கை நுரையீரலானதுமிக இலகுவாக செயலாற்றுகிறது என்று வைத்தியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

(ச-22)

தினக்குரல்
விளம்பரத் தொடர்புகளுக்கு
ad@thinakkural... (vertical ad text)

## மரண அறிவித்தல்

### திருமதி கற்பகம் சங்கரப்பிள்ளை



கரைச்சி கண்டாவளையைப் பிறப்பிடமாகவும், புளியம் பொக்கணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கற்பகம் சங்கரப்பிள்ளை அமரத்துவம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி ஆழ்வார்ப்பிள்ளை தம்பதியரின் ஏக புத்திரியும் காலஞ்சென்ற வேலுசங்கரப்பிள்ளையின் அன்புத்துணைவியும் பொன்னம்மா சின்னத்தங்கம் காலஞ்சென்ற அன்னபூரணம் மற்றும் குஞ்சுப்பிள்ளை, தேவி, காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் மனோன்மணி, ஆனந்தலீலா (பிரான்ஸ்), தயாநிதி (லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ் சென்ற சுப்பிரமணியம் மற்றும் கந்தவனம், சிதம்பரப்பிள்ளை, காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் மார்க்கண்டு, யோகானந்தம் (பிரான்ஸ்), இளையதம்பி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், கொப்பாட்டப் பிள்ளைகள், ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் புளியம் பொக்கணை சந்தி பெரியகுளத்தில் நடைபெற்று இன்று (24.02.2014) திங்கட்கிழமை பி.ப. 2.00 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக கண்டாவளை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :

பெரியகுளம்,
புளியம்பொக்கணைச்சந்தி.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், கொப்பாட்டப்பிள்ளைகள்.

# போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈடு

## புனர்வாழ்வு அமைச்சு நடவடிக்கை

போரால் பாதிக்கப்பட்டவர்கள், சொத்துக்களை இழந்தவர்கள் மற்றும் சேதமடைந்த வழி பாட்டுத் தலங்களுக்கு நட்ட ஈடுகள் வழங்கப்படவுள்ளன. இந்த நட்டஈடுகளை புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சு வழங்கவுள்ளது.

முல்லைத்தீவு மற்றும் யாழ்ப் பாண மாவட்டங்களில் இன் றும்,நாளையும் நட்டஈடு வழங்கும் நிகழ்வுகள் நடை பெறவுள்ளன. இன்று முல்லைத்தீவிலும், நாளை யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திலும் நடைபெறவுள்ளன. போரால் பாதிக்கப்பட்ட 10 ஆலயங்களுக்கு தலா 100,000 ரூபா வீதம் நட்ட ஈடுகள் வழங்கப்படவுள்ளன. 5 கோயில்களுக்கும், 5 கிறிஸ்தவ தேவாலயங்களுக்கும் இவ்வாறு நட்டஈடுகள் வழங்கப்படவுள்ளன என்று அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி யொருவர் தெரிவித்தார். (ச)

## புளியம்பொக்கணை - (கரைச்சி) நாகதம்பிரான் ஆலய மகா சிவராத்திரி விழா

மேற்படி ஆலய கும்பாபிஷேகம் நிறைவுற்று இந்த வருடம் மகா சிவராத்திரி எதிர்வரும் 27.02.2014 வியாழக்கிழமை 4 ஜாமப்பூசை ஆராதனைகளுடன் சிறப்பாக நடைபெறவுள்ளது. சகல அடியவர்களும் மகா சிவராத்திரி விழாவில் கலந்து பரம்பொருளின் திருவருளைப் பெற்று உய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

(சி/12571) (10.14)

ஆலய பரிபாலன சபையினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### திருமதி அருளம்மா சங்கரப்பிள்ளை



மண் மகிழ
06.11.1931

கண்நெகிழ
25.01.2014

வாழ்க்கையெனும் ஓடத்தில்
எமைச்சுமந்த அன்புப் பெட்டகமே
மண்ணில் புகழ்பெற பண்பாய் நீவளர்த்த
பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் யாவரையும்
தவிக்க விட்டு எங்கு சென்றீர்
எம் கண்ணீர் சொரிய தாயே உம் நாமம் நிலைக்க
உன் நினைவில் வாழ்கின்றோம்.

கடந்த 25.01.2014 அன்று சிபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (24.02.2014) திங்கட்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடை பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(C/12569) (10.14)

மீசாலை வடக்கு, இராமாவில்,
A.P.C முன் ஒழுங்கை.

S. தங்கராசா (செல்வம்)
T.P: 077 923 1485

## மரண அறிவித்தல்

### குமரப்பெருமாள் சரவணபெருமாள் (ஆடியபாதம்)



பறாளாய் வீதி சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட குமரப்பெருமாள் சரவண பெருமாள் நேற்று முன்தினம் (22.02.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமரப்பெருமாள் - சீதேவிப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற இலட்சுமணன் - சின்னத்தங்கம் தம்பதியரின் அருமை மருமகனும் பொன்னம்மாவின் அன்புக் கணவரும் அருளானந்தன் (சுவிஸ்), சாந்தினி (டென்மார்க்) ஆகியோரின் அன்புத்தந்தையும் சிறிதரன் (டென்மார்க்), மீனாம்பிகை (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனும் காலஞ்சென்றவர்களான அருணாசலம், இரட்ண வடிவேல் ஆகியோரின் அருமைசகோதரனும் காலஞ் சென்றவர்களான சேதுப்பிள்ளை, இலட்சுமி, வேலாயுதம், வடிவேலு மற்றும் சின்னத்தம்பி, சுப்பையா, ஆறுமுகம், தங்கமுத்து, சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும் சாருஜா, சௌமியா, சதுர்சன் (டென்மார்க்), அட்சஜா, குமரன் (சுவிஸ்)ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.02.2014) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுழிபுரம் திருவடி நிலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.;

தகவல்:

பறாளாய் வீதி, சுழிபுரம்

மனைவி, பிள்ளைகள்

# சரியான திட்டமிடல் இல்லாமையால் திண்மக் கழிவகற்றலில் பிரச்சினைகள்


## தெரிவித்தார் வடமாகாண முதலமைச்சர்

கிளிநொச்சி, பெப்.24
சரியான திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம் இன்மை காரணமாகவே திண்மக் கழிவகற்றல் இன்று பெரும் பிரச்சினையாக உள்ளது. இவ்வாறு வட மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபை மண்டபத்தில் வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் கழிவகற்றல் பெரும் பிரச்சினையாக இருக்கவில்லை. தற்போது சனநெருக்கடி அதிகரித்துள்ளது. பிளாஸ்ரிக் பாவனையும் அதிகரித்துள்ளது. கொழும்பைப் பொறுத்தளவில் நாளாந்தம் 700 தொன் திண்மக்கழிவுகளை அப்புறப்படுத்த வேண்டியுள்ளது. இது சில காலத்துக்கு முன்னர் பெரும் பிரச்சினையாக இருந்தது. ஆனால் இன்று அது சாதாரண விடயமாக மாறிவிட்டது. குறிப்பாக சரியான திட்டமிடல் மூலமே அது



க.வி. விக்னேஸ்வரன்

வெற்றி பெற்றது.

ஆகவே திட்டமிடல் என்பது மிக முக்கியமான விடயம். நாங்கள் உரிய காலத்தில் திட்டமிடாது விட்டால் கழிவகற்றல் தொடர்பில் சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டிவரும். தொற்று நோய்கள் பரவுவதைத் தவிர்க்க முடியாது போகும்.

கழிவகற்றல் என்பது ஒவ்வொருவரினதும் கடமையாகும். இதனை உணர்ந்து செயற்பட்டால் மாத்திரமே அதனை வெற்றி கொள்ள முடியும். தென்னிலங்கையில் கழிவகற்றல் முகாமைத்துவம் ஓரளவுக்குப் பேணப்படுகின்றது. அங்கு உள்ளவர்கள் தங்களுடைய குழந்தைகளுக்கு குப்பை களை உரிய முறையில் போடுவது குறித்து சரியாகப் பழக்கப்படுத்துகின்றனர். மாணவர்களிடையேயும் சரியான விழிப்புணர்வூட்டல் வளர்ச்சி பெற்றுள்ளது. இவ்வாறு சிறு வயதிலிருந்தே கழிவகற்றல் முறைகள் பற்றி பழக்கப்படுத்தல் வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் விழிப்புணர்ச்சி ஏற்படாது. - என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் வட மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வட மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி திணைக்கள அதிகாரிகள், பிரதேச சபை தவிசாளர்கள், செயலாளர்கள் எனப் பலர்கலந்து கொண்டனர். (ஐ-55)

## இணையத்திற்கு புதிய நிர்வாகிகள்

கிளிநொச்சி, பெப்.24
கிளிநொச்சி அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்துக்குப் புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 20 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் கிளிநொச்சி சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலைய மண்டபத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினரின் கலந்துரையாடலும், புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம்பெற்றன.

இதன்போது சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தைச் சேர்ந்த ரி.தேவதாஸ், தலைவராகவும், சேவாலங்கா மன்றத்தைச் சேர்ந்த த.ஜெயதீபன் உப தலைவராகவும், மகா சக்தி பெண்கள் அமைப்பைச் சேர்ந்த எஸ்.சுகந்தி செயலாளராகவும், மனிதாபிமான புனர்வாழ்வுச் செயற்பாடுகளுக்கான தேசிய சங்கத்தைச் சேர்ந்த செல்வி.வ.தவமலர் உப செயலாளராகவும், பொருளாளராக ஏ.ஆர்.அன்ரோசியசும், நிர்வாக சபை உறுப்பினர்களாக சு.றமணதாஸ், உ.நிதர்சன் ஆகியோ..ரும் தெரிவு செய்யப்பட்டனர். (க-18)

## தேசிய தொழிற் தகைமைக்குரிய புதிய கற்கை நெறிகள் ஆரம்பம்

### முல்லைத்தீவு மாவட்டத்தில்

முல்லைத்தீவு, பெப்.24
முல்லைத்தீவு மாவட்டத்தில் தேசிய தொழிற் தகைமைக்குரிய சான்றிதழ்களைப் பெறுவதற்கான கற்கை நெறிகள் ஆரம்பமாகவுள்ளன.

எதிர்காலத்தில் அரச, தனியார், வெளிநாடு கூட்டுறவுத் துறைகளில் வேலை வாய்ப்பைப் பெறும்பொருட்டு தொழில் வழங்குநர்களால் எதிர்பார்க்கப்படும் தேசிய தொழிற் தகைமைச் சான்றிதழ்களைப் பெறும் பொருட்டு இந்தப் புதிய கற்கை நெறிகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆரம்பமாகவுள்ளன.

இந்த வகையில் பாலி நகரில் தகவல் தொழில்நுட்பம், தையற் கலை, வீட்டு மின் இணைப்பு ஆகிய கற்கை நெறிகளும், ஒட்டுசுட்டானில் தகவல் தொழில்நுட்பம், தையற்கலை ஆகிய கற்கை நெறிகளும் இடம்பெறவுள்ளன. மேலும், முல்லைத்தீவு தொழில்நுட்ப வளாகத்தில் தொடர்பாடல் தொழில்நுட்பம், கணினி வன்பொருள் தொழில்நுட்பம், பெண்களுக்கான அழகுக் கலை, சிகை அலங்காரம், தையற்கலை, ஓட்டோ திருத்துநர் பயிற்சி, அலுமினியக் கட்டுமானம், வீட்டு மின்னிணைப்பு, நீர்க்குழாய் பொருத்துதல், இயந்திர திருத்தம் ஆகிய கற்கை நெறிகளும் ஆரம்பமாக உள்ளன.

மேற்படி கற்கை நெறிகள் அரச சார்பற்ற நிறுவனங்களின் வலுவூட்டலுடன் சிறப்பாக நடைபெறவிருப்பதால் ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் "உதவிப் பணிப்பாளர், மாவட்ட தொழிற் பயிற்சி நிலையம் மாங்குளம் வீதி, முல்லைத்தீவு" எனும் முகவரிக்கு நேரில் அல்லது தபால் மூலம் தங்களது பெயர், முகவரி, தொலைபேசி இலக்கங்களை வழங்குவதன் மூலம் இணைந்து கொள்ள முடியும். அல்லது 0710318989 எனும் இலக்கத்துக்கு தமது பெயர், முகவரியுடன் கற்க விரும்பும் கற்கை நெறியையும் குறும் தகவல் மூலம் பதிவு செய்ய முடியும்.

இவ்வாறு இலங்கை தொழிற் பயிற்சி நிலையத்தின் முல்லைத்தீவு மாவட்டப் பணிமனையின் உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (க)


# வடபகுதி வீதிகளில் விசேட நடைபாதைகள்

## விழிப்புலன் இழந்தவர்கள் சங்கத் தலைவர் கோரிக்கை

கிளிநொச்சி, பெப். 24
வட மாகாணத்தில் அமைந்துள்ள வீதிகளில் விழிப்புலன் பாதிக்கப்பட்டவர்கள் வீதியைக் கடப்பதற்கு ஏற்ற வகையில் விசேட நடைபாதைகளை அமைக்குமாறு வன்னிப் பிரதேச விழிப்புலன் அற்றோர் சங்கத் தலைவர் எஸ்.ரூபராஜ் சமூக சேவைகள் அமைச்சருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் கண் பார்வையற்றோர் கடவையை இனங்கண்டு வீதியைக் கடக்கக்கூடிய விசேட மாபிள் பதிக்கப்பட்ட நடைபாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் வட மாகாணத்தில் புதிதாகப் பல வீதிகள் அமைக்கப்பட்டு வருகின்றபோதிலும் கண் பார்வையற்றோர் வீதியைக் கடக்கக் கூடிய வகையில் நடைபாதைகள் அமைக்கப்படவில்லை.

ஓமந்தை தொடக்கம் காங்கேசன்துறை வரையில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் புகையிரத நிலையங்களில் கண் பார்வையற்றோருக்கென விசேட நடைபாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் தினமும் பெருமளவு வாகனங்கள் பயன்படுத்தும் வீதிகளில் கண் பார்வையற்றோருக்கான விசேட நடைபாதைகளை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது. (க-9)



வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் மாயவனூர் புழுதி ஆற்றுப் பகுதியில் ஆய்வுகளை மேற்கொள்கின்றனர். (க-18)

## சிவில் அமைப்புக்களின் ஒன்றுகூடல்

கிளிநொச்சி, பெப்.24
கிளிநொச்சி சிவில் அமைப்புக்களின் ஒன்று கூடல் நிகழ்வு கடந்த 22 ஆம் திகதி இடம் பெற்றுள்ளது.

இதன்போது கிளிநொச்சி நகரில் பஸ் நிலையம் அமைக்கப்படாமை, நூலகத்தின் விஸ்தரிப்புப் பணிகளை மேற்கொள்ளல், கரைச்சிப்பிரதேச சபையை நகர சபையாக உயர்த்துதல் என்பன தொடர்பாக ஆராயப்பட்டது.

மேலும், நகரில் இணைய தலைமுறையினரிடையே அதிகரித்து வரும் மது, புகை என்பவற்றின் பாவனை தொடர்பாகவும் கருத்துக்கள் பரிமாறப்பட் டன.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மாற்று வலுவுள்ளோரின் தேவைகளை இனங்கண்டு உதவி செய்தல், கிளிநொச்சி நகரில் மலசல கூடங்களை அமைத்தல் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

மேலும் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்ற நகரிலுள்ள வீதிகளைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கும் படியும் வேண்டுகோள் விடுக்கப்பட்டன.

மேலும் பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் இந்த ஒன்று கூடலின்போது கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. (க-18)

## முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு கிளிநொச்சியில் பராமரிப்பு நிலையம்

### மாற்று வலுவுள்ளோர் சம்மேளனம் வேண்டுகோள்

கிளிநொச்சி நகரில் முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கான பராமரிப்பு நிலையமொன்றை அமைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட மாற்று வலுவுள்ளோர் சம்மேளனத் தலைவர் தி.சிவமாறன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கிளிநொச்சியில் கடந்த 22 ஆம் திகதி நடைபெற்ற சிவில் சமூகப் பிரதிநிதிகளின் ஒன்று கூடலின்போது அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாற்று வலுவுள்ளோரில் 200 பேர் முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டதால் பெரும் அவலங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இவர்களைப் பராமரிக்கும் பொருட்டு கிளிநொச்சி நகரில் ஒரு பராமரிப்பு நிலையத்தை அமைக்குமாறு அவர் வேண்டுகோள் விடுத்தார். (க-18)

## மாந்தை கிழக்கில் வீதிகளின் அவலம்

மீளக்குடியமர்வு நடைபெற்று நான்கு ஆண்டுகள் கடந்த நிலையிலும் மாந்தை கிழக்கின் ஒரு சில வீதிகளை தவிர ஏனைய வீதிகள் புனரமைக்கப்படாத நிலையிலேயே இன்னமும் காணப்படுகின்றன. இதனால் நட்டாங்கண்டல் மருத்துவமனை, மாந்தை கிழக்கு பிரதேச செயலகம் ஆகிய இடங்களுக்குச் செல்லும் மக்கள் தினமும் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் மீளக் குடியமர்வின் பின்னர் விநாயகபுரம் கிராமத்தில் மட்டுமே நெல்சிப் திட்டத்தின் கீழ் பிரதேச சபையால் ஒரு வீதி மட்டுமே புனரமைக்கப்பட்டுள்ளது. ஏனைய வீதிகள் பலவும் மோசமான நிலையிலேயே காணப்படுகின்றன. வீதிகள் புனரமைக்கப்படாமை தொடர்பாக அண்மையில் இடம்பெற்ற பிரதேச செயலகத்தின் அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் சுட்டிக்காட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## மன்னார் உணவகங்களின் உரிமையாளர்களுடன் கலந்துரையாடல்

மன்னார், பெப். 24
மன்னார் நகர சபைப் பிரிவுக்குட்பட்ட உணவகங்களின் உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் மன்னார் நகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்னார் நகர சபையும், மன்னார் சுகாதாரத் திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த குறித்த கலந்துரையாடலின்போது உணவகங்களின் உரிமையாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**உணவகங்களில் உள்ள உணவுப் பொருள்களின் சுகாதாரம், பாதுகாப்பு உணவுப் பொருள்களைக் கையாளும் விதம் குறித்து தெளிவுபடுத்தப்பட்டது.**

இதன்போது உணவகங்களில் உள்ள உணவுப் பொருள்களின் சுகாதாரம், பாதுகாப்பாக உணவுப் பொருள்களைக் கையாளும் விதம் குறித்து தெளிவுபடுத்தப்பட்டது.

மேலும் உணவகங்களைத் தரப் படுத்தும் முகமாக உணவக உரிமையாளர்கள் முன்னெடுக்கப்பட வேண்டிய விடயங்கள் குறித்தும் எடுத்துக் கூறப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.என்.கில்றோய் பீரிஸ், மன்னார் நகர சபைத் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம், உப தலைவர் ஜேம்ஸ் ஜேசுதாஸ், மன்னார் நகர சபைச் செயலாளர் பிரிட்டோ லெம்பேட் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (க-56)

# 'தேசத்தின்மகுடம்' கண்காட்சியில் தமிழர் பாரம்பரியம் கூறும் சுவடு

கல்முனை,பெப்.24

தமிழர் பாரம்பரியம் கூறும் கூத்துக்களரி, தோரணம், அறிவையும், திறனையும் வெளிப்படுத்தும் சுவடுகள் மற்றும் கலைத்திறன் சார்ந்த பொருள்கள் குளியாப்பிட்டியில் திறந்து வைக்கப்படவுள்ள இலங்கையில் 8 ஆவது தடவை நடைபெறும் தேசத்தின் மகுடம் கண்காட்சி காட்சிக் கூடத்தில் காட்சிப்படுத்தப்பட உள்ளன என்று கிழக்கு பல்கலைக் கழகத்தின் நுண் கலைத்துறைப்பீடம் தெரிவித்துள்ளது.

தேசத்தின் மகுடம் கண்காட்சியில் கிழக்கு பல்கலைக்கழகத்தின் நுண் கலைத்துறையினரின் சமூக நிலைப்பட்ட மாணவர் மைய கல்வி செயற்பாட்டின் முன்னெடுப்பில் தெரிவு செய்யப்பட்ட விடயங்கள் காட்சிக் கூடமாக தயார் செய்யப்பட்டு வருகின்றது.

இதனை கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், பாடசாலை மாணவர்கள், அதிபர்கள், கலைஞர்கள் அனைவரும் இணைந்து தயார்படுத்திக்கொண்டு வருகின்றனர் என்று கிழக்கு பல்கலைக் கழகத்தின் நுண்கலைத்துறை பீடம் தெரிவித்துள்ளது.

தேசத்தின் மகுடம் கண்காட்சி குருநாகல் மாவட்டத்தில் குளியாப்பிட்டிய வில் நேற்று வைபவரீதியாகத் திறந்து விடப்பட்டு எதிர்வரும் 28 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-32)



கிழக்கு பல்கலைக் கழகத்தின் நுண்கலைத்துறைப்பீடத்தால் தெரிவு செய்யப்பட்ட பொருள்கள் தேசத்தின் மகுடம் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டன.



கிண்ணியா நகரசபை நகரபிதா ஹில்மி மஹ்ரூப், சுகாதார வைத்திய அதிகாரி றிஸ்வி ஆகியோர் சிரமதானத்தில் ஈடுபட்டனர்.

# நியமனம் வழங்குவதில் திட்டமிட்ட இனப்பாகுபாடு

## கல்முனை மாநகரசபையின் எதிரணித் தலைவர் குற்றச்சாட்டு

கல்முனை,பெப்.24

கல்முனை மாநகர சபையில் பத்தாண்டுகளுக்கு மேல் சாரதிகளாக பணிபுரிந்த அமைய ஊழியர்களை ஒதுக்கிவிட்டு இரண்டு வருடத்துக்குள் சாரதியாக தற்காலிக நியமனம் பெற்றவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது திட்டமிட்ட இனப் பாகுபாடாகும் என்று கல்முனை மாநகர சபையின் எதிரணித் தலைவர் அ.அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

கல்முனை மாநகர சபையால் புதிதாக நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டு வருகின்றது. அதனடிப்படையில் பத்து வருடங்களுக்கு மேலாக தற்காலிகமாக சேவைசெய்து வந்த ஊழியர்களுக்கு நியமனம் வழங்காமை தொடர்பாக பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் மாநகர சபையின் எதிரணித் தலைவரிடம் முறையிட்டுள்ளனர்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கல்முனை மாநகர சபையில் பத்தாண்டுகளுக்கு மேலாக அமைய அடிப்படையில் தொழில் புரிந்து வந்த தொழிலாளர்களுக்கு தற்போது நிரந்தர நியமனத்தை வழங்காமல் இரண்டு வருடத்துக்குள் அமைய ஊழியர்களாக வேலையில் இணைத்துக் கொள்ளப்பட்டவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது எந்தவிதத்தில் நியாயமாகும்.

ஏற்கனவே பல வருடங்களாக மாநகர சபையில் சாரதிகளாக வேலை செய்தவர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டதன் பின்னரே ஏனையவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட வேண்டும்.

அதுதான் நியதி. அதனை கருத் தில் கொள்ளாது புதிதாக இணைக் கப்பட்டவர்களுக்கு நிரந்தர நியம னம் வழங்குவது எந்த விதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

நியமனங்களை வழங்குகின்ற போது இன விகிதாசாரத்துக்கு ஏற்றாற்போல் நியமனங்களை வழங்கினால் எந்தவிதமான பிரச்சினையும் ஏற்படப் போவதில்லை.

அதை விடுத்து தங்களது இனத்துக்கு மாத்திரம் மையப்படுத்தி சேவைசெய்ய வேண்டும் என்று நினைத்தால் எதிர்காலத்தில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் வீதியில் இறங்கி போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவார்கள் - என்றார். (ச-31)

# தொற்று நோய்களால் அதிகமானோர் பாதிப்பு

## ஆய்வு மூலம் கண்டறிவு

கிண்ணியா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு மற்றும் தனியார் மருத்துவமனைகளுக்கு சிகிச்சைகளுக்காகச் செல்வோர்களில் 60 வீதத்துக்கும் அதிகமானோர் தொற்றுநோய்களால் பீடிக்கப்பட்டவர்கள் என்று ஆய்வு மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

தற்போதைய ஆய்வுகளுக்கு அமைய டெங்கு நோய் பரவும் வீதம் அதிகரித்துள்ளது.

அரசும் டெங்கு நோய் பரவும் வகையில் சுற்றுப்புறச் சூழலை வைத்திருப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதோடு 25 ஆயிரம் ரூபா வரை அபராதமும் விதிப்பதாகத் தெரிவித்துள்ளது.

டெங்குநோய் பரவும் நிலையை கருத்தில் கொண்டு கிண்ணியா பிரதேசத்தை சுத்தமாக வைத்திருக்கும் நோக்குடன் ஹிஜ்ரா வீதிகள், அப்பிரதேச வடிகால்கள் சிரமதானத்தின் மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளன. கிண்ணியா நகரசபை நகரபிதா ஹில்மி மஹ்ரூப், சுகாதார வைத்திய அதிகாரி றிஸ்வி சிரமதானத்தில் ஈடுபட்டனர். (ச)

# சூதாடிய 4 பேர் கைது

மட்டக்களப்பு,பெப்.24

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மகிழூர் கிராமத்தில் சட்டவிரோதமாக சூதாட்டத்தில் ஈடுபட்ட நால்வரை களுவாஞ்சிக்குடி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தமக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்தே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் கூறினர்.

இந்த நபர்களை விசாரணையின் பின்னர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.





அருள்மிகு ஸ்ரீ நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வர சுவாமி திருக்கோயில்
கைலாயவாகனத் திருவிழா 11 ஆம் நாள் இன்று (24.02.2014)திங்கட்கிழமை

"பதினொரு தினங்களாகப் பக்தி மனதுடனே
கதி நீயே என்று உன்னடி நாடியோர்க்கு
சதிபதியாய் நீயின்று கையிலாய வாகனத்தில்
வீதியுலா வந்து அருளிடுவாய் அன்பர்க்கு"

அனுசரணை:
பதினொராம் திருவிழா உபயகாரர்களும்
கீரிமலை நகுலேஸ்வர ஆதீனகர்த்தாவும்.
சி/12101(2-6-3)


# நச்சுத்தன்மை கொண்ட உணவு வகைகளை உற்பத்தி செய்வதில் கிழக்கு முதலிடம்

## மாவட்ட சுற்றாடல் ஆணையாளர் கூறுகிறார்

மட்டக்களப்பு,பெப்.24

இலங்கையிலே அதிகூடிய நச்சுத்தன்மை கொண்ட உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யும் மாகாணங்களில் முதல் இடத்தை கிழக்கு மாகாணம் பெற்றுள்ளது.

அதில் மட்டக்க ளப்பு மாவட்டம் முதல் நிலை பெறு கின்றது என்று மாவட்ட சுற்றாடல் ஆணையாளர் நௌபர் அலி கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தெற்காசியாவிலே புற்று நோயாளர்களின் எண்ணிக்கை அதிகமானதாகவும் அதிலும் குறிப் பாக வட,கிழக்கு மாகாணங்களிலே அதிகமாக இந்த நோயுள்ளவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகூடிய புற்று நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதுவரைக்கும் இனங் காணப் படாமல் அதிகமானோர் இன்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழ்கின்றனர்.

இந்த மாவட்டத்திலே உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் அனைத்திலும் அதிகமான அளவில் நச்சுப்பொருள்கள் சேர்ந்திருப்பதனால் தான் இந்த நோய்கள் இலகுவாக மக்களைச் சென்றடைகின்றது- என்றார். (ச-31)


பாராட்டி வாழ்த்துகின்றோம்




சீ. இராஜவரோதயம்
BA (Hons), Dip in Ed, MEd,
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்
சமூகவிஞ்ஞானம், வலயக்கல்வி
அலுவலகம், வலிகாமம்.
இன்று (24.02.2014) தனது கல்விப்பணியில்
01.01.1991 முதல் 23 வருடங்கள் ஆசிரிய
ஆலோசகராய் எமது வலயத்தில் கடமையாற்றி
ஓய்வுபெறும் எமது பேராசானை அகவை
அறுபதில் இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துக்களுடன்
சீரும் சிறப்புடனும் இனிதே வாழ
உளங்கனிந்து வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
சமூக விஞ்ஞானபாட ஆசிரியர்கள்
வலிகாமம், கல்வி வலயம்.
(45016) (45.0)





திருவருள்மிகு நவாலியூர் களையோடைக் கண்ணகை அம்மன் ஆலய

## சங்காபிஷேக சிறப்பு நிகழ்வுகள்

எதிர்வரும் 26.02.2014 புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு எம்பெருமாட்டிக்கு விசேட பூசை நிகழ்வுகளைத் தொடர்ந்து, ஈழத்தின் தலை சிறந்த தவில் நாதஸ்வரக் கலைஞர்களின் இன்னிசை கானமழையில் நனைந்திட அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். தொடர்ந்து இரவு 9.00 மணிக்கு வசந்தமண்டபப் பூசைகள் நடைபெற்று அம்பாள் அழகிய பூந்தண்டிகையிலே தவில் நாதஸ்வரங்கள் முழங்க, தென்னிலங்கையிலிருந்து விசேடமாகத் தருவிக்கப்பட்ட விசேட வானவேடிக்கைகளுடன் வெளிவீதி வலம் வந்து அடியார்களுக்குக் காட்சியளிப்பார். அவ்வேளைகளிலே அம்பிகை அடியார்கள் ஆசாரசீலர்களாக வருகைதந்து எம்பெருமாட்டியின் இஷ்டசித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஈழத்தின் தலைசிறந்த தவில் நாதஸ்வரக் கலைஞர்களின் கச்சேரி

ஒலி அமைப்பு :
செல்லம்ஸ் சவுண்ஸ் - பண்டத்தரிப்பு
சஜீவன் சவுண்ஸ் - நவாலி

ஒளி அமைப்பு :
மதி லைற் - பண்டத்தரிப்பு

தென்னிலங்கையிலிருந்து விஷேடமாகத் தருவிக்கப்பட்ட
விஷேட வானவேடிக்கை நிகழ்வுகள் நடைபெறும்.

25.02.2014இல் வெளிவரும் சிறப்பு மலரில் தவில், நாதஸ்வரக் கலைஞர்களின் விபரம் பிரசுரிக்கப்படும்.

களையோடை, நவாலி. திருப்பணிச் சபையினர்

# குடிதண்ணீர் வழங்க விசேட செயற்றிட்டம்

## தேசிய நீர் வழங்கல் சபை நடவடிக்கை

கொழும்பு,பெப்.24


குடிதண்ணீர் தட்டுப்பாடு நிலவும் பகுதிகளுக்கு பவுசர்கள் மூலம் நீர் விநியோகிப்பதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபை தெரிவித்துள்ளது..

களுத்துறை மாவட்டத்துக்கு குடிதண்ணீர் விநியோகிப்பதற்காக 10 பவுசர்கள் அனுப்பப்பட்டுள்ளன என்று சபையின் பொது முகாமையாளர் ரஞ்சித் பாலசூரிய தெரிவித்தார்.

கண்டி மாவட்டத்தில் நிலவும் நீர்தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் பொருட்டு 6 குடிதண்ணீர் பவுசர்களும், ஊவா மாகாணத்துக்கு 8 பவுசர்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று அவர் கூறினார்.

இதேவேளை, அனுராதபுரம் மாவட்டத்துக்கு பவுசர்கள் மூலம் குடிதண்ணீர் விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வறட்சியால் நீரை பயன்படுத்துவது தொடர்பில் அவதானத்துடன் செயற்படுமாறு அவர் மக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளார். (ச)



குளியாப்பிட்டியில் நடைபெற்று வரும் தேசத்துக்கு மகுடம் கண்காட்சித் திடலில் அமைக்கப்பட்டுள்ள காட்சிக் கூடத்துக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சென்று பார்வையிட்டார்.

# விபத்தில் அமைச்சர் காயம்

கொழும்பு,பெப்.24

கல்விச் சேவைகள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க வாரியபொல, பாதெனிய என்னும் இடத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இடம்பெற்ற விபத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் அவருடைய பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளன.

குருநாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அமைச்சர், தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் என்று பொலிஸார் கூறினர். (ச)

# பேஸ்புக்கைத் தடை செய்ய ஆராய்ந்து வருகிறது அரசு

## திஸ்ஸ கரலியத்த தெரிவிப்பு

கொழும்பு,பெப்.24

பேஸ்புக்கை தடை செய்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது என்று சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பேஸ்புக் சமூக வலையமைப்பு மற்றும் இணையத்தை பிழையாக பயன்படுத்துவதனால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

நாட்டின் இளைய தலைமுறையினரைப் பாதுகாக்கும் நோக்கில் பேஸ்புக்கை தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

ஆபாச இணையத் தளங்களை முடக்குவதற்கு ஏற்கனவே தொலைதொடர்பு கட்டுப்பாட்டு ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



திஸ்ஸ கரலியத்த

அண்மையில் பேஸ்புக் பயன்படுத்திய இரு மாணவியர் தமது உயிரை மாய்த்துக் கொண்டுள்ளனர்.

எனவே இவ்வாறான சம்பவங்களைக் கருத்தில் கொண்டு பேஸ்புக் பயன்பாட்டை தடை செய்வது குறித்து ஆராயப்பட்டு வருகிறது -என்றார். (ச)

# அமெரிக்க தீர்மானத்தை 23 நாடுகள் ஆதரிக்கும்

## ஆங்கில ஊடகம் தகவல்

கொழும்பு,பெப்.24

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா இந்த முறை கொண்டு வரும் தீர்மானத்தை 23 நாடுகள் ஆதரிக்கும் என்று உலகத் தமிழர் பேரவை தெரிவித்துள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

அமெரிக்கத் தீர்மானம் ஐ.நா மனிதஉரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும்.

இந்தியாவும் கூட இலங்கைக்கு எதிராக வாக்களிக்கும். இலங்கைக்கு எதிராக வாக்களிக்கும்படி தாம் தொடர்ந்து பரப்புரைகளை முன்னெடுப்பதாகவும், உலகத் தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு எதிராக, செக் குடியரசு, எஸ்தோனியா, மொன்ரெனிக்ரோ, ருமேனியா, ஒஸ்ரியா, பிரான்ஸ், ஜேர்மனி, அயர்லாந்து, இத்தாலி, பிரிட்டன், அமெரிக்கா, தென்கொரியா, இந்தியா, பெரு, ஆர்ஜென்ரீனா, பிறேசில், சிலி, கோஸ்டாரிக்கா, சியராலியோன், ஐவரிகோஸ்ட், பெனின், மெக்சிகோ, மசிடோனியா ஆகிய 23 நாடுகள் வாக்களிக்கும்.

எதிர்காலத்தில், நடுநிலையாளர்களாகத் தாம் பங்கேற்பதானால், தாம் நடுநிலையாக இருக்க வேண்டும் என்பதற்காக தென்னாபிரிக்கா வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் தவிர்க்கலாம்.

ஆனால், 2011 ஆம் ஆண்டில் ஐ.நா நிபுணர்குழுவின் அறிக்கை வெளியான போது, ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ், அனைத்துலக விசாரணைக்கு ஆதரவு தெரிவித்திருந்தது.

வரலாற்றுப் பின்னணியின் அடிப்படையிலும், அண்மைய நிலவரங்களின் அடிப்படையிலும், இலங்கைக்கு ஆதரவாக ரஷ்யா, சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், வியட்னாம், குவைத், மாலைதீவு, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, சீனா, கொங்கோ, கியூபா, வெனிசுவேலா ஆகிய 13 நாடுகள் அமெரிக்கத் தீர்மானத்தை எதிர்த்து வாக்களிக்கலாம் என்று கருதப்படுகிறது.

ஜப்பான், கசாக்ஸ்தான், கென்யா, எதியோப்பியா, பொட்ஸ்வானா, புர்கினாபாசோ, காபோன் உள்ளிட்ட 8 நாடுகள் வாக்கெடுப்பின் போது நடுநிலை வகிக்கும். இரண்டு நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாது என்று உலகத் தமிழர் பேரவை தெரிவித்துள்ளது. (ச)

# கஞ்சா பயிரிட்ட இருவர் கைது

கொழும்பு,பெப்.24

யால வனத்தில் கஞ்சா பயிரிட்ட இரண்டு நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

திஸ்ஸமஹாராம, அம்பாந்தோட்டை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து 72 கிலோகிராம் கஞ்சா மற்றும் ஒரு துப்பாக்கி என்பவற்றை அதிரடிப்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் திஸ்ஸமஹாராமப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
100%சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்
PACKED BY:
ROYAL Industries
Colombo 12. T.P 0777 2776 70




ஏக விநியோகஸ்தர்கள்:
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P.021 222 2567

100% டெக்றோஸ் மொனோஹைட்றேட் (Dext rose Monohydrate) அடங்கிய சர்வதேச தரத்திற்கு நிகரான றோயல் குளுக்கோஸ் (100g) மிகக் குறைந்த விலையான ரூபா 37/= இங்குச் சந்தையில் கிடைக்கும்போது ஏன் மற்றைய குளுக்கோஸுக்கு அதிகவிலை கொடுக்கவேண்டும்?
இலவசம்
அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!
எம்மிடம் 24 டசின் றோயல் குளுக்கோசினைக் கொள்வனவு செய்து 1000 ரூபா பெறுமதியான அழகிய வர்ண ரீ - சேட் ஒன்றினை முற்றிலும் இலவசமாகப் பெற்றுக்கொள்ளவும்.

வீடுகள், அலுவலகம், காட்சியறை மற்றும் தொழிற்சாலைகள்
CCTV
Security Camera Solutions
Catch Them!
உங்கள் பாதுகாப்பே ....
எங்கள் சேவை..
நாம் 16 வருட சேவையில்



ஒரே கூரையின் கீழ் எமது சேவைகள்.
* Computer Network & Maintenance, Internet, Router, ADSL Setup
* Computer, Printer, Laptop, UPS, LED & LCD Monitor Repair.
MICRO PC SYSTEMS
வெள்ளவத்தை:-115C, W.A Silva Mw,077-3963274, யாழ்ப்பாணம்:-218,Hospital Rd 0773126712, வவுனியா:-73, 2nd Cross St,077-3963284 நெல்லியடி:-Kodikamam Rd, 077-3039536, கிளிநொச்சி:-A9 Road Opposit of கச்சேரி, 077-3963278, 235, Main St (Opposit of Vasharan Hardware, 0777-425973

வவுனியாவில்
FRENCH/GERMAN வகுப்புக்கள்
பிரபல ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது.
ஆரம்பம்-26.02.2014 3.30 p.m
SUN BRITISH COLLEGE
024 222 6649/077 971 3221

ஆள்கள் தேவை
கொழும்பில் உள்ள எமது நிறுவனத்திற்கு Dish Antenna பிற்றிங் செய்யத்தெரிந்த அல்லது பழகி வேலை செய்யவிருப்பமுள்ளவர்கள் மற்றும் எலக்ரோனிக்ஸ் பொருள்கள் (றிசீவர்கள்) திருத்தம் செய்யத் தெரிந்த Technician ஆகியோர் உடன் தேவை. தங்குமிடம், உணவு வசதி செய்து தரப் படும். திறமைக்கேற்ப சம்பளம் மற்றும் இதர கொடுப் பனவுகள் கிடைக்கும்.
* சிங்கள / ஆங்கில அறிவு
* விற்பனை அனுபவம்
* சாரதி அனுமதிப்பத்திரம் என்பன மேலதிக தகுதியாகக் கருதப்படும்.
உடன் தொடர்பு கொள்ளவும்.
Sats-Tech Engineer's (Pvt) Ltd
KUMAR- 077 771 0785

வேலை வாய்ப்பு
L.M.&.A. Insurance Brokers & Consultants (Pvt) Ltd. இன் யாழ் கிளையில், காப்புறுதிப் பிரதிநிதிகளாக இணைந்து கொள்வதற்கு பாடசாலைக் கல்வியை முடித்துக் கொண்டவர்கள் மற்றும் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.



தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு காப்புறுதித் துறையில் சகல பயிற்சிகளும் அளிக்கப்படுவதுடன், பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்து தெரிவு செய்யப்பட்டவர்கள் கவர்ச்சிகரமான மாத ஊதியத்துடன் நிரந்தரமாக இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.
பயிற்சிக் காலத்தில் மாதாந்தம் ரூபா 5000/- படி வழங்கப்படும். ஆர்வமுள்ளவர்கள் உங்கள் விண்ணப்பங்களை,
பொதுமுகாமையாளர்
L.M.&.A. Insurance Brokers & Consultants (Pvt) Ltd.
74, 1/1 கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு 2014 மாசி 28ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவும்.
T.P : 021 221 9743

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வன்னி மாவட்டத்தில் அதிகாரம் அரச அதிகாரிகளிடமா அல்லது ... ?

வீடுகளில் பெண் பிள்ளைகளை வைத்திருக்க முடியாத நிலை தோற்றுவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தின் சில பிரதேசங்களில் , பகுதிகளில் இந்த நிலை உருவாகி வருவதாக குறிப்பிட்ட இடங்களைச் சேர்ந்த பெற்றோர்கள் இவ்வாறு முறையிட்டுள்ளனர்.

அந்தப் பிரதேங்களில் (மாயவனூர், வட்டக்கச்சிப் பகுதிகளில்) வீதிகளில் செல்லும் யுவதிகளை மறித்து , அவர்களின் பெயர், விலாசங்கள் குறித்த விவரங்களை படைத்தரப்பினர் பெற்றுச்செல்வதாகவும், இராணுவத்தில் இணையுமாறு வற்புறுத்துவதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

இது குறித்து வடக்கு முதலமைச்சர் மற்றும் விவசாயத்துறை அமைச்சர் ஆகியோரிடம் அப்பிரதேச மக்கள் முறையிட்டதோடு, அச்செயலைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கோரி உள்ளனர்.

எனினும், கிளிநொச்சி மாவட்ட இராணுவத் தளபதி இந்தத் தள நிலையை மறுத்துள்ளார். இராணுவத்தில் எவரையும் வலுக்காட்டாயமாக இணைத்துக் கொள்ளவில்லை - என்று அவர் திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

சுய விருப்பின் பேரிலன்றி, கட்டாயப்படுத்தி எவரையும் இராணுவத்தில் சேர்ப்பதில்லை ; சேர்க்கவில்லை என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாகத் தெரிவித்திருக்கிறார் அவர். இராணுவத்தில் கட்டாயமாக சேர்க்கும் செயற்பாடு எதுவும் நடைபெற்றால், தம்மிடம் நேரடியாக முறைப்பாடு செய்யலாம் அல்லது குறிப்பிட்ட பிரதேச பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யலாம் என்றும் மாவட்ட இராணுவத் தளபதி கனதியுடன் தெரிவித்துள்ளார்.

எனினும், இந்த விவகாரம் எந்தளவுக்கு பாரதூரமானது என்பதனைக் கருத்தில் கொண்டு இதனைத் தடுத்து நிறுத்தும் பொறுப்பில், மாகாண சபைக்கும் வகிபாகம் உண்டு.

அரச தரப்பில் உள்ள வெற்றிடங்களுக்கு தகுதி உடையவர்களை நியமிப்பதற்கான படிமுறைகளின் பிரகாரமே, இராணுவத்துக்காயினும் சிவில் பாதுகாப்புப் பிரிவுக்காயினும் ஆட்சேர்ப்பு நடத்தப்பட வேண்டும்.

சிலருக்கு வேலை வாய்ப்பு வழுங்குவதற்காகவோ, அல்லது அவசர தேவை என்ற முத்திரையின் கீழோ, உரிய பிரமாணங்களைக் கருத்தில் கொள்ளாமல், அரச அலகு ஒன்று ஆட்சேர்ப்புச் செய்வது, ஜனநாயக ஆட்சிக்கு முற்றிலும் விரோதமானதே.

இதனைக் கருத்தில் கொள்ளாமல், கணக்கில் எடுக்காமல் அரசாங்கம் - அதன் பிரதான அலகுகளில் ஒன்றான படைத்தரப்பு - செயற்படுவதாயின் அது அரசின் சர்வாதிகாரத்தை நாடிய - தாம் நினைக்கும், திட்டமிடும் எதனையும் செயற்படுத்தலாம் என்ற போக்கன்றி, வேறல்ல. மக்கள் நலன் நாடிய செல்நெறி என்றேனும் இதற்கு நாமம் சூட்ட இயலாது.

இதேவேளையில், முல்லைத்தீவு மாவட்டத்தில், இருபது வயதுக்கும் முப்பது வயதுக்கும் உட்பட்ட வேலையற்ற இளைஞர்,யுவதிகளின் பெயர்கள் அரசினால், அதன் சார்பில் இராணுவத்தினரால் உத்தியோகபூர்வமாகத் திரட்டப்பட்டு வருகின்றன.

வேலை வாய்ப்பற்று இருப்போரினதும், ஏனையோரினதும் விவரங்கள் கிராம சேவையாளர்கள் ஊடாக தனித்தனியே திரட்டப்பட்டுக் கடந்த சில நாள்களாகப் பதிவு செய்யப்படுகின்றன.

எந்த நோக்கத்தை நாடி மேற்போந்த விவரங்கள் திரட்டப்படுகின்றன என்பது குறித்து அங்கு பணி புரியும் அரச அதிகாரிகளுக்கும் தெரியவில்லை!

கடந்த சில நாள்களாக நடந்தேறும் இந்தச் செயற்பாடு, முல்லைத்தீவு மக்களையும் பெரும் குழப்பத்தில் ஆழ்த்தி உள்ளதுடன் பெரும் "மர்மம்" ஆகவும் அமைந்துள்ளது.

மொத்தத்தில் வன்னி மாவட்டத்தில் அதிகாரம் அரச அதிகாரிகளிடமா அல்லது இராணுவத்திடமா என்பது பெரும் மூடு மந்திரமாகவே மாறி வருகிறது. இந்நிலை தொடர்ந்தால்..... என்னாகும்...? இந்த நாட்டை ஜனநாயக ஆட்சி நடைபெறும் தேசம் என்று வகுப்பது எவ்வாறு... ?

# கேரள நம்பூதிரிகளை அழைத்து பூஜை புண்ணிய காரியங்கள்

## ஜெனிவா பொறியிலிருந்து தப்பிக்க இப்படியும் முயற்சி

சண்டே ரைம்ஸ் கட்டுரையிலிருந்து - கோகுலன்

அடுத்த மாதம் ஜெனிவாவில் கூடும் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பாக மேற்கு நாடுகள் கொண்டு வரவிருக்கும் தீர்மானத்தில் இருந்து காப்பாற்றும்படி தெய்வங்களின் உதவியை நாடியிருக்கிறார் ஜனாதிபதி ராஜபக்ஷ. நுவரெலியாவில் நடைபெறும் இந்து முறையிலான விசேட பூசை ஒன்றில் கலந்துகொள்ள ஹெலிகொப்டரில் கடந்த வெள்ளிக் கிழமை சென்றடைந்தார். இந்த சமய நிகழ்ச்சியை நடத்தி முடிப்பதற்கு பெரும் பணச் செலவில் கேரளாவிலிருந்து 9 நம்பூதிரி பிராமணர்கள் அழைத்து வரப்பட்டிருந்தனர். கேரளாவிலுள்ள பெரும் தனவந்தர் ஒருவர் இதற்கு ஏற்பாடு செய்திருந்தார்.

ஜெனிவா வெற்றிக்காக நடத்தவிருக் கும் இந்த வேள்வி பூசையில் ஆறுமுகம் தொண்டமான் ஜனாதிபதியையும் கலந்துகொள்ளும்படி கேட்டிருந்தார்.

அதேவேளை அமெரிக்க -பிரிட்டிஷ் அதிகாரிகள் ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மான வாசகங்களை வடிவமைப்பதில் இறங்கியிருக்கிறார்கள். அடுத்த வாரமளவில் மனித உரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளை அம்மையார் சபையில் சமர்ப் பிக்கவிருக்கும் அறிக்கையை அடிப்படையாக வைத்தே மேற்கு நாடுகளின் தீர்மான வாசகம் அமையும் என்று தெரியவந்துள்ளது. நவிப்பிள்ளையால் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளின் ஆவணம் ஒன்று இலங்கை அரசுக்கு அதன் குறிப்பு ரைக்காக அனுப்பப்பட்டிருந்தது. அதற்கு இலங்கை அரசும் தனது குறிப்புகளையும் விளக்கங்களையும் அனுப்பியிருக்கிறது. எதுவானாலும் ஏற்கனவே தெரிவித்துள்ள பரிந்துரைகளில் எந்தவித மாற்றமும் செய்யாமலே சபையில் அவர் தமது அறிக்கையை சமர்ப்பிப்பார் என்று இப்போது தெரியவந்துள்ளது. அவரது அறிக்கை யின் விவரம் அடுத்த வாரம் பகிரங்கப்படுத்தப்பட விருக்கிறது.

அம்மையார் தெரிவித்துள்ள பரிந்துரைகளில் :-

சர்வதேச மனித மற்றும் மனித குலத்துக்கு எதிரான மீறல் குற்றச்சாட்டுக்களை மேற்கொண்டும் புலனாய்வு செய்வதற்கான சர்வதேச விசாரணை பொறி அமைப்பு ஒன்றை நிறுவும்படியும் உள்ளக அளவில் ஏதும் பொறுப்புக் கூறும் செயற்பாடுகள் நடைபெறுமானால் அதனை கண்காணிப்புச் செய்யும்படியும் தெரிவித்துள்ளார். அவர் தெரிவித்துள்ள சர்வதேச பொறி அமைப்பு எதுவாக இருக்க ம்டியும் என்பது இப்பொழுது தீர்மான வாசகத்தை உருவாக்கி வருபவர்களுக்கு ஒரு சிக்கலான கேள்வியாக இருக்கின்றது. இப்பொழுது தீர்மான வாசகத்தை தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளவர்கள் குறிப்பிட்ட அதிகாரங்களைக் கொண்ட சிறப்பு அறிக்கையாளர் ஒருவரை மனித உரிமை ஆணையா ளரின் கீழ் இயங்கும்படியாக நியமிப்பது குறித்துச் சாதகமான கருத்து கொண்டிருப்பதாகத் தெரிகின்றது. அவ்வாறாயின் சர்வதேச விசாரணை என்ற சொல் தீர்மானத்தில் இடம்பெற வேண்டுமா இல்லையா என்பதும் தீர்மானிக்கப்பட வேண்டியிருக்கும். தீர்மானத்துக்கு கூடியஅளவு நாடுகளின் ஆதரவை பெற் றுக் கொள்வதற்கு அதில் இடம்பெறும் சொற்றொடர்களும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். எதுவானாலும் அவ்வா றான சொற்றொடர் ஒன்று தீர்மானத்தில் இல்லாது போனாலும் சர்வதேச விசாரணை ஒன்றை தீர்மானம் கோராமல் விடும் என்று கூறி விடமுடியாது.

தீர்மானத்தின் முகவுரையில் "வெயார் ஏஸ்" (Where as) என்ற சொற்றொடர் பல இடங்களிலும் இடம்பெறுவதானது விசாரணைகள் நடைபெறவேண்டிய அம்சங்களை சுட்டி நிற்பது மட்டுமன்றி அது சர்வதேச தன்மையையும் தெளிவாக எடுத்துக்காட்டுவதாய் இருக்கும்.

நவிப்பிள்ளை அம்மையார் இலங்கை அரசுக்கு 12 வெவ்வேறு பரிந்துரைகளை வழங்கியிருந்தார். வெறுப்புணர்வைத் தூண்டுவது, சாட்சிகளின் பாதுகாப்பு , தகவல் அறியும் உரிமை, வலுக்கட்டாயமாக காணாமற்போகச் செய்வதைக் குற்றச் செயலாக்குவது ஆகியவை தொடர்பாக சட்டங்களை முடிவு செய்க. அவைகளை சர்வதேச தரத்தின் மட்டத்துக்கு நிலைநிறுத்துவதுடன் இருக்கும் சட்டங்களையும் சர்வதேச மனித உரிமை சட்டங்களின் தரங்களுக்கு அமைவாக நிலைநாட்டுக என்று வலியுறுத்தியுள்ளார்.

சிறுபான்மை குழுக்கள், ஊடகங்கள், மனித உரிமை பாதுகாப்பு செயற்பாட்டாளர்கள் மீது தாக்குதல் நடத்துபவர்கள் கைது செய்யப்பட வேண்டும். அவர்கள் மீது வழக்குகள் நடத்தி தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றும் நவிப்பிள்ளை வலியுறுத்தியுள்ளார்.

மனித உரிமை சபை உறுப்பு நாடுக ளின் பிரதிநிதிகள் மத்தியில் அரசுக்குச் சார்பாக பரப்புரைகள் இடம்பெற்றுவரும் அதே சமயம் தென்னாபிரிக்காவுக்குச் சென்று அந்த நாட்டின் உண்மையைக் கண்டறிதல் மற்றும் மீள் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழு தொடர்பான விவரங்களைக் கண்டறிவதற்காக ஒரு குழுவை அரசு அனுப்பி வைத்திருந்தது. அது பற்றி வெளியுறவு அமைச்சு வெளியிட்டிருந்த அறிக்கையில் இலங்கையின் நல்லிணக்கத்துக்கு அந்த நாட்டின் அனுபவம் எந்த வகையில் உதவி புரிவதாக இருக்கும் என்பதை ஆராய் வதே இந்தக் குழுவின் இரண்டு நாள் பயணத்தின் முக்கிய நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

அமைச்சர் சிறிபால டி சில்வா தலைமையிலான இந்தக் குழுவில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பிரதி அமைச்சர் பைசர் முஸ்தபா, வெளிநாட்டமைச்சின் கண்காணிப்பு நா.ம.உறுப்பினர் சஜின் டிவாஸ், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கிழக்கு மாகாண அமைப்பாளர் அருண் தம்பிமுத்து ஆகியவர்கள் இடம்பெற்றி ருந்தார்கள். இந்தக் குழுவினர் பிறிட்டோரியாவில் இருக்கும்போதே அந்த நாட்டின் சர்வதேச உறவுகள் மற்றும் ஒத்துழைப்புக்கான பிரதி அமைச்சர் இப்றாகிம் இப்றாகிம். பி.பி.சி. சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் இலங் கைக் குழுவினரின் தென்னாபிரிக்க பயணம் அவர்களின் கோரிக்கையின் பேரிலேயே இடம்பெற்றது என்று குறிப்பிடப்பட்டிருந்தார்.

எமது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்காக அவர்கள் வருகிறார்கள். அங்குள்ள பிரச்சினை தீர்வதற்கு எமது இரு நாடுகளின் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒத்துழைப்பு அவசியம் என்று அவர் மேலும் கூறினார். உண்மை மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு தொடர்பாக ஆபிரிக்காவின் ஒத்துழைப்பு தொடர்பாக அரசு அதிகாரிகளுடன் ஆலோசிப்பதற்காக இப்றாகிம் இப்றாகிம் கடந்த மாதம் இலங்கை வந்தி ருந்தார். தென்னாபிரிக்க அதிபர் ஜேகொப் சூமா அந்த நாட்டின் தேசிய சபையில் நிகழ்த்தியிருந்த உரையொன்றைத் தொடர்ந்து இந்தப் பயணத்துக்கான முன்முயற்சி முழுக்கவும் இலங்கையிலி ருந்தே மேற்கொள்ளப்பட்டிருந்தது என்பது இப்றாகிம் இப்றாகிமின் கருத்து தெளிவுபடுத்தியுள்ளது. தென்னாபிரிக்க தேசிய சபையின் துணை அதிபர் சிறில்ரமபோசா தென்னாபிரிக்காவின் சார்பிலான இலங்கை தென்சூடான் நாடுகளுக்கு அமைதி மற்றும் நல்லிணக்கத்துக்கான விசேஷ தூது வராகச் செயற்படுவார் என்று அதிபர் சூமா அறிவித்திருந்தார்.

இந்தக் குழுவின் தென்னாபிரிக்க பயணம் மனித உரிமைகள் சபையில் இலங்கையின் நிலைமையை மேம்படுத்துவதாக இருக்கும் என்று இலங்கை அரசு வட்டாரங்களில் கருதப்படுகின்றது. இலங்கை அரசு தேசிய நல்லிணக்கத்துக்கான முயற்சிகளில் இறங்கியுள்ளது என்பதை காட்டுவதாக இருக்கும் என்று அவர்கள் நம்புகிறார்கள்.

அதே சமயம் ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தின் மீது எவ்வாறு வாக்களிப்பது என்பது பற்றி தென்னா பிரிக்கா இன்னமும் ஒரு முடிவுக்கும் வர வில்லையென்று இப்றாகிம் இப்றாகிம் கூறி யிருக்கிறார். பி.பி.சி.சிங்கள சேவையில் கேள்வி பதில் நிகழ்ச்சியொன்றில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் பங்கெடுத்திருந்தார். அவர் கூறியிருந்த சில கருத்துக்கள்;

இலங்கை அரசு பல்வேறு செயற்பாடு களை ஆரம்பிக்கிறது. பிறகு கைவிட்டு விடுகிறது. இப்பொழுது ஜெனிவாவில் தீர்மானம் வர விருப்பதன் காரணமாக நல்லிணக்கத்தில் தான் அக்கறை கொண்டிருப்பதாக சர்வ தேசத்துக்கு காட்டிக்கொள்ளப்பார்க்கிறது. தென்னா பிரிக்காவிடமிருந்து அழைப்பு வந்ததா என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில் அவ்வாறான அழைப்பு வந்தால் நாங்கள் ஆலோசிப்போம். இதுவரை நாங்கள் இது குறித்து விவாதிக்கவுமில்லை. தீர்மானம் எடுக்கவுமில்லை என்றார்.

ஜெனிவா தீர்மானத்தின் கனதியைக் குறைப்பதுதான் இந்தக் குழுவின் தென் னாபிரிக்க பயணத்தின் நோக்கம் என்று நினைக்கிறீர்களா எனக் கேட்கப்பட்டதுக்கு, ஆம் அதைத் தான் நாங்கள் சொல்கி றோம் என்றார்.

இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை நீர்த்துப் போகச் செய்வதுதான் இந்தக் குழுவின் நோக்கமென்றால் தென்னா பிரிக்காவும் இதில் இணைந்து கொண்டுள்ளது என்கிறீர்களா? என்ற கேள்விக்கு, அப்படி நான் கூறவில்லை என்றார்.

பி.பி.சி :-தென்னாபிரிக்க அமைச்சர் இப்றாகிம் இப்றாகிம் கூறினார், சர்வதேச தீர்வை விட உள்ளக தீர்வு நல்லது என்று. *


சுமந்திரன் :-அவ்வாறான தீர்வு வருமானால் நல்லதுதான் . ஆனால் அப்படியான தீர்வு ஒன்றும் வருவதாக இல்லையே !

பி.பி.சி :- தென்னாபிரிக்க தலையீடு வெற்றியளிக்கும் என்று நினைக்கிறீர்களா?

சுமந்திரன் :- ஒரு தீர்வு அவசியம் என்று நாங்கள் கருதுகிறோம். எவரது தலை யீட்டையும் ஆதரிப்போம். ஆனால் எதுவும் எமது சமூகத்தை பாதிப்பதாக இருப்பதற்கு அனுமதிக்கமாட்டோம்.

உண்மை மற்றும் மீள் நல்லிணக்க ஆணைக்குழுவொன்று நியமிக்கபடுவது குறித்து த.தே.கூ.தலைவர் இரா.சம்பந் தன் அண்மையில் கூறும்போது இந்த யோசனை இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் முன் வைக்கப்பட்டது. அரசு மற்றும் த.தே.கூ தூதுக்குழுக்கள் தென் னாபிரிக்காவுக்கு சென்றன. இருந்தும் அரசு எந்தவித அக்கறையும் காட்டிக் கொள்ளவில்லை என்றார். உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவுக்கான முன் முயற்சியை நாம் ஆதரிக்கலாம். ஆனால் அரசுக்கு இப்போதிருக்கும் இக்கட்டிலிருந்து விடுபடுவதற்கானதாக அது இருக்க முடியாது. அது ஒரு விரிவான செயற்பாடாக இருக்க வேண்டும். பிரச்சினையின் மூலகாரணத்தை அது தீர்ப்பதாய் இருக்க வேண்டும். போருக்குப் பின்னரான கள நிலைமையை அரசு கவனித்துத் தீர்க்க வேண்டும். அரசால் மேற்கொள்ளப்பட்ட பல ஏற்றுக் கொள்ளப்பட முடியாத அவசரமான விடயங்கள் இருக்கின்றன. அரசுக்குரிய மற்றும் தனியார் காணிகள் சம்பந்தப்பட்டவையும் உள்ளன. பொறுப்புக்கூறும் பிரச்சினையைக் க்வனத்தில் எடுக்க வேண்டும். அதன்மூலம் உண்மையைக் கண்டறியலாம். ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய தீர்வு ஒன்று அவசியம் என்று அவர் மேலும் கூறினார்.

ஐ.தே.கட்சியும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஆதரிப்பதாகத் தெரியவில்லை. அண்மையில் அந்தக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கட்சி சிரேஷ்ட தலைவர்கள் மத்தியில் பேசும்போது அரசு முதலில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்த வேண்டும். அரசமைப்பின் 17 ஆவது பிரிவை மீளவும் நிலைநாட்ட வேண்டும். நீதிவான்களை குற்றஞ் சாட்டும்போது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் பற்றிய தனியார் தீர்மானம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட அனுமதிக்க வேண்டும் என்று கூறி யிருந்தார்.



# பழங்களை

## பாதுகாப்பான முறையில் பழுக்க வையுங்கள்

ஆ.ஜென்சன் றொனால்ட்
பொது சுகாதார பரிசோதகர்

பழங்கள் என்றாலே இயற்கையுடன் இனிமையாய் எங்களை இணைக்கும் உறவு என்று சொல்லலாம். ஊட்டச்சத்தில் உயர்ந்து நிற்கும் பரிசுகள் பழங்களே. அதிகளவான பழங்களை உண்ணுதல் ஆரோக்கிய வாழ்வுக்கு சிறந்தது என்பது நாம் யாவரும் அறிந்ததே. ஆனால் நாம் அப்படியான பழங்களை உண்ணுகின்றோமா என்ற கேள்வி இப்போது பரவலாக எழத் தொடங்கியுள்ளது. அப்படியென்றால் சிறந்த பழங்களை எவ்வாறு தெரிவு செய்வது எனும் கேள்விகள் தொடராகின்றன.

நகரமயமாகிக் கொண்டிருக்கும் நவநாகரிக உலகிலே மரங்களை விட கட்டடங்களே நிலத்தை ஆக்கிரமித்து நிமிர்ந்தெழுந்து வருகின்றன. இதனால் வீடுகளில் பழப்பயிர் பயிரிட்டு, பழங்களை உண்ணுவது கைக்கெட்டாத விடயமாக மாறி வருவது கண்கூடு. இதைவிட பழமரங்களைப் பாதுகாப்பதில் குரங்குகளுடன் படாதபாடு பட வேண்டியிருப்பதாக யாழ்ப்பாணத்து தென்மராட்சி மக்கள் சலித்துக் கொள்கிறார்கள்.

இதனால்தான் மரங்கள் தறிக்கப்படுவதும், பிஞ்சிலேயே பழங்களை காய்களாக விற்று காசாக்குவதும் நடைபெற்று வருகின்றது.

### சந்தையில் பழங்கள்

சந்தைகளில் பெருவாரியான பழங்கள் வந்து குவிகின்றன. எனவே மக்கள் மரம் வளர்த்து பழம் உண்பதைவிட, பணம் கொடுத்து பழங்களை இலகுவாக வாங்கிவிடலாம் என்று நினைத்து விடுகிறார்கள்.

வியாபாரிகளும் தமது ஜீவனோபாயம் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக பிஞ்சுகளையும், காய்களையும் பறித்துச் செயற்கையான முறையில் பழுக்கவைத்து சந்தைகளில் சேர்த்து விடுகின்றார்கள்.

### பழம் பழுத்தல் என்றால் என்ன?

பொதுவாகச் சொன்னால் மாப்பொருளைத் தன்னகத்தே கொண்டுள்ள முற்றிய காய்கள் அவற்றின் இயற்கையான ஓமோன் செயற்பாடுகளால் வெல்லம் கொண்டவையாக மாற்றமடைகின்றன. இதுவே பழம் பழுத்தல் எனலாம். காய்களில் அமிலத் தன்மை, மாப்பொருள், பச்சை நிறத்துக்குரிய காரணி, பெக்ரின் எனும் வன்மையான பகுதி மற்றும் பெரும் சேதனப் பொருள்கள் என்பன அடங்கும். காய்கள் முற்றுகின்ற போது எதிலீன் (Ethylene) எனும் ஓமோனின் தூண்டலினால் இவை நடுநிலையாகவும், இனிப்பாகவும் (வெல்லம்), மஞ்சள்-சிவப்பு சார் நிறமாகவும், மென்மையாகவும், வாசம் வீசுபவையாகவும் மாற்றமடைகின்றன.

இவ்வாறு இயற்கையாக முற்றிய காய்கள் எதிலீனினால் தூண்டப்பட்டு பழங்களாகும்போது நிறைந்த ஊட்டச்சத்துள்ள, சூழலுக்கு நேசமான, எமது ஆரோக்கியத்தை மேம்படுத்துகின்ற பழங்கள் கிடைக்கின்றன.

### பாரம்பரிய முறைகள்

பாரம்பரிய முறைகளில் அதிக தீமையற்ற முறைகளாக நாம் பின்பற்றும் புகைபோடுதல், மூடிவைத்தல், வேப்பிலை-அரிசியினுள் புதைத்து வைத்தல், பழுத்த பழமொன்றை முற்றிய காய்களுடன் சேர்த்து மூடிவைத்தல் என்பன அடங்கும்.

இங்கு புகைபோடும் போது பழத்தை சூழ காபனீரொக்சைட்டு ($CO_2$) செறிவு அதிகமாக எதிலீன் வெளிப்படுவதால் பழம் பழுப்பதற்கு தூண்டப்படுகிறது. மூடிவைக்கும்போது வெப்பநிலை அதிகரிப்பதனாலும், வேப்பிலை-அரிசி என்பவற்றினுள் புதைக்கும் போது முற்றிய காய்களில் நுண் ணிய காயங்கள் (அழுத்தங்கள்) ஏற்படுவதாலும் எதிலீன் உருவாக் கப்பட்டு அவை பழுத்தலை தூண் டுகின்றன. பழுக்க ஆரம்பித்ததும் அவை மூடிய அடைப்புகளிலிருந்து வெளி எடுக்கப்பட்டு நல்ல காற்றோட்டமான இடத்தில் வைக்கப்படும் போது பழம் பழுதடைதல் தடுக்கப்படுவதோடு, நீண்ட காலம் பயன்படுத்தவும் முடிகிறது.

### செயற்கை முறைகள்

முற்றிய காய்களை செயற்கையாக பழுக்கச் செய்ய இரசாயனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதில் எதிலீன் வாயு; எதிலீன் திரவம், ஏத்றல், கல்சியம் காபைட் என்பன பயன் படுத்தப்படுகின்றன.

இவற்றில் எதிலீன் வாயுவே பாதுகாப்பானதும் சிறந்ததுமாகும். எனினும் இவற்றைவிட 'ஏத்றல்' எனும் இரசாயனமும் எதிலீனை போன்று செயற்படுவதோடு, இலகுவாகவும் பெறக் கூடியதாகவும் உள்ளது. இதுவும் ஓரளவு பாதுகாப்பானதே. ஆனால் "கல்சியம் காபைட்" புற்றுநோயை ஏற்படுத்தக்கூடியது. எனவே இதனைத் தவிர்ப்பதுவே சிறந்தது.

கல்சியம் காபைட் ஆனது ஈரலிப்புடன் சேர்ந்து அசரைலீன் (Acetylen) எனும் இரசாயனமாக மாறி பழுத்தலை ஊக்குவிக்கிறது. இது நேரடியாக பழங்களினுள் செல்வதில்லை. ஆயினும் அவற்றின் படிவுகள் பழங்களிலுள்ள காயங்களுடாகவோ, நாம் கையாளும் போது கைகளினூடாக வாயை அடையவோ சாத்தியமுண்டு. இந்த அசரைலீன் ஆனது ஆசனிக் (Arsenic) பொஸ்போரஸ் (Phosphorus) எனும் புற்றுநோயை தூண்டக்கூடிய பொருள்களைக் கொண்டுள்ளது.

எது எவ்வாறாயினும் நாம் இரசாயனங்களை காய்களின் மீது விசிறுவதையும், அவற்றை இரசாயனங்களுக்குள் அமிழ்த்தி யெடுப்பதையும் கண்டிப்பாகத் தவிர்த்தல் வேண்டும்.

எனவே ஏத்றல் (Ethral) போன்ற ஆபத்துக் குறைந்த இரசாயனங்களை ஒரு லீற்றர் நீருக்கு ஒரு மில்லிலீற்றர் (1 ml/1 L) என ஐதாக்கி ஒரு சதுர கன அடி (1 $ft^3$) க்கு 3-5 ml என்ற அளவில் பாத்திரத்தில் எடுத்து 5X5X6 அடி அளவு கொண்ட மூடிய பெட்டியினுள் வைத்து அப்பெட்டியினுள் பழங்களையும் வைத்து 24 மணி நேரம் மூடி வைத்தல் வேண் டும். பின்னர் வெளியெடுத்து நல்ல காற்றோட்டமுடைய இடத்தில் பேணுதல் வேண்டும். இதுவே பாதுகாப்பாக செயற்கை முறையில் பழங்களைப் பழுக்கச் செய்யும் வழிமுறையாகும்.

### இனங்காணுதல்

இயற்கையாக பழங்கள் பழுக்கும் போது முதலில் காம்புப் பகுதியை அண்டிய பகுதியிலிருந்து ஆரம்பித்து கீழ்ப்பகுதி வரை நிறமாற்றம் படிப்படியாக ஏற்படும்.

ஆனால் நேரடியாக இரசாயனங்களை காய்கள் மீது தெளித்து செயற்கையாக மேற்கொள்ளும் பழுக்கவைத்தலில் பழங்கள் முழுமையாக ஒரே நிறமாக பழுத்திருத்தல் அல்லது தெட்டத் தெட்டமாக புள்ளிகள் காணப்படுதலை அவதானிக்க முடியும். அத்துடன் இவற்றை அவதானித்து நுகர்வோர் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

இயற்கையாக பழுக்கும்போது பழங்கள் உள்ளிருந்து வெளிநோக்கி பழுக்கின்றன. எனவே பழம் நிறமாற்றமடைந்துள்ளபோது சுவையான தாக நறுமணமுடையதாக இருக்கும். இரசாயனங்களை நேரடியாக பிரயோகிக்கும் போது முதலில் தோல் பகுதியும் பின்னரே உட்பகுதியும் பழுக்கும். இவை உண்ணும்போது சுவை குறைவானதாகவும், விரும்பத்தகாத மணமும் உடையனவாக இருக்கும்.

### பழ உற்பத்தியில் கவனிக்க வேண்டியவை

வீட்டிலே பழ மரங்களை வளர்க் கும் போது முடிந்தவரை கையாள வசதியான உயரத்துக்கு அதிகம் வளராது கத்தரிக்க வேண்டும். அத்துடன் காய்களைச் சுற்றி கடதாசியினால் பாதுகாப்புக் கவசம் ஏற்படுத்துதல் நன்று.

இவ்வாறு செய்வதால் காய்களில் பூச்சியின் தாக்கம் குறைக்கப்படுவதோடு தரமான கனிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அறுவடை செய்யும் போது காய்கள் நிலத்தில் விழாதவாறு பார்த்துக் கொள்வதோடு நன்கு கழுவிச் சுத்தம் செய்து ஈரம் உலர்ந்தபின் இயற்கை முறையில் பழுக்கச் செய்தலே தரமான பாதுகாப்பான பழங்களைப் பெற வழிவகுக்கும்.

சிலர் வீட்டில் வாழைக் குலையை அதன் பொத் தியை முறித்தவுடன் இரசாயனப் பசளையை முறித்த இடத்தில் வைத்து கட்டிவிடுவத னால் பருமனான வாழைப் பழங்களை பெற முயற்சிக்கின்ற னர். இது முற்றிலும் தவறான செயற்பாடாகும். அதாவது யானை தன் தலையில் மண்ணை வாரிப் போடுவதற்கு ஒப்பானது. நேரடியாக இரசாயனங்கள் பழங்களுக்குள் சென்று பெரும் தீமையை விளை. விக்கும். இது கண்டிப்பாக தவிர்க்கப்பட வேண்டிய விடயமாகும்.



### இறக்குமதிசெய்யப்படும்பழங்கள்

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பழங்கள் நீண்ட நாள்கள் பழுதடையாது இருக்க அவற்றை மெழுகினுள் அமிழ்த்தி எடுத்திருப்பார்கள். இது பழத்தை உலரவிடாது பாதுகாப்பதோடு, வெளியிலிருந்து நுண்ணங்கிகள் சென்று பழுதடைதலைத் தடுக்கும் ஓர் உத்தியாகும். இந்த மெழுகுப்படை கடுமையான நச்சு விளைவுகளையும் ஏற்படுத்துவதில்லை. எனினும் இவ்வாறான (அப்பிள்) பழங்களை நன்கு கழுவியபின் அல்லது தோலை அகற்றிய பின் உண்ணுவது பாது காப்பானதாகும். எது எப்படியோ எந்தப் பழமானாலும் நன்கு தூய நீரினால் கழுவி, தோல் உரிக்க முடியுமானவற்றின் தோலை உரித்து உண்பதால் ஓரளவேனும் பாதுகாப்புப் பெற்றுக் கொள்ள முடியும்.

### வீட்டுக்கொரு மரம்

இரசாயனங்கள் தோய்ந்த இந்த யுகத்தில் நாம் பாதுகாப்பான போசாக்கு மிக்க பழங்களைப் பெற்று எமது ஆரோக்கிய வாழ்வை மேம்படுத்த வீட்டுக்கொரு பழமரம் வளர்ப்போம். அதனை எமது கையாளுகைக்குட்பட்ட உயரத்தில் கத்தரித்து பராமரித்தால் அதன் விளைச்சல்கள் வீணாகாது. அதனை இயற்கை முறையில் பராமரித்து பழுக்கச் செய்து உண்மையான பழங்களை உண்டிடுவோம். உயிர்ச் சத்துக்களை நாளும் பெற்றிடுவோம்.

---

## சித்திரா பௌர்ணமி விரதம் எப்போது?

வாசகர் திருமுகம்

சைவ சமயத்தவர்களுக்கு ஆடி அமாவாசையும், சித்திரா பௌர்ணமியும் மிக முக்கியமான விரத தினமாகும். தந்தையை இழந்தவர்கள் அமாவாசை திதியிலும் தாயை இழந்தவர்கள் பௌர்ணமி திதியிலும் விரதமிருந்து தர்ப்பணம், தானம் முதலியவற்றை ஆற்றி பிதா, மாதாவின் ஆன்ம ஈடேற்றத்துக்கான பிரார்த்தனை செய்வது மரபாகும். இவ்வாறான ஒழுங்கில் இவ்வாண்டு சித்திரை மாதம் இரண்டு பௌர்ணமி திதிகள் வருகின்றன. முதலாவது திதி சித்திரை 1 ஆம் நாள் வருடப் பிறப்பன்று 14.04.2014 திங்கட் கிழமையும், இரண்டாவது திதி சித்திரை 31 ஆம் நாள் 14.05.2014 புதன்கிழமையும் இரண்டு பஞ்சாங்கங்களிலும் மேற்படி நாள்களில் பௌர்ணமி திதி காணப்படுகின்றது. வாக்கிய பஞ்சாங்கம் முதலாவது நாள் சித்திரா பௌர்ணமி என கூறியுள்ளது. திருக்கணிதம் முப்பத்தொராவது நாள் சித்திரா பௌர்ணமி எனக் குறிப்பிடுகின் றது. அதேவேளை சித்திரா பௌர்ணமியை அந்தமாகக் கொண்டு திருவிழா நடத்தும் ஆலயங்கள் எந்த நாளைச் சரியானது என தேர்ந்து எடுக்க முடியாமல் இருக்கின்றனர். முதலாம் நாள் கைக்கொண்டால் அந்தத் தினபக்ஷத்தில் வருடப் பிறப்பை இரதோற்ஸவமாக கைக் கொள் ளும் ஆலயங்களும் பங்குனித் திங்கள் உற்ஸவம் நடைபெறும் ஆலயங்களும் ஒன்றாக கலந்து நிகழும்.

இவ்வாறான நிலையில் ஆலய நிர்வாகங்களும், அடியார்களும் எத்தினத்தை சரியானதாகக் கொண்டு விழாக்களை நிகழ்த்தவும் விரதத்தை அனுஷ்டிக்கவும் வேண்டும் என்பதில் பெரும் குழப்பம் அடைந்துள்ளனர். இதனைக் களைய வேண்டியது வேதசிவாகம விற்பன்னர் களினதும், சமய அறிஞர்கள், சமயஸ்தாபனங்களினதும் கடமையாகும். இவ்வாறான சந்தர்ப்பத்தில் "எமக்கென்ன" என்ற அலட்சியப் போக்குடன் செயற்படாமல் சமூகத்தை வழி நடத்தி சமயத்தையும், மக்க ளையும் நெறிப்படுத்த வேண்டு மென அன்பாக வேண்டு கின்றோம்.

*சி.வரதீஸ்வரன்.*



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: வேலைச்சுமை இருந்து கொண்டேயிருப்பதாக ஆதங்கப் படுவீர்கள். உதவி கேட்டு உறவினர்களும் தர்மசங்கடத்துக்கு ஆளாக்குவார்கள். மற்றவர்களைப் பற்றி வீண் விமர்சனங்களைத் தவிர்ப்பது நல்லது.

**இடபம்**: தாயார் ஆதரித்துப் பேசுவார். பயணங்கள் சிறப்பாக அமையும். வேற்றுமதத்தவர் உதவுவார். வியாபாரத்தில் வாடிக் கையாளர்களை கவர சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தி யோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**மிதுனம்**: குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். பிர பலங்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் இணக்கமான சூழ்நிலை உருவாகும்.

**கடகம்**: மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்கக் கூடாது என்று முடிவெடுப்பீர்கள். உறவினர்களில் உண்மையான வர்களைக் கண்டறிவீர்கள். அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும். உத்தி யோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள்.

**சிங்கம்**: எடுத்த வேலைகளை முடிக்காமல் ஓயமாட்டீர்கள். தாய் வழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படக்கூடும். மனதுக்கு இத மான செய்தி வரும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் இலாப மடைவீர்கள். உத்தியோகத்தில் சிலசூட்சுமங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.

**கன்னி**: குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்சினைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். உறவுகளில் சிலர் கேட்ட உதவியை செய்வீர்கள். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் உங்களுக்கு முன்னுரிமை தருவார்கள்.

**துலாம்**: புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பழைய பிரச்சி னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத் தில் மின்னல் வேகத்தில் பல பணிகளை முடித்துக் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்**: சில வேலைகளை உங்கள் மேற்பார்வையில் முடிப்பது நல்லது. யாரையும் நம்பி பொறுப்புகளை ஒப்படைக்காதீர் கள். உறவினர், நண்பர்கள் விடயத்தில் அத்துமீறி தலையிட வேண்டாம்.

**தனுசு**: அநாவசியச் செலவுகளைக் குறைக்கப் பாருங்கள். திடீர் பயணங்கள் இருக்கும். சகோதர பகை வரக்கூடும். வியாபாரத்தில் பாக்கிகளை கறாராகப் பேசி வசூலிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்சினைகள் வரும்.

**மகரம்**: சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் வரும். உதவி கேட்டு வருபவர்களுக்கு உங்களாலானவற்றை செய்து கொடுப்பீர்கள். வியாபார ரீதியாக சில முக்கியஸ்தர்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டும்படி நடந்து கொள்வீர்கள்.

**கும்பம்**: உறவினர், நண்பர்கள் உங்களிடம் முக்கிய விடயங் களை பகிர்ந்து கொள்வார்கள். பிரியமானவர்களுக்காக சிலவற்றை விட்டுக்கொடுப்பீர்கள். பிரபலங்கள் உதவுவார்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள்.

**மீனம்**: கோபத்தைக் கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடியான செயல்களால் போட்டிகளைச் சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்களின் திறமையைக் கண்டு மேலதிகாரி வியப்பார்.

## நாளை

**மாசி-13 செவ்வாய்க்கிழமை | 25.02.2014**

திதி: ஏகாதசி மு.இ.11.44 வரை
நட்சத்திரம்: பூராடம்
பி.இ.02.32 வரை

சுபநேரம்: 10.59-12.29 வரை
இராகுகாலம்:.03.29-04.59 வரை


## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...



### மெய்யுணர்வே சமயம்

இதுவரை மனிதனால் ஆண்ட வனுக்குச் சூட்டப்பட்ட பெயர்களுள் மிகச் சிறந்தது சத்தியம் (உண்மை). மெய்யுணர்வின் பலனே சத்தியம். எனவே, அதனை உள்ளத்தின் ஊடே தேடுக. எல்லாப் புத்தகங்க ளையும் உருவங்களையும் விட்டு விலகி உங்களுடைய ஆன்மா தன்னையே காண வேண்டும். "புத்தகங்களில் முழுகி நாம் பித்துப் பிடித்திருக்கிறோம்" என்று ஸ்ரீ கிருஷ் ணர் கூறுகிறார். இயற்கையின் இரட்டை நிலைக்கு (dualities) அப்பால் செல்லுங்கள். மதக் கோட்பாடுகளும் உருவங்களும் சடங்குகளும்தான் எல்லாம் என்று நீங்கள் கருதும்போது, பந்தத்தில் சிக்கிக் கொள்கிறீர்கள். மற்றவர் களுக்கு உதவுவதற்காக நீங்கள் அதில் பங்கு கொள்ளுங்கள். ஆனால், அவை ஒரு பந்தமாகாமல் எச்சரிக் கையுடன் இருங்கள். மதம் ஒன்றே; முறைகள் தாம் வெவ்வேறாயிருக்க வேண்டும். ஆகையால் ஒவ்வொரு வரும் தமது செய்தியைக் கூறட் டும். ஆனால் மற்ற மதங்களில் குறை காணல் வேண்டாம். உண்மையொளி காண வேண்டுமாயின், நீங்கள் உருவங்களை எல்லாம் விட்டு விலகி நிற்க வேண்டும். பிரம்ம ஞானம் என்னும் அமுதக் கடலில் ஆழ்ந்து அதைப் பருகுக. "நானே அவன்" என்பதை உணர்ந்த ஒரு வன், கந்தல் உடுத்திக்கொண்டு இருந்தா லும் மகிழ்ச்சியுடன் இருக்கிறான். நிலையானதின் உள்ளே சென்று எல்லையற்ற சக்திபெற்று வெளியே வருக. சத்தியத்தைத் தேடிச் செல்லும் அடிமை, சுதந்திர மனித னாகத் திரும்பி வருகிறான்.

## மலேரியாவை பரப்பும் மனித குரங்குகள்



ஆபிரிக்காவில் உள்ள மனித குரங்குகளிடம் இருந்து தற் போது புதிய வகை மலே ரியா வைரஸ் கிருமிகள் பரவி வருவதாக விஞ்ஞானி கள் அச்சம் வெளியிட்டுள் ளனர்.

ஆபிரிக்காவில் சுற்றுப் பய ணம் முடித்துவிட்டு ஐரோப்பா திரும்பிய பயணி ஒருவர் கடுமையான மலேரியா நோயால் பாதிக்கப்பட்டார்.

அவரை பரிசோதனை செய்து பார்த்தபோது, புதிய வகை யான பிளாஸ்மோடியம் விவாஸ் என்ற வைரஸ் கிருமி தாக்கியது தெரியவந் தது.

அதனையடுத்து இந்த நோய் கிருமி குறித்து பென்சில் வேனியா பல்கலைக்கழகத் தில் உள்ள பேரல்மான் மருத் துவ பாடசாலையின் விஞ்ஞா னிகள் ஆய்வு நடத்தினர். அதில், மனிதர்களின் உட லில் 5 வகை பிளாஸ் மோடி யம் வைரஸ்கள் மலேரி யாவை உருவாக்கும்.

அவற்றில் பி விவாஸ் எனப் படும் பிளாஸ்மோடியம் விவாஸ் வைரஸ் கிருமி மூலம் ஐரோப் பிய சுற்றுலாப் பயணிக்கு மலேரியா தாக்கி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த வைரஸ் கிருமிகள் ஆபிரிக்காவின் அடர்ந்த வனப் பகுதிகளில் வாழும் மனித குரங்குகளின் உட லில் உள்ளது. இவற்றின் மூலம் மனிதர்களுக்கும் பரவி நோய் தாக்கத்தை ஏற்படுத்தி யுள்ளது.

இந்த வைரஸ் மிக ஆபத் தானது என்றும், ஆபிரிக்க கண்டத்தில் மட்டுமே இந்த வைரஸ் பரவி வருவதாக வும் விஞ்ஞானிகள் தெரிவித் துள்ளனர்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | | 9 | 8 | | | | 1 | 6 |
| | | | 4 | | 9 | 3 | 8 | |
| 3 | | | | | 1 | | 7 | 9 |
| | | 7 | | 4 | | 6 | 2 | |
| | | | 6 | | 3 | | | |
| | 8 | 6 | | 5 | | 9 | | |
| 6 | 5 | | | | | | | 8 |
| | 7 | 2 | 3 | | 6 | | | |
| 8 | 1 | | | | 5 | 7 | | 3 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 2 | 8 | 5 | 4 | 3 | 6 | 1 | 7 |
| 7 | 4 | 3 | 9 | 6 | 1 | 2 | 8 | 5 |
| 5 | 1 | 6 | 8 | 7 | 2 | 3 | 4 | 9 |
| 4 | 3 | 2 | 1 | 8 | 7 | 5 | 9 | 6 |
| 1 | 9 | 5 | 4 | 2 | 6 | 7 | 3 | 8 |
| 8 | 6 | 7 | 3 | 9 | 5 | 1 | 2 | 4 |
| 3 | 8 | 1 | 7 | 5 | 9 | 4 | 6 | 2 |
| 2 | 7 | 4 | 6 | 3 | 8 | 9 | 5 | 1 |
| 6 | 5 | 9 | 2 | 1 | 4 | 8 | 7 | 3 |

# பல பார்வையில் பெண்ணியம்

பெண்ணியம் அல்லது பெண்ணிலை வாதம் என்பது ஒரே நிலைப்பாடு கொண்டதல்ல. அதனுள் பல கருத்தியல்கள் - கோணங்கள் உண்டு. அவற்றுள், ஒரு சிலவற்றை மட்டும் இங்கே பார்க்கலாம்.

**மிதவாதப் பெண்ணியம்**
இது பெண்ணின் சிறப்புக்களைக் கூறுவதிலேயே அதிகம் கவனம் செலுத்துகிறது கடவுளுக்கு முன், ஆண் - பெண் எல்லோரும் சமம் என்று சொல்லும் அதே நேரத்தில் அதற்காகப் போராடுவதைத் தவிர்க்கிறது. வழக்காடுமன்றங்கள், சட்டமன்றங்கள் முதலியவற்றிற்குப் போவதில் ஆர்வம் கொள்கிறது.

**போராட்ட குணம் மிக்க பெண்ணியம்**
பெண் உரிமைகளைப் போராடித்தான் பெற முடியும்- பெறவேண்டும் என்று இது வற்புறுத்துகிறது. பெண்களுக்குச் சொத்துரிமை போன்றவற்றிற்காக இது போராடிப் பெற்றும் தந்துள்ளது.

**தீவிரவாதப் பெண்ணியம்**
நவீனப் பெண்ணியம் என்று சொல்லுகின்ற இது, அரசியல் அமைப்புச் சட்டங்களிலும் அரசு ஆணைகளிலும் வழங்கப்பட்டுள்ள ஆண் - பெண் சமத்துவம் நடைமுறையில் அவைக்குதவாதது' என்று குற்றம் காட்டுகிறது. குடும்பம், உறவு முதலியவை பெண்ணை அடிமைப் படுத்துகின்றவை; எனவே இவற்றிலிருந்து பெண் விடுதலையாகி, வெளியே வர வேண்டும் என்று பேசுகிறது.

**புரட்சிகரப் பெண்ணியம்**
பாலியல் உரிமை, குழந்தை பெறுவதை மறுத்தல்- முதலியவற்றை இது வலியுறுத்துகிறது.

**சமதர்மப் பெண்ணியம்**
குடும்பத்துக்குள்ளும் அதற்கு வெளியேயும் பெண், பொருளாதார அடிப்படையில் சுய நிலையும் பெறவேண்டும். அப்போதுதான் பெண் விடுதலை சாத்தியமாகும் என்று சொல்கிறது. ஒட்டுமொத்தமான சமூக - சமதர்ம அமைப்பிலேயே பெண்ணும் நிரந்தரமாக சமத்துவநிலை பெறுகிறாள் என்று இது கூறுகிறது.



சு.சாரங்கி

# சமூக மாற்றம் அவசியம்



இன்றைய காலம் குடும்ப அமைப் பையே கேள்விக்குள் ளாக்குகிறது. கணவன், மனைவி, குழந்தைகள் என்ற குடும்ப அலகே பெண் களின் அடிமைத் தனத்துக்கும் அடக்கு முறைக்கும் காரணம் என்று தீவிரப் பெண்ணிய வாதிகள் கருதுகின்றனர்.

பி.விபிஷனா

காலத்தோடொத்து இந்தப் பிரபஞ்சம் முழுவதுமே மாறிக் கொண்டிருக் கிறது. நாங்கள் விரும்பியோ விரும்பாமலோ எமது சூழலும் மாறுகிறது. இந்த மாற்றங்க ளுக்கேற்ப யாவுமே தம்மை இசைவாக்கிக் கொள் கின்றன. மரம், செடி, கொடியிலிருந்து நுளம்பு கூட இதற்கு விதிவிலக்கல்ல. அப்படி இருக்கும் போது பெண்கள் எப்படி விதிவிலக்காக இருக்க முடியும்? பெண்களைப் பொறுத்தவரையில் பல ஆண்டு களாக வீடு, குடும்பம் சார்ந்த உழைப்பில் மட் டும் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். சமுதாய மாற் றங்களுடன் கால ஓட்டத்தில் அதற்கப்பாலும் பெண்ணின் உழைப்பு தேவைப்பட்டது.

பெண்கள் சமூக உற்பத்தியில் ஈடுபட்ட போதும் குடும்பம் சார்ந்த உழைப்பையும் அவளே செய்ய வேண்டிய நிலை இருந்தது. வேலைகள் சமனாக பங்கிடப்படாமல் இரட்டைச் சுமையுள் அவள் அழுந்தினாள். அவளது சமூக உற்பத் திக்கான உழைப்பு இரண்டாம் தரமான தாகவே கருதப்பட்டது. மீண்டும் குடும்பத்துக் கான அவளது உழைப்பே வலியுறுத்தப்பட் டது. விரும்பவும்பட்டது. இவ்விரட்டிப்பு வேலைப் பளுவிலிருந்து பெண் விடுபட முனையும் போது அடக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுக் கும் போது குடும்பத்துக்கு வெளியே உலகைக் காணவிளையும் போது மீண்டும் மீண்டும் அடக்குமுறைக்குள் பெண்ணைத் தள்ளு வதற்கான எதிர்ப்புக் குரல்கள் உயர்வாக ஒலிப்பது இயல்பானதுதான். ஏனெனில், மாற் றங்கள் ஏற்றுக்கொள்ள முடியாத வசதிகளை அனுபவிக்க விரும்பும் அனைவருமே பெண் விடுதலை பெறுவதை விரும்பமாட்டார்கள்.

பெரும்பாலான மக்கள் மத்தியில் பெண் வேலைக்குப் செல்வதால்தான் குடும்ப உறவு சீரழிகிறது. பிள்ளைகள் சீரழிந்து போகின் றனர். போதைவஸ்துப் பாவிக்கின்றனர். தீய பழக்க வழக்கங்களால் அழிந்து போகின்ற னர். அவர்களுக்கு அன்பு கிடைப்பதில்லை. குடும்ப உறவு அழிகிறது. சமுதாயம் நலிந்து போகிறது என்ற கருத்துக்கள் பரவலாக மக்கள் மத்தியில் காணப்படுகின்றது. பெரும்பாலான மக்கள் உண்மையைத் தரிசிக்க மறுக்கின்ற னர். அவர்களது கூற்றுக்களில் உண்மை இல்லாமல் இல்லை. பிரச்சினைகள் எம்முன் உள்ளன. ஆனால், இவர்கள் பெண்களுக்கு முன்வைக்கும் தீர்வுகள் தான் இன்றைய காலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை. பரிசீலிக்கப்பட வேண்டியவை.

பல ஆண்டுகளாக குடும்பம் சார்ந்த வேலை களையே தனது கடமைகளாகச் செய்து வந்த பெண், சம அந்தஸ்துடன் குடும்பத்துக்கு அப் பால் உள்ள உலகத்திலுள்ளும் தனது பங் களிப்பை செய்யவிழையும் போது குடும்பம் பல பிரச்சினைகள் எதிர்நோக்கும். கால காலமாக பெண்களது கைகளில் இருந்த சமையலறை, குடும்பம் என்பன மற்றவர் களுக்கும் பங்கிடப்படும் போது அவ்வேலை களில் குறைபாடும், நேர்த்தியின்மையும் ஏற்படுவது தவிர்க்க முடியாது. அதுவே நிரந்தரமானதல்ல. அதற்கான் தீர்வுகள் வைக்கப்பட்டு நடைமுறைக்கு வரும்போது பிரச்சினைகளும் மறைந்து போகும்.

இப்பிரச்சினை ஒரு சமுதாயப் பிரச்சினை. தனிப்பட்ட ஒவ்வொரு குடும்பத்தின் பிரச்சினை யாகக் கருத முடியாது. குடும்ப அமைப் புகளைப் பேணுவதற்கு பெண்களை மீண் டும் வீட்டில் மட்டும் உழைப்பை வழங்க முடியாது. உதாரணமாக தனது குடும்பத்தைக் காக்கும் பணி பெண்ணினது அதற்காக அவள் வீட்டுக்குள் போயிருந்து வேலையைக் கவனிப்பதுதான் வழி என்ற கருத்தை ஒருபோதும் ஏற்க முடியாது.

உதாரணமாக தற்காலக் குழந்தைகள் பால் குடித்து வளர்வதில்லை. தாய்மார் வேலைக் குப் போவதால் பால் கொடுப்பதில்லை. இத னால் பிள்ளைகள் நலிந்து போகின்றன. எனவே, பெண்கள் வேலைக்குப் போகாமல் வீட்டில் இருந்து பிள்ளை வளர்க்க வேண்டும் என்று புத்திஜீவி ஒருவர் பிரச்சினையையும் அதற்கான தீர்வையும் கூறியிருக்கின்றார். இதில் கூறப்பட்ட பிரச்சினையைப் புரிந்து கொள்ள முடியும். ஆனால், அதற்காக அவர் கூறும் தீர்வை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. பிள்ளைக்குத் தாய்ப்பால் கொடுக்க முடியவில்லையென்றால் அது ஒரு தனிப் பெண்ணின் பிரச்சினை அல்ல. சமூதாயத் தின் பிரச்சினை. இதற்கான தீர்வை பரந்த மனத்துடன் ஆராய்ந்து தீர்வு காண வேண் டும். பால் ஒரு பிள்ளைக்கு எவ்வளவு காலம் கொடுப்பது சிறந்தது என்பது அறியப்பட்டு அந்நாள்களை தாய்மாருக்கு விடுமுறை யாக வழங்க வேண்டும்.

நோர்வே, கனடா, டென்மார்க், சுவீடன் போன்ற நாடுகளில் பாலூட்டும் தாய்மார்களுக்கு, பாலூட்டும் நேரங்கள் என குறுகிய நேர விடுமுறைகள் நடைமுறையில் உள்ளன. இப்பிரச்சினைக்கு மாற்றுத் திட்டங்களைப் பற்றி நாமும் யோசிப்பது அவசியம். பிரச் சினைகள் அடையாளம் காணப்பட்டு அதற் கான தீர்வுகள் முன்வைக்கப்பட வேண் டும். அதை விடுத்து கேலியாகவும் கிண்ட லாகவும் குடும்பத்தைச் சீரழிக்கும் பாவிக ளாகவும் பெண் சித்திரிக்கப்படுவது ஆணாதிக் கச் சிந்தனை முறையின் மேலாட்சியைக் காட்டுகிறது.

இன்றைய காலம் குடும்ப அமைப்பையே கேள்விக்குள்ளாக்குகிறது. கணவன், மனைவி, குழந்தைகள் என்ற குடும்ப அலகே பெண் களின் அடிமைத்தனத்துக்கும் அடக்குமுறைக் கும் காரணம் என்று தீவிரப் பெண்ணிய வாதிகள் கருதுகின்றனர்.

சமுதாய உற்பத்தி முறைமை அதன் உற வுகள், கலாசார விழுமியங்கள். என்பவற் றிற்கேற்ப குடும்ப அமைப்பு காலத்துக்குக் காலம் மாறி வந்துள்ளது. எமது இன்றைய சமூக முறைமை ஐம்பது, அறுபதுகளில் இருந் ததைவிடவும் எவ்வளவோ மாறிவிட்டது. பெண்கள் சமுதாய வேலைகளில் பங்களிப் பதால் குடும்பம் சிதைவுறுவதாக கூறுவதா னது மிகவும் தவறான கருத்தியல்பு ஆகும். குடும்பம் பற்றிய கோட்பாடுகள் முன்னைய சமூக வாழ்வு முறைக்கேற்ப இயல்பாக்கம் அடைந்ததாக இருப்பதால் இன்றைய வாழ்வு முறைக்கேற்ப அவை தம்மை தகவமைத் துக் கொள்ள வேண்டியிருக்கிறது. தகவ மைத்துக் கொள்ளும் வரையான காலத்தில் குடும்பம் சீரழிந்ததாகப்படுகிறது. இவை சிதைவுகளல்ல. மாறாக அமைப்பு புதிய நிலைக்கு ஏற்ப மாற்றுருப் பெரும் போக்கில் ஏற்படும் உடைவுகள் அல்ல, வளர்ச்சிகள் என்றே கொள்ளப்பட வேண்டும். அப்போதுதான் வளர்ச்சியைக்கூட ஒரு பயன் விளைவுள்ள வளர்ச்சியாக மாற்றுவதில் எமது பங்க ளிப்பை வழங்க முடியும்.

எவ்வாறாயினும் சமூகத்தில் பெண்களின் சம உரிமை, சம அந்தஸ்து என்ற விடயங் கள் அக்கறை இன்றி பெண்ணிலைவாதம் பற்றித் திறந்த மனதுடன் ஆராய யார் மறுத்தாலும் குடும்பம் பற்றிய கேள்விகள் எழுதப்பட்டுத்தான் வருகின்றன. காலச் சக்கரம் தனது பாதையில் நகர்ந்து கொண்டு தான் இருக்கின்றது. அதைத் தடுப்பது என் பது சூரியனை கைகளால் மறைக்க நினைப் பது போலத்தான்!. எனவே இவ்வாறான மாற்று அமைப்புகள் அல்லது மாற்று வழி முறைகள் பற்றிய கணிப்பீட்டை நிதான மாக உருவாக்கிக் கொள்ள வேண்டும். ஆகவே, சமுதாயம் தொடர்பான புதிய சிந்தனைகளுக்கு வழிகோலும், வாழ்வுக் கும் அர்த்தம் சேர்ப்பதாக அமையும்.

## பால் அபிவிருத்தி நிலையம் திறப்பு

தென்மராட்சி பெப்.24

இலங்கை - ஜேர்மன் சங்கத்தின் ஜீஐஸற் அபிவிருத்தி நிறுவனத்தினரால் பால் அபிவிருத்தி நிலையம் இன்று திங்கட்கிழமை பி.ப.3.30 மணிக்கு மீசாலை நெல்லியடி முருகன் கோயிலுக்கு அருகில் திறந்து வைக்கப் படவுள்ளது.

இந்த நிலையத்தில் பால் கொள்வனவு செய்யப்படுவதுடன் பால் உற்பத்திப் பொருள்கள் விற்பனை செய்யப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (ந-9)

தற்போது புதிய இடத்தில்
வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை



தற்போது
எமது கிளை புதிய இடமான இல.30 கனகபுரம் வீதி, கிளிநொச்சிக்கு மாற்றப்பட்டுள்ளது.

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், அன்பளிப்புப் பொருட்கள் உணவுப் பண்டங்கள் என்பவற்றை மிகவிரைவாக அனுப்பிட.
220ற்கு மேற்பட்ட நாடுகளுக்கான மிகக் குறைந்த கட்டணம்.

11Kg மேற்பட்ட பொதிகளுக்கு 1Kg க்கான மிகக் குறைந்த கட்டணம்

- லண்டன் - 650/=
- பிரான்ஸ் - 750/=
- கனடா - 900/=
- டென்மார்க் - 800/=
- அவுஸ்திரேலியா - 750/=
- சுவிஸ்- 850/=
- நெதர்லாண்ட் - 850/=
- நோர்வே - 900/=
- இத்தாலி - 875/=
- ஜேர்மனி - 700/=



உங்கள் இல்லங்களில் இருந்தவாறே பொதிகளை அனுப்பிட தொடர்பு கொள்ளவும்
0770569642

**திருமுருகன் கொம் நெற்**
இல.271A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(ஆல் சிலோனிற்கு முன்பாக அமைந்துள்ளது.)
பிரதான வீதி, சங்கானை.021 222 7835
இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
இல.18, பிரதான வீதி, நெல்லியடி. (HNB வங்கிக்கு அருகில்)
இல.30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
TCN EXPRESS
இல.2B, நெல்சன் ரினேஸ், கொழும்பு-6



3-5 வேலை நாட்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்

## பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப்.24

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகளுக்கான விசேட பொதுக் கூட்டம் இன்று திங்கள் மாலை 6.30 மணிக்கு கந்தையா உபாத்தியா யர் மண் டபத்தில் நடைபெறவுள்ளது என பாடசாலை அதி பர் ஈ.ஆர்.ஈஸ்வரதாசன் தெரிவித்துள்ளார். (ந)

## கௌரவிப்பு விழா

யாழ்ப்பாணம், பெப்.24

சமூக சேவைகள் திணைக்களத்தில் கடமை யாற்றி இடமாற்றலாகிச் சென்ற அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சுபாஜினி கோகுலன் அவர்களின் சேவையைப் பாராட்டி கௌரவிப்பு விழா ஒன்றை யாழ்.மாவட்ட சமூக சேவைத் திணைக்களம் அண் மையில் நடத்தியது. இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ், திருமதி சுபாஜினி கோகுலனுக்கு நினைவுப் பரிசை வழங்கினார்.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட சமூக சேவை அலுவலர் எஸ்.ஞானவேல், கைதடி அரச முதி யோர் இல்ல அத்தியட்சகர் ஆர்.கிருபாகரன் உட்படப் பலர் கலந்து கொண்டார்கள்.

(ஒ-288)



வரணிப் பிரதேச வைத்தியசாலையில் 52 ஆவது பிரிகேட் தளத்தில் தங்கியிருக்கும் இராணுவத்தினரால் வைத்திய சாலை வளாகம் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்ட வேளையில்... (ந-122)

**தவறிவிட்டது**

இரத்தினராசா தனெஞ்சயன் என்பவரின் தே.அ.அட்டை (941833403 V) யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கு மிடையில் தவறிவிட்டது. (45073) (III.6.3)

தொடர்பு: 077759 2624, 077 890 7240

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், அரியாலை கண்டி வீதியில் (புங்கன்குளம் சந்திக்கு அருகில்) ஒரு பரப்பு 14 குழி காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:021 321 1393, 077 687 3150 (46070)(3.6.4)

**காணி விற்பனைக்கு**

பருத்தித்துறை, ஓராங்கட்டைப்பகுதியில் மூன்று பரப்புக்காணி வெட்டுக்கிணற்றுடன் விற்பனைக்குண்டு. (33378)(3.6.4)

தொடர்பு:077 872 9095, 077 901 2489

**லொறி விற்பனைக்கு**

இசுசூ எல்ப் GG 17 xx இலக்க 10½ அடி அலுமினிய பொடி கொண்ட லொறி விற்பனைக்குண்டு.

தொடர்பு:077 464 4657 (33379)(3.6.4)

**பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்**

யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் 01.03.2014 சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெற வுள்ளது. இக்கூட்டத்தில் பழைய மாணவர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

(சி/12667)(7.6.3)

அதிபர்
யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்

## புதிய யோசனைகள், புதிய சந்தைகள்...

### சாவகச்சேரி பால்பண்ணை அபிவிருத்தி நிலையத்தை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தல்.

சாவகச்சேரியில் அமைந்துள்ள பால்பண்ணை அபிவிருத்தி நிலையம் இன்று ஜேர்மன் தூதுவர், அதிமேதகு டாக்டர் ஜர்கன் மோஹாட் (Dr.Jurgen Mohard) அவர்களின் முன்னிலையில் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் / மாவட்ட செயலாளர் திரு. எஸ். அருமைநாயகம் அவர்களினால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்படும். GIZ - SME அபிவிருத்தி மற்றும் அபிவிருத்தி அலுவலகத்துக்கான Tetra Laval Food உடன் ஒன்றாக இணைந்து கார்கில்ஸ் (சிலோன்) PLC இனால் இணைந்த கருத்திட்டமாக இந்தப் பிராந்தியத்தில் முன்னணி பால் பதனிடுவோர், பால் பண்ணையாளர்களுடன் இணைந்து வெப்ப மண்டல பிராந்தியத்தில் பால் பண்ணைத் தொழிலில் வல்லுநர்களையும் ஒன்றாகக் கொண்டு வருகின்றதாகையால் பால்பண்ணை அபிவிருத்தியில் புதிய அத்தியாயமொன்று ஆரம்பித்து வைக்கப்படுகின்றது.







பண்ணைக் கைத்தொழிலில் அண்மைக்கால அபிவிருத்திகளில் சாவகச்சேரி மற்றும் மீசாலையில் உள்ள- 400 க்கும் மேற்பட்ட பண்ணையாளர்களுக்கு தனிப்பட்ட ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள வழி கிடைக்கும் என்பதுடன் எவ்வாறு தமது பால் உற்பத்தியை அதிகரித்துக் கொள்வதென்பது மற்றும் பண்ணைக் கைத்தொழிலில் அண்மைக்கால அபிவிருத்திகள் பற்றிய அறிவையும் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். மேலும் அவர்கள் முன்னணியில் உள்ள நாடளாவிய பால் பதனிடுவோர் மற்றும் சிரேஷ்ட சந்தைச் சங்கிலியுடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ளனர்.

அதன் மூலம் பண்ணையாளர்களுக்கு அவர்களது பால் உற்பத்திகளுக்கு கவர்ச்சிகரமான விலைகளைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவும் இருக்கும். இவ்வாறான தலையீடுதலின் ஊடாக பண்ணையாளர்கள் அவர்களது வருமானங்களில் ஆகக் குறைந்தது 50 சதவீத அதிகரிப்பை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆகவே பண்ணையாளர்கள் பால் பண்ணையை அவர்களது முதன்மை வருமானத்திற்கு ஆதாரமாக இரண்டாம் நிலை வருமானமாக நகர்த்துவதற்கு இயலக் கூடியதாக இருக்கும்.

தொடர்ச்சியான பண்ணைப்பயிற்சி அளித்தல் மற்றும் ஏனைய உதவிகள் வழங்குவதன் ஊடாக பால் பண்ணை நடத்துவதன் மூலம் பால் உற்பத்தி மற்றும் வருமானங்களை அதிகரித்துக்கொள்வதற்குத் தேவையான தொழில்நுட்ப அறிவை வழங்குவதன் பொருட்டு GIZ SME அபிவிருத்தி நிறுவனத்தினால் நான்கு கால்நடை மருத்துவர்கள் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். தனிப்பட்ட பண்ணையாளர்களுக்கு தனிப்பட்ட ஆலோசனைகள் வழங்குதல், பகுப்பாய்வு அடிப்படையில் பால் மாதிரிகளை பரீட்சிப்பதற்கு பண்ணையாளர்களுடன் அவர்கள் மிக நெருக்கமாக பணியாற்றுவார்கள்.

பங்களாதேஷ் நாட்டில் Tetra Laval மூலம் பயிற்சியளிக்கப்பட்ட கால்நடை மருத்துவர்களும் செயற்கை முறை சினைப்படுத்தல், தடுப்பூசியேற்றல், முறையான குடற்புழு நீக்கம் போன்ற சிறந்த நடைமுறைகளை பண்ணையாளர்களுக்கு அறிமுகம் செய்தல். உயர் விளைச்சலை உற்பத்தி செய்யக் கூடிய திறமை உள்ள புதிய வகை புல்லை பண்ணையாளர்களுக்கு அறிமுகம் செய்வதன் ஊடாக அவர்களும் கவனம் செலுத்துகின்றனர்.

அதன் மூலம், தரமான மூலப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்கும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்வதற்கும் நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான பண்ணையாளர்களின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு உதவிசெய்வதன் பொருட்டு ஒவ்வொரு வருடமும் கார்கில்ஸ் நிறுவனம் நேரடியாகப் பணியாற்றுகின்றது.

தயாரிக்கப்பட்ட உற்பத்திகள் அல்லது கார்கில்ஸில் விற்பனை செய்யப்பட்ட உற்பத்திகளின் தரத்தைப் பேணுதல் கம்பனியின் நூற்றாண்டுக்கும் மேலான வர்த்தகம் செய்தல் மற்றும் செயற்பாடுகளை அடைவதற்கான முக்கியமான அளவுகோலாகும். கொள்வனவு செய்யப்பட்ட, பதனிடப்பட்ட அல்லது தயாரிக்கப்பட்ட உணவுகளின் அதி உயர்ந்த தரம், பாதுகாப்பு, சுற்றாடல் மற்றும் சமூக தரங்கள் என்பனவற்றை அடைவதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக கார்கில்ஸ் அர்ப்பணித்துள்ளது.

german cooperation DEUTSCHE ZUSAMMENARBEIT | giz Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) GmbH | Tetra Pak PROTECTS WHAT'S GOOD | Cargills SINCE 1844

(c/12240) (45.6.3)


## மாடுகளுக்கு ஏற்பட்டுள்ள நோய் விழிப்புடன் செயற்பட வேண்டும்

**வவுனியா கால்நடைத் திணைக்களத்தினர் அறிவிப்பு**

வவுனியா.பெப்.24

வவுனியா மாவட்டத்தில் மாடுகளுக்கு ஏற்பட்டுள்ள நோய் குறித்து பொதுமக்கள் விழிப்புடன் செயற்படுவதுடன் அவற்றின் இறைச்சியை உணவாகப் பயன்படுத்தும் போது விழிப்புணர்வுடன் செயற்படுமாறு கால்நடை மருத்துவப் பிரிவினர் அறிவித்தல் வழங்கி வருகின்றனர்.

மாடுகளுக்கு ஏற்பட்டுள்ள நோயைக் குணப்படுத்துவதற்குரிய வைத்திய ஆலோசனைகளைப் பெறுமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டு வருகிறது. வவுனியாவில் மாடுகளுக்கு நோய் ஏற்பட்டுள்ளதால் அதன் இறைச்சியை உண்பதில் விழிப்புடன் செயற்படுமாறும் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை நோயினால் பாதிக்கப்படாத மாடுகளின் பாலைப் பருகுவதில் எந்தவித சிக்கல்களும் இல்லை. ஆனால் இதிலும் அவதானமாகச் செயற்படுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-402)



நாவற்குழி சந்தியில் ரயில் நிலையக் கட்டட வேலைகள் மிக வேமாக இடம்பெற்று வருகின்றன. நாவற்குழி சந்திக்கு தெற்குப் பக்கமாக அமைக்கப்பட்டு வரும் இந்த ரயில் நிலையம் நவீன வசதியைக் கொண்டதாக மிகப் பெரிய கட்டடமாக அமைக்கப்படுகிறது. நிர்மாணப் பணிகளில் தென்பகுதித் தொழிலாளர்கள் இரவு பகலாக ஈடுபட்டு வருவதையும் காணக் கூடியதாகவுள்ளது. (ஒ-288)

## பாலை மரக் குற்றிகளை கடத்தியவர்கள் கைது

**கனகராயன்குளம் பொலிஸாரால்**

வவுனியா, பெப்.24

சட்டவிரோதமாக பாலைமரக் குற்றிகளை எடுத்துச் சென்ற ஐந்து பேர் கனகராயன்குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியான சுஜீவகுமார தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அதிகாலை வேளையில் 14 பாலை மரக் குற்றிகளை ஓடுகளுக்குள் மறைத்தவாறு இவர்கள் வாகனத்தில்வருகை தந்தபோது பொதுமக்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில் இந்த ஐந்து பேரும் கைது செய்யப்பட்டு வவுனியா மாவட்ட நீதி மன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டனர். இந்த மரக் குற்றிகள் மன்னகுளம் பகுதியில் இருந்து கொண்டு வரப் பட்டதாகவும் அந்தப் பகுதி மக்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் கனகராயன் குளப்பகுதியில் உள்ள ஏ-9 வீதியில் இருந்து தாம் இதனைக் கைப்பற்றியதாக வும் பொலிஸார்மேலும்தெரிவித்தனர்.

மேலும் வன்னிப் பகுதியில் சட்டவிரோதமாக கடத்தப்படும் மரங்கள் தொடர்பாகத் தமக்குத் தெரியப்படுத்துமாறு கனகராயன்குள பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.(க-402)

## புதிய நெறியாள்கையை கையாண்ட விளையாட்டுக் குழுவுக்குப் பாராட்டு



*இடைவேளை நிகழ்வில் மாணவரின் இசை ஆட்டம்*

இல்ல மெய்வன்மைப் போட்டிகளில் புதிய விடயங்களை கையாண்டு ஏனைய அதிபர்கள், விருந்தினர்கள், பெற்றோர்கள் ஆகியோரின் பாராட்டுதல்களைப் பெற்றுள்ளது மட்டுவில் தெற்கு அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் வித்தியாலய விளையாட்டுக் குழு.

நேற்றுமுன்தினம் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்ற இல்ல மெய்வன்மைப் போட்டிகளின் இடைவேளை நிகழ்வான இசையும், அசைவும் நிகழ்வில்100 மாணவர்களைப் பயன்படுத்தி காவடியாட்டம், யாழ்.இசை ஆட்டம் மற்றும் ஒயிலாட்டம் ஆகியவற்றைத் தனித்தனியாக நடத்தி அவை அனைத்தையும்ஒன்றிணைத்து ஒரே நிகழ்வாக அமைத்து அனைவரின் பாராட்டுக்களையும் பெற்றனர்.

இதேவேளை போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான சான்றிதழ் வழங்குவதற்கு மூன்று மேடைகள் அமைத்து மூன்று விருந்தினர்கள் மூலம் சான்றிதழ்களையும் வெற்றிக் கிண்ணங்களையும் வழங்கச் செய்துள்ளதும் அனைவரின் கவனத்தையும், பாராட்டையும் பெற்றுள்ளன. (வ-9)

## பளை மத்தியஸ்தர் செயற்பாடுகள் மத்திய கல்லூரியில்

பளை, பெப்.24

பளை மத்தியஸ்தர் சபை செயற்பாடுகள் நேற்று தொடக்கம் பளை மத்திய கல்லூரியில் நடைபெறும் என்று தவிசாளர் வ.ஜீவரத்தினம் அறிவித்துள்ளார்.

சபையின் செயற்பாடுகள் இதுவரை பளை பிரதேச செயலகத்தில் இடம்பெற்று வந்ததாகவும் நீதி அமைச்சின் பணிப்பின் பேரில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதா்கவும் அவர் மேலும் தெரிவித்தார். (வ-9)

## பாடசாலை தமிழ்த்தினப் போட்டி பெப்.28 இற்குள் நடத்தி முடிக்குக

*சுற்றறிக்கை அனுப்பி வைப்பு*

அச்சுவேலி,பெப்.24

அகில இலங்கை தமிழ் மொழித்தின பாடசாலை மட்டப் போட்டிகள் இந்த மாதம் 28ஆம் திகதிக்குள் நடத்தி முடிக்கப்பட வேண்டும். அது குறித்து 2014 - 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியை உள்ளடக்கிய புதிய சுற்றறிக்கையை மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர்கள், மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், வலயக்கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

2014 - 2018 காலப்பகுதிக்கான தமிழ்மொழித்தினத்துக்கான அடிப்படை நிபந்தனைகள், ஒழுங்கு விதிகளை உள்ளடக்கிய குறித்த சுற்றறிக்கையுடன் ஆண்டு தோறும் கல்வி அமைச்சால் அனுப்பி வைக்கப்படும் இணைப்பில் தெரிவிக்கப்படும் விடயங்களையும் உள்ளடக்கி தமிழ் மொழித்தினப் போட்டிகள் நடத்தப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அந்த சுற்றறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

"தமிழ் மொழித்தினப் போட்டிகள் பாடசாலை மட்டம், கல்விக் கோட்ட மட்டம், கல்வி வலய மட்டம், மாவட்ட மட்டம், மாகாண மட்டம் என நடத்தப்பட்டு ஒன்பது மாகாணங்களில் இருந்தும் தெரிவு செய்யப்படும் போட்டியாளர்கள் தேசிய மட்டத்தில் அகில இலங்கை ரீதியில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்வதற்கு அனுமதிக்கப்படவுள்ளனர்.

தேசிய மட்டத்திலான போட்டிகள் முத்தமிழ் வித்தகன் சுவாமி விபுலானந்த அடிகளின் நினைவாக நடைபெறும். தேசிய மட்டத்தில் முதல்மூன்று இடங்களையும் மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி மற்றும் உயர்கல்வி வாய்புகளுக்கு மேலதிக புள்ளிகள் வழங்கப்படும்.

தரம் 4ஆம் வகுப்பில் இருந்து தரம் 13ஆம் வகுப்பு வரையான மாணவர்களுக்கு பதினொரு பிரிவுகளிலும் ஐம்பது நிகழ்வுகளில் போட்டிகள் நடைபெறவுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-11)



யாழ்.நகரின் அழகுபடுத்தலில் யாழ்.மாநகர சபையால் மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள தண்ணீர் அலங்காரத் தொட்டி கட்டாக்காலி மாடுகளின் தண்ணீர்த் தாகத்தையும் தீர்த்து வைக்கிறது. (வ-14)

## குடத்தனையில் சட்டவிரோத மண் அகழ்வு

குடத்தனை, பெப்.24

வடமராட்சி கிழக்கு, குடத்தனைப் பிரதேசத்தில் சட்டவிரோத மண் அகழ்வு சுதந்திரமாக இடம்பெறுவதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

குடத்தனை 6 ஆம் கட்டைப் பகுதியில் இராணுவ காவல் நிலையம் மற்றும் மணல் காட்டுச் சந்தியில் இருந்த இராணுவ பொலிஸ் பரிசோதனை நிலையம் என்பன அகற்றப்பட்ட நிலையில் சட்ட விரோத மண் அகழ்வு இடம்பெற்று வருகின்றது.

ஆரம்பத்தில் இரவு வேளைகளில் இடம்பெற்ற சட்டவிரோத மண் அகழ்வு தற்போது பகல் வேளைகளிலும் இடம்பெறுகின்ற அதேவேளை குறித்த மண் ஏற்றிய வாகனங்கள் குடத்தனை வரணி வீதியூடாக பயணித்து பின்பு பருத்தித்துறை கொடிகாமம் வீதி ஊடாக வடமராட்சி பிரதேசத்துக்குக் கொண்டு செல்லப்படுவதாகவும் கூறப்பட்டது. (வ-122)

## இரு பாடசாலைகளே பங்குபற்றிய வில்லுப்பாட்டுப் போட்டி - பெற்றோர் கவலை

தென்மராட்சி, பெப்.24

தென்மராட்சி கல்வி வலயத்தில் இடைநிலைப் பாடசாலைகளின் சைவ சமய பாட ஆசிரியர்களுக்கு இடையில் நடத்தப்பட்ட வலய மட்ட வில்லுப்பாட்டுப் போட்டியில் இரண்டு பாடசாலைகள் மட்டும் கலந்து கொண்டமை குறித்து பெற்றோர் கவலை தெரிவித்தனர்.

60 பாடசாலையைக் கொண்ட தென்மராட்சி கல்வி வலயத்தில் 31 பாடசாலைகள் இடைநிலை மற்றும் உயர்தர வகுப்புகளுடன் நடத்தப்படுகிறது. ஒவ்வொரு பாடசாலையிலும் சைவ சமய பாடம் போதிக்க ஆசிரியர்கள் உள்ளனர்.

இந்த நிலையில் இந்த வருடம் சமய விழுமியங்களைப் பிரதிபலிக்கும் வகையில் சைவ சமய பாட ஆசிரியர்களுக்கு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டன. இந்த 31 பாடசாலைகளில் ஐந்து பாடசாலைகளே போட்டியில் கலந்துகொள்ள விண்ணப்பித்திருந்தனர்.

நேற்று முன்தினம் சாவகச்சேரி சக்தி அம்மன் தமிழ் வித்தியாலயத்தில் போட்டிகள் நடைபெற்ற வேளையில் இரண்டு பாடசாலைகள் மட்டுமே கலந்து கொண்டன.

வலய மட்டப் போட்டிகளைப் பார்வையிட பெருமளவு பெற்றோர்கள் பாடசாலையில் கூடியிருந்தனர்.

நேற்று முன்தினம் காலை 8.30 மணிக்கு போட்டிகள் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டதால் காலை 8 மணிக்கே பெற்றோர்களும், மாணவர்களும் பாடசாலை வளாகத்தில் கூடியிருந்தனர். வில்லுப்பாட்டு நிகழ்வில் ஐந்து பேர் கொண்ட ஆசிரியர்கள் குழு கலந்து கொண்ட போதிலும் அவர்கள் காலை 9 மணிக்குப் பின்னரே போட்டி நடைபெறும் பாடசாலைக்கு வருகை தந்திருந்தமை பெற்றோர் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியது. மாணவர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ வேண்டிய ஆசிரியர்களே நேர முகாமைத்துவத்துக்கு முன்னுரிமை கொடுக்காதது குறித்துக் கவலை தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## சேவை நலன் பாராட்டு

மாங்குளம், பெப்.24 வவுனியாவடக்குகல்வி வலய நெடுங்கேணி கோட்டக்கல்விப்பணிப் பாளராகப் பல ஆண்டு காலம் கடமையாற்றி ஓய்வுபெற்ற நெடுங் கேணிகோட்டக்கல்விப் பணிப்பாளர் அ.விநா யகமூர்த்திக்கு நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு சேவை நலன் பாராட்டு விழாநடைபெறவுள்ளது. நெடுங்கேணி மகா வித்தியாலய அதிபர் மு.குகதாசன்தலைமை யில்புளியங்குளம்ஆசி ரியர் வளநிலையத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்குபிரதமவிருந் தினராக வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி பராசக்தி கணேசலிங் கம் கலந்துகொள்வார். (ஒ-422)



## வாழைகளை வெட்டிச் சாய்த்த விசமிகள்

சுன்னாகம், ஐயனார் கோயிலடிப் பகுதியிலுள்ள வீட்டுத் தோட்டத்தில் புகுந்த விசமிகள் சிலர், அங்கு நின்ற வாழை மரங்களைத் தாறுமாறாக வெட்டிச் சாய்த்துள்ள னர். கடந்த புதன்கிழமை நள்ளிரவு வேளை மின்சாரம் தடைப்பட்டிருந்த போது இந்த அக்கிரமச் செயல் நடந்துள்ளது. முப்பதுக்கும் மேற்பட்ட வாழைகள் வெட்டி அழிக்கப்பட்டுள்ளன. (ஒ)

# இல்ல மெய்வன்மைப் போட்டி

உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் மு.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.சர்வேஸ்வரன், சிறப்பு விருந்தினராக பாடசாலை பழைய மாணவன் சி.சிவரூபன் ஆகியோர் கலந்துகொள்வர். (ந)

♦ ♦ ♦

யாழ்.புத்தூர் மடிஹேற பஞ்சசீஹ வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அதிபர் கு.ரவீந்திரன் தலைமையில் நடைபெறும்.
நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆ.சு.சற்குணராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.வலய ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் செ.தியாக ராஜா, ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி மைதிலி தேவராஜா ஆகியோரும் கலந்து கொள் வார்கள். (ந-9)

♦ ♦ ♦

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை செவ்வாய்க்கிழமை பி.ப.1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம்பெறும்.
கல்லூரி அதிபர் த.அம்பலவாணர் தலைமையில் நடைபெறும் போட்டிக்கு முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரும், சிறப்பு விருந்தினராக கல்லூரி பழைய மாணவனும், தென்மராட்சி பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தருமான க.கார்த்தி கேசும் கலந்து கொள்வர். (ந-9)

♦ ♦ ♦

மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலய வருடாந்த இல்ல மெய் வன்மைப் போட்டிகள் நாளை செவ்வாய்க்கிழமை பி.ப.1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் இடம்பெறும்.
வித்தியாலய அதிபர் திருமதி ஜெ.தேவேஸ்வரன் தலைமை யில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியமும், சிறப்பு விருந்தினர்களாக மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலய அதிபர் வே.கந்தசாமி, வலய ஆரம்பப் பிரிவு ஆசிரிய ஆலோசகர் அ.மனோரஞ்சிதன் ஆகியோர் கலந்துகொள்வர். (ந-9)

♦ ♦ ♦

ஒஸ்மானியாக்கல்லூரி வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரியின் ஜின்னா மைதானத்தில் அதிபர் மௌலவி எம்.எஸ்.ஏ.எம். முபாறக் தலைமையில் நடைபெறும்.
பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் இ.ஆனல்ட், சிறப்பு விருந்தின ராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆய்யூப் அஸ்மின், யாழ்.கோட்டக்கல்விப் பணிப்பாளர் சு.சண் முககுமார் ஆகியோர் கலந்து கொள்வர். (ந)

♦ ♦ ♦

வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாசாலை இல்லங்களின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பாடசாலை அதிபர் வை.விஜய குமாரன் தலைமையில் இடம்பெறும்.
நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம், சிறப்பு விருந்தினராக அழகியல் பிரிவின் உதவிக்கல்விப் பணிப் பாளர் கோ.கைலாச நாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (ந-122)

## சங்காபிஷேகம்

நவாலியூர் கனையோடை கண்ணகை அம்மன் ஆலய சங்காபிஷேக நிகழ்வு நாளை மறு தினம் புதன்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளன.
நிகழ்வில் ஈழத்தில் தலைசிறந்த தவில் நாதஸ் வரக் கலைஞர்களின் இன்னிசைக் கச்சேரி யும் இடம்பெறும்.
இரவு 9 மணிக்கு வசந்த மண்டபப் பூசைகள் நடைபெற்று அம்மன் பூந்தண்டிகையில் வீதி வலம் வருவார். (ந)

## கண்ணீர் அஞ்சலி



எமது சபையின் கொக்குவில் பொது நூலகத்தில் பணியாற்றும்
**செல்வநாதன் நிரோசன்**
அவர்களின் அன்புத்தந்தை
**வீரசிங்கம் செல்வநாதன்**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
நண்பர்கள்
நல்லூர் பிரதேசசபை (45072)(3.8.4)

## மரண அறிவித்தல்



**திருமதி அழகம்மா சண்முகதாஸ்**

சாவகச்சேரி, கல்வயல், ஓராம் கட்டையைச் சேர்ந்த திருமதி அழகம்மா சண்முகதாஸ் நேற்று முன்தினம் (22.02.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகதாஸின் அன்பு மனைவியும், உமாகாந்தன், உமாரமணி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயகாந்தன் (பிரான்ஸ்), மங்களேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், டிலான், டினுஜா, சிசான், பரிதி, ஜனனிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சிவஞானம், செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.02.2014) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மீசாலை வடக்கு வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஓராம் கட்டை,
கல்வயல், சாவகச்சேரி. (8/7650)(7.8.3)
தகவல்: குடும்பத்தினர்.
077 561 5003

## தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞரின் சடலம் மீட்பு

தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் ஒன்று மீட்கப்பட்ட சம்பவம் சனிக்கிழமை வரணி வடக்குப் பிரதேசத்தில் இடம் பெற்றது.
வரணி வடக்கு பாலசுப்பிரமணியம் சதீசன் என்னும் இளைஞரின் சடலமே அவரது வீட்டில் இருந்து மீட்கப்பட்டது.
பெற்றோர் வீட்டில் இல்லாதசமயம் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்பட்டது. கொடிகாமம் பொலிஸார் விசாரணையை மேற்கொண் டுள்ளனர். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. (ந-122-9)

## 16 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் சிவஸ்ரீ
**சதாசிவக் குருக்கள் நித்தியானந்தக்குருக்கள்**
அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
திருமகன் ஸ்ரீ முத்துவைரவர் ஆலய பரிபாலன சபையினர்,
அரியாலை. (44034)(3.6.4)

## கண்ணீர் அஞ்சலி



நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும் பிரான்சில் வசித்துவந்தவருமாகிய நாரந்தனை தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத் தொண்டனும் சமூக சேவையாளனுமாகிய
**அமிர்தலிங்கம் செந்தூரன்**
அவர்கள் 16.02.2014 பிரான்சில் காலமானதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப் பதுடன, அன்னாரது ஆத்மாசாந்தியடைய எல்லாம்வல்ல தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.
சைவ மகா சபையினர்,
தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயம்,
நாராந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை (45068) (3.6.4)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர் வீ.ரங்கநாதன்
அவர்களின் பாசமிகு சகோதரர்
**வீரசிங்கம் செல்வநாதன்**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஆசிரியர், கல்விசாரா ஊழியர் நலன்புரிசங்கம்,
யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் (45006)(3.6.4)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி சறோஜாதேவி கருணாகரனின்
பாசமிகு தந்தையார்
**வேலுப்பிள்ளை அரியதுரை**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடையப்பிரார்த்திக்கின்றோம்.
ஆசிரியர், கல்விசாரா ஊழியர் நலன்புரிசங்கம் (45005)(7.8.3)
யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

## மரண அறிவித்தல்

**ஆறன் துரையப்பா**



வசாவிளானைப் பிறப்பிடமாகவும், 2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தை வசிப்பிட மாகவும் கொண்ட ஆறன் துரையப்பா நேற்று முன்தினம் (22.02.2014) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறன்-பொன்னி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான தம்பிமுத்து-சின்னம்மா தம்பதி யரின் அன்பு மருமகனும், யோகம்மாவின் பாசமிகு கணவரும், பிரேம்குமார் (நெதர் லாந்து), சுதர்மினி (சமுர்த்தி முகாமையாளர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் தந்தையும், கொறின் (நெதர்லாந்து), நவநீதன் (LIC ஆயுட் காப்புறுதி), ஆகியோரின் மாமனா ரும், துவாரகன் (யாழ்/இந்து ஆரம்ப பாடசாலை), துதிகரன் (யா/இந்து ஆரம்ப பாடசாலை), யோஷா (நெதர்லாந்து), ஷீலா (நெதர் லாந்து) ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான செல்லர், பசுபதி, மகேந்திரம் மற்றும் சுந்தரம், தம்பிஐயா, அன்னம்மா, செல்லம்மா ஆகியோரின் சகோ தரனும், காலஞ்சென்றவர்களான பரிபூரணம், முத்தையா, இராசமணி, சந்திரராசா மற்றும் யோகர், யோகராணி, சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2014) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.89, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். (45004)(7.8.3)
தகவல் : குடும்பத்தினர்.



சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் எழுதிய 'தவமுனிவனின் தமிழ் மந்திரம்' நூல் அறிமுக விழா சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோயில் மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது நூலாசிரியரை குப்பிளான் கற்பக விநாயகர் ஆலய முன்னாள் பிரதம குரு குமாரராஜக் குருக்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் காணலாம். (ஒ)

## திருமண வைபவத்தில் அன்பளிப்பாக கிடைத்த பணப்பொதி அபேஸ்

### *நல்லூர் மண்டபத்தில் சம்பவம்*

திருமண வைபவத்தில் மணப் பெண்ணுக்கு வழங்கப்பட்ட அன்பளிப்பு பணம் மண்டபத்தில் மக்கள் திரண்டிருந்த வேளையில் திருட்டுப்போன சம்பவம் ஒன்று கடந்த வாரம் நல்லூரில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

கடந்த வாரம் யாழ்.நகரைச் சேர்ந்த மணமகனுக்கும் சுன்னாகத்தைச் சேர்ந்த மணமகளுக்கும் மேற்படி திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெற்றது.

திருமண வைபவத்துக்கு உறவினர்கள், நண்பர்களென பெரும் எண்ணிக்கையானோர் வந்திருந்தனர். தாலி மணமகள் கழுத்தில் ஏறியதும் பலர் அறுகரிசி போட்டு வாழ்த்தி பலரும் கடிதவுறையில் பணத்தை வைத்து அன்பளிப்பாக வழங்கினார்கள். இவ்வாறு நூற்றுக் கணக்கானோரால் மணமகளுக்கு வழங்கப்பட்ட அன்பளிப்புகளை மணமகள் தனது சகோதரனிடம் கொடுக்க அவர் பை ஒன்றினுள் போட்டு தனது கையில் வைத்திருந்தார்.

இந்த நிலையில் திருமண விழாவுக்கு வந்த ஒருவருக்கு குளிர்பானம் வழங்குவதற்காக பணப் பையை மணப்பந்தலில் வைத்து விட்டு குளிர்பானத்தை எடுத்து உடனடியாக கொடுத்து விட்டு பணப்பையை எடுக்க வந்தபோது அங்கு அதனைக் காணவில்லை. ஒரு நிமிட இடைவெளியில் அதனை யாரோ திருடி விட்டார்கள். அதிர்ச்சியுற்ற சகோதரன் பல இடங்களிலும் தேடிய போதும் அது கிடைக்கவில்லை. திருடியது உள்திருடனா வெளித்திருடனா என்பது கூட ஒருவருக்கும் தெரியவில்லை.

விடயத்தை அறிந்த மணமகன், மணமகளுக்கு ஆறுதல் கூறி திருமண விழாவை கலகலப்பாக்கினார். இவ்வாறான ஒரு நாளில் மோசமான ஈனச்செயலில் ஈடுபட்டவனை கடவுளும் மன்னிக்க மாட்டான் என அங்கு கூடியிருந்தோர் ஆத்திரத்துடனும், கவலையுடனும் கருத்துத் தெரிவித்ததையும் அவதானிக்க முடிந்தது. (ஒ-288)

## வெளிமாவட்ட தனியார் பஸ்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

### *மன்னார் தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் அறிவிப்பு*

மன்னார், பெப்.24

திருக்கேதீஸ்வரத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி இடம் பெறவுள்ள மஹா சிவராத்திரி விழாவுக்காக தனியார் போக்குவரத்துச் சேவைகள் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ள நிலையில் ஏனைய மாவட்டங்களில் இருந்து திருக்கேதீஸ்வரம் ஆலயத்துக்கு போக்கு வரத்துச் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள் நியதிகளுக்கு அமைவாக தமது சேவையை மேற்கொள்ளுமாறு மன்னார் மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் ரி.ரமேஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சங்கத் தலைவர் மேலும் குறிப்பிடுகையில்; எதிர்வரும் 27 ஆம் திகதி இடம் பெறவிருக்கின்ற திருக்கேதீஸ்வர திருவிழாவை முன்னிட்டு கிட்டத்தட்ட 5 லட்சம் மக்கள் கலந்து கொள்வார்கள் என எதிர் பார்க்கப்படுகின்றது.

இதனால் அனைத்து மாவட்டங்களுக்குமான தனியார் சேவையை ஒழுங்குபடுத்த வேண்டியுள்ளது. இதற்கான இடம், அலுவலகம் ஆகியன எமது சங்கத்தினால் திருக்கேதீஸ்வர வளாகத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

எனவே யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் இருந்து பயணிகள்சேவையில் ஈடுபடும் பஸ்களுக்கான நேர அட்டவணையை பதிவு செய்து அனுப்பப்படுமாயின்-

அதன் பிரகாரம் எமது காரியாலயத்திலிருந்து மீண்டும் பஸ்கள்திரும்புவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப் படும்.

எனவே முறையான ஒழுங்கில் பதிவுகளை மேற்கொண்டு ஒத்துழைப்பு வழங்கி பயணிகளுக்கான சிறந்த சேவையை வழங்கியுதவுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம் என்று தெரிவித்தார். (க-56)

## தென்மராட்சி கல்வி வலயத்தில் நிறைவடைந்தன விளையாட்டுப் போட்டிகள்

தென்மராட்சி, பெப்.24

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் இந்த வருடத்துக்கான இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அனைத்தும் முடிவடைந்துள்ளன.

கடந்த பெப்ரவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் விளையாட்டுப் போட்டிகள் அனைத்தையும் முடிவுறுத்திமுதலாம்தவணைக்குரிய பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்தும் கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமென வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் சகல பாடசாலைகளின் அதிபர்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கியிருந் தார்.

இதனால் இறுதி நேரத்தில் ஒரேநாளில் ஐந்து பாடசாலைகளில் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நடத்தப்பட்டு ஓய்ந்தன.

போட்டிகளில் விருந்தினர்களாக வலயக் கல்விப் பணிப்பாளர், கோட்டக்கல்விப்பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர் கலந்து கொள்ளாத நிலையில் போட்டிகள் சிறப்புற நடத்தி முடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ந-9)


## 95 ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழா-2014
### அரியாலை, யாழ்ப்பாணம்

01. வடமாகாண ரீதியிலான மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப் போட்டி 06 பேர் 05 ஓவர்களைக் கொண்டது.
முடிவுதிகதி:24.02.2014
தொடர்பு:077 309 5745, 077 778 2192
02. கரப்பந்தாட்ட சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியிலான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி
தொடர்பு:077 617 6988
03. வடமாகாண ரீதியிலான வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி
தொடர்பு:077 791 7731
04. 'Super singer' வடமாகாண ரீதியில் நடத்தப்படும் மாபெரும் பாட்டுப் போட்டி
* போட்டியாளர் விரும்பும் எந்தவொரு சினிமாப் பாடலையும் பாடலாம்.
* பாட விரும்பும் பாடலின் 'கரோஸ் கீ ' ஐ இறுவெட்டில் பதிவு செய்து கொண்டு வந்து அதன் பின்னணி இசைக்கேற்ப பாட வேண்டும்.

தொடர்பு:077 778 2192

**விண்ணப்பமுடிவுதிகதி-04.03.2014**

விண்ணப்பங்கள் பெற்று ஒப்படைக்க வேண்டிய இடங்கள்

| | |
|---|---|
| ஸ்ரைல் பார்க் | காவேரி சில்க்ஸ் |
| 171, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் | 48, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம் |
| 021 222 8383 | 021 222 2333 |

நிர்வாகம்-சு.தி.கொ.விழா (45071)(3.6.4)


கொஞ்சம்........

செல்வ வேலாயுதம்

## மதிப்பும் மிதிப்பும்

முன்னர் இலங்கையின் முதல்தரச் சந்தைகளில் ஒன்றாக விளங்கிய அந்தச் சந்தையை அண்டிய தெருவோர ஆலமரத்தின் கீழ், கவிழ்த்து வைக்கப்பட்ட கடகத்தில் அவித்த பனங்கிழங்குகள் கட்டுக்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. "பல்சரில்" வந்தவர்கள் விலையைக் குறைத்துக் கேட்டு தமக்குச் சாதகமாக அமையாததால், "என்ன தண்ணியில் அவித்ததோ, நெருப்புக் காய்ச்சல் வந்தாலும், வேண்டாம் வாடா" என விமர்சித்து விட்டுப் போனதில் குறாவிப்போய் அமர்ந்திருந்தார் அந்தப் பெண். கூப்பிடு தூரத்திலிருந்த நடமாடும் "ரேஸ்ற்" வண்டியிலிருந்துவரும் இறால்வடை, இரத்தவறை, பொரித்த மீன் வாடையை மோந்தபடி இரண்டு, மூன்று நாய்கள் நாக்கைத் தொங்கவிட்டவாறு படுத்திருந்தன. கடைக்குக் கிட்ட நின்றால் அங்குவரும் குடிமக்களுடன் மிதிபட்டு, சில சமயம் கடிபட்டு முட்டப்பகை ஏற்படலாம் என்பதனால் மனித குணம் தெரிந்த முன்னெச்சரிக்கை போலும்– எங்கிருந்தோவெல்லாம் ரேஸ்ற், ஒரேஞ், அன்னாசி, றம்புட்டான், மங்குஸ்தான் எனக் கொண்டு வந்து விற்கின்றனர். அன்னாசியைத் துண்டங்களாக்கி, உப்பு மிளகாய்ப் பொடியைத் தூவியும், அடுப்பு மூட்டி சோளப் பொத்தியை உப்புப் போட்டு அவித்தும் விற்கின்றனர். அவற்றையெல்லாம் விலை கேளாமலே வாங்கி அந்த இடத்தில் நின்றபடியே சுவைக்கும் நம்மவர்கள், பதமாகப் பிடுங்கி, பக்குவமாக அவிக்கும் காலாதி காலமாக இதிலே ஊறியவர்களிடம் குறை காண்பவர்கள். பனங்கிழங்குக்கும் மேலே சொன்ன மேனிமினுக்கிச் செயற்பாடுகளினூடு விற்பனைக் கவர்ச்சியை ஏற்படுத்தினால் ஒருவேளை வாங்கலாம்.

உப்பாற்றங்கரைக் கோயில் முன்னுள்ள கடையில் நம்மவர் ஒருவர் அர்ச்சனைத் தட்டு விலை கேட்டுத் தர்க்கப்பட்டுக் கொண்டிருந்தார். தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலை, ஊதுபத்தி, கற்பூரம், சாமிப்பட்டு இத்தனையும் 200 ரூபாயா எனத் துள்ளுகிறார். இதே பொருள்களுடன் கூடுதலாக ஒரு வத்தகைப் பழம் வைக்கப்பட்ட அர்ச்சனைத் தட்டு கங்கை ஆற்றங்கரைக் கோயிலுக்குப் போனால், அங்கு 600 ரூபாவுக்கு வாங்க நிர்ப்பந்திக்கப்படுவீர்கள். அங்கே மட்டும் துள்ளலுமில்லை, துடிப்பதுமில்லை. மூச்சுப் பேச்சின்றி காசை அழுது விட வேண்டியதுதான். எம் இனத்தை மதிக்கத் தெரியாததனால் தான் எமக்கு இன்று இந்தக் கதியோ...?

## பயன்படாத குழாய்க் கிணறு

வவுனியா பிரதம தபாலகத்துக்கு முன்பாக உள்ள பயன்படாத நிலையிலுள்ள குழாய்க் கிணற்றைப் புனரமைத்து வழங்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

வவுனியா பிரதம தபாலகத்தின் முன்பாகக்காணப்படும்குழாய்க் கிணறு நீண்ட காலமாகப் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. இதனால் தபாலகத்துக்கு வரும் மக்களும், அங்கு பணிபுரியும் ஊழியர்களும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இது தொடர்பாகத் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுக்கப்பட்டு வந்த போதும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதனால்குடிதண்ணீரைப்பெறுவதில் தொடர்ந்து சிரமங்கள் ஏற்பட்டு வருகின்றன.(க-402)

## பொதுக் கூட்டமும் நிர்வாகிகள் தெரிவும்

நெடுங்கேணி வடக்கு "ஜொலிஸ்ரார்" விளையாட்டுக்கழகத்தின் மாதாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவும் இடம்பெற்றுள்ளன.

இதன்போது கழகத்தின் தலைவராக இ.பிரதீபனும், செயலாளராக இ.திவாகரனும், பொருளாளராக ப.இராஜேஸ்வரனும் தெரிவு செய்யப்பட்டனர்.மேலும் உபதலைவராக நா.நிஷாந்தன், உபசெயலாளராக தீ.ரஜீவன் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். (க-402)


## மரண அறிவித்தல்



### திருமதி இராசம்மா ஆறுமுகம்

சங்கானை ஆஸ்பத்திரி வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா ஆறுமுகம் நேற்று (23.02.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், சுளிபுரத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கோவிந்தன்-தெய்வானை தம்பதியரின் மருமகளும், கோவிந்தன் ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பிள்ளையினார், நடராசா, அப்பாத்துரை பொன்னுத்துரை, இராமநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2014) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: க.செல்வராசா (மகன்)**
**தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புப் பிரிவு, யாழ்ப்பாணம்.**
**T.P: 021 568 8114**
**ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.**

(சி/12566) (10.6.3)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 15 . 04 . 1930

விண்ணில் 25 . 01 . 2014



## அமரர் மாணிக்கம் சுந்தரம்பிள்ளை

**திதி : அபரபக்கநவமி**

ஈரவிழிகள் இன்னமும் காயவில்லை
இதயத்தின் வேதனையும் குறையவில்லை
இருந்தும் இவ்வுலகைவிட்டு நீங்கள் அகன்று
இன்றுடன் மாதம் ஒன்று ஆனதுவோ
என்றும் நாம் சிறக்கத்தந்தருள்வாய்
ஆசீர்வாதம்
ஐயாவே நின் பாதம் சரண் அடைவோம்
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

குமரகோட்டம் கோண்டாவில்

தங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

# தனக்கு தானே கல்லறையை அமைக்கும் மேர்வின்

கொழும்பு,பெப்.24

கொழும்பு, பொரளையில் உள்ள மயானத்தில் பிரபல சிங்கள பாடகர் எச்.ஆர்.ஜோதிபால வின் கல்லறைக்கு அருகில் தனக்கான கல்லறை நிர்மாணிக்க காணியை கொள்வனவு செய்துள்ளதாக அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்தார்.

களனி விஷ்ணு ஆலய வளாகத்தில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-



மேர்வின் சில்வா

பொரளை கனத்தை மயானத்தில் ஜோதிபாலவின் கல்லறைக்கு அருகில் புதைகுழிக்கான காணியை வாங்கியுள்ளேன். அதற்கான பணத்தை செலுத்தி விட்டேன்.

இன்னும் இரண்டு வாரங்களில் கல்லறையை நிர்மாணிப்பதற்கான அடிக்கல்லை நட்டு வைப்பேன்.

இந்தியாவில் உள்ள சோதிடர் ஒருவர் நான் ஏழு ஜென்மங்களை எடுத்து விட்டதாகவும் மீண்டும் பிறக்க வேண்டுமாயின் புத்தர் மீண்டும் பிறக்கும் போதே அந்த சந்தர்ப்பம் கிடைக்கும் என்றும் கூறினார். ஏழு முறை நான் பிறந்து விட்டதால், இனி எனக்கு மறு பிறவி இல்லை.

இதனால் பொரளை கனத்தையில் எனக்கு கல்லறையை நிர்மாணிக்க காணியை கொள்வனவு செய்தேன். நிர்மாணிக்க போகும் கல்லறையில் நான் எப்போது பிறந்தேன் என்பதை குறிப்பிடமாட்டேன்- என்றார். (ச)

## பண்டிதர் பரந்தாமன் கவின் கலைக்கல்லூரியின் அறிவித்தல்

பொது நிகழ்வுகள், போட்டி நிகழ்வுகள் ,சமய நிகழ்வுகள் என்பவற்றிற்கு நாடகம், தெருவெளி நாடகங்கள் என்பவற்றை ஆற்றுகைப்படுத்துவதற்கு கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. கிளிநொச்சி முல்லைத்தீவு விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

சுயவிவரம் அடங்கிய விண்ணப்பங்களை 28.02.2014 இற்கு முன்பாக கீழுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

அத்துடன் மேற்படி கல்லூரியில் ஓவியப்பாடம் 01.03.2014 அன்று காலை 9.00 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது.

**இயக்குநர்**
**பண்டிதர் பரந்தாமன் கவின் கலைக்கல்லூரி**
**இல.9 கனகபுரம்**
**கிளிநொச்சி.**

தொ.பே.இல:-
0772880830
0778049166

## மரண அறிவித்தல்

### நவரத்தினம் வரதராஜா

1ஆம் வட்டாரம் மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் வரதராசா நேற்று (23.02.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் (26.02.2014) புதன்கிழமை ஜேர்மனியில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

கோகு ல வீதி,
கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்
யாழ்ப்பாணம்

தகவல்: தம்பி
ந.சிவசுதன் (சீனி),
077 5799807, 021 2053968,
00492261639785

# மரண அறிவித்தல்



## திருமதி பரிமளாதேவி குமாரசாமி

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பரிமளாதேவி குமாரசாமி நேற்று (23.02.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வநாயகம் - கனகம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - அன்னம்மா தம்பதியரின் மருமகளும் குமாரசாமியின் அன்புமனைவியும் முரளிதரன், கிரிதரன் (கனடா), வினோதரன் (லண்டன்), உதயதரன் (லண்டன்), பஞ்சகேதரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயும் சாந்தினி, சுதர்சனா(கனடா), அனுசியா (லண்டன்), சபிதா (லண்டன்), யமுனா (லண்டன்) ஆகியோரின் மாமியும் காலஞ்சென்ற பஞ்சவர்ணம் மற்றும் மாணிக்கதேவி (கனடா) ஆகியோரின் சகோதரியும் கலையறிவன், சுடரோவியன், கோநிலா, துனசிதன், தனவின், நிந்தியா, தனிசியா, கவிசியா, துவாரகா, அஷ்வின் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2014) திங்கட்கிழமை பி.ப. 1.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டையடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**தகவல்:** குடும்பத்தினர்
முரளிதரன் - 077 8157287,
கிரிதரன் - 0014054245969,
வினோதரன் - 4402086955236,
உதயதரன் - 4407832187890

**இல. 267, சுகந்தநிலா,**
**பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.**

# உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை விமர்சிக்கும் நாராயணசாமி

## ராஜீவ்காந்தி கொலைக்குற்றவாளிகள் மீதான வழக்கில்

சென்னை, பெப்.24

ராஜீவ்காந்தி கொலைக் குற்றவாளிகளான பேரறிவாளன் உட்பட 7 பேர் விவகாரத்தில் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு முன்னுக்கு பின் முரணாக இருப்பதாக மத்திய இணை அமைச்சர் நாராயணசாமி விமர்சித்துள்ளார்.

புதுச்சேரியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும், ஆதாரத்தின் அடிப்படையில்தான் நீதிமன்றம் தீர்ப்பு வழங்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

நளினியை பரோலில் விடுவிக்கக் கூடாது என்று மத்திய அரசுக்கு தமிழக அரசு கடிதம் எழுதியதை சுட்டிக்காட்டிய நாராயணசாமி, அதற்குள் மனம் மாறியதற்கு நாடாளுமன்றத் தேர்தல்தான் காரணமா? என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த விவகாரத்தில் தமிழக அரசு இரட்டை வேடம் போடுவதாக குற்றஞ்சாட்டிய அவர், தமிழக அரசு தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள வேண்டும்- என்றார். (வ)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### அந்தமான்

களில் வாழும் தமிழ் மக்களும் ஈழத் தமிழர் பிரச்சினை தொடர்பில் பெரும் அனுதாபங்களைக் கொண்டிருக்கின்றனர் என்று சுட்டிக்காட்டும் யூனியன் நிர்வாகம் புலிகள் காடுகளில் மறைந்து பயிற்சி பெறுவதற்கும் ஆயுதங்களை பதுக்கி வைப்பதற்கும் உதவி செய்வதற்கு சாத்தியங்கள் உண்டு என்று யூனியன் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

பங்களாதேஷ், பர்மா, இலங்கை, தாய்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் தமது சில தீவுகளுக்குள் அத்துமீறி நுழைகிறார்கள் என்றும் யூனியன் நிர்வாகம் குறிப்பிட்டுள்ளது. (உ-ஜ)

### ஆசியாவில்

முறியடிப்பதற்கு எதிர்வரும் தேர்தலில் வெற்றிலை சின்னத்துக்கு வாக்களிக்கு மாறும் மூத்த அமைச்சர்கள் நேற்று கோரிக்கை விடுத்தனர்.

தேர்தல், ஜெனீவா விவகாரம் தொடர்பிலான ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முற்பகல் சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. இதன் போது கருத்து வெளியிட்ட அமைச்சர்கள் மேலும் கூறியதாவது:

அமைச்சர் வாசு தேவநாணயக்கார

ஜெனீவாக் கூட்டத்தொடரில் இலங்கையை எதிர்த்து அமெரிக்கா பிரேரணை ஒன்றைக் கொண்டுவரவுள்ளது. இதற்குக் காரணம், அமெரிக்காவின் ஆதிக்கத்தை ஆசியப் பிராந்தியத்தில் நிலை நிறுத்திக் கொள்ளபாதுகாப்பானநாடொன்று அதற்குத் தேவைப்படுகிறது.

இதற்காகவே தற்போது இலங்கையை வளைத்துப் போட அமெரிக்கா சதித்திட்டம் தீட்டுகிறது. ஏற்கனவே, ஜே.ஆர். ஜயவர்த்தனா காலத்தில் திருகோணமலைத் துறை முகத்தைத் தன்வசப்படுத்திக்கொள்ள அமெரிக்கா முயற்சித்தது. எனினும், அதற்கு நாம் அன்று இடமளிக்கவில்லை. இந்த காரணத்தை தற்போது ஐ.நா. மூலம் செயற்படுத்திக் கொள்ளவே அமெரிக்கா முயற்சித்து வருகிறது.

இலங்கையை எப்படியாவது வளைத்துத் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர வேண்டும் என்பதே இவர்களின் குறிக்கோளாகும். இதற்காகத்தான் ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராகப் பிரேரணையையும் கொண்டுவரவுள்ளது.

அத்தோடு, அமெரிக்காவின் இது போன்ற செயற்பாடுகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சி வழிசமைத்துக் கொடுப்பது போலத்தான் தற்போது அது செயற்பட்டுக் கொண்டு வருகிறது. போதைப் பொருள் குறித்து அரசிற்கு எதிராக அவர்கள் கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையே இதற்கு சிறந்த உதாரணமாகும்.

இவர்களின் இந்தச் செயற்பாடே அமெரிக்காவுக்கு இலகுவில் இலங்கை விடயத்தில் நுழைய அனுமதியளித்து விடும். இதனை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். அமெரிக்காவுக்கு நாம் இடமளிக்கக் கூடாது. ஆகவே, நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தல்களில் வெற்றிலைச் சின்னத்திற்கு வாக்களித்து அரசை அமோக வெற்றியடையச் செய்ய வேண்டும்" என்றார்.

அத்தோடு, ' போர் தவிர்ப்பு வலயம்' உள்ளிட்ட ஆவணப் படங்கள் இந்தியாவில் தடை செய்யப் பட்டுள்ளமை வரவேற்கத் தக்க விடயமாகும் என்றும் அமைச்சர் வாசுதேவ இதன் போது தெரிவித்தார்.

இதன் தயாரிப்பாளர் கெலும் மெக்ரேவுக்கு விசா வழங்க இந்திய அரசு மறுப்புத் தெரிவித்துள்ளமையும் சிறந்ததோர் விடயமாகும் என்றும் அவர் இதன் போது சுட்டிக் காட்டினார்.

அமைச்சர் சம்பிக்க ரணவக்க

அதேவேளை அரசின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க கருத்துத் தெரிவிக்கையில்,

மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஜெனீவாக் கூட்டத் தொடரின் போது ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு எதிராக அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கவுள்ளார்.

இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றச்சாட்டுகள், மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச விசாரணை அவசியம் என்பவற்றையே இவரது அறிக்கை வலியுறுத்தியுள்ளது. சக்தி மிக்க நாடுகளின் ஒத் துழைப்பின்றி இலங்கை விடயத்தில் தலையிடுவதற்கு மனித உரிமைகள் சபைக்கு அதிகாரம் இல்லை. ஒரு நாடு வாக்களிக்காவிடினும் மனித உரிமைகள் சபையின் நிறைவேற்று அதி காரம் இலங்கை விடயத்தில் செல்லுபடியாகாது. அத்தோடு, எமது அனுமதியின்றி அவர்களால் எதையும் செய்ய முடியாது.

ஐ.நா. செயலாளர் பான் கீ மூனுக்கும் இலங்கை விடயத்தில் தலையிடுவதற்கு உரிமையில்லை. அவர் ஐ.நாவில் வேலை பார்க்கும் ஒரு சாதாரண 'கிளார்க்' ஆவார். ஆகவே, அவருக்கும் எந்த உரிமையும் கிடையாது. அதுமட்டுமல்லாது, இவ்வாறான அழுத்தங்களை விடுத்து இலங்கையில் தற்போதுள்ள சுதந்திரம், ஜன நாயம், சமஉரிமை என்பவற்றை திசை திருப்பி, பங்களாதேஷ், பாகிஸ்தானின் நிலைமைக்கு இலங்கையை கொண்டுவரவே சர்வதேசம் தற்போது முயற்சித்து வருகிறது. இதிலிருந்து நாட்டைக் காப்பாற்ற வேண்டும் என் றால் மக்கள் வெற்றிலைச் சின்னத் திற்கே வாக்களிக்க வேண்டும்" என்றார்.

### இலங்கையு

கைத்துறை அனுமதி மறுத்துள்ளது.

இலங்கையுடனான நட்புறவை பாதிக்கும் என்ற காரணத்தினாலேயே இந்தப் படத்தை திரையிட அனுமதி அளிக்கப் படவில்லை என்று தமக்கு காரணம் கூறப்பட்டுள்ளது என படத்தின் இயக்குநர் கெலும் மெக்ரே பி.பி.சியிடம் தெரிவித்துள்ளார்.

"இந்தியாவின் இந்த அறிவிப்பு அதிர்ச்சி அளிக்கின்றது. மிகவும் தவறான முடிவு. இலங்கையுடனான நட்புறவைப் பாதிக்கும் என்ற காரணத்தை அவர்கள் சொல்லியிருப்பது, குறுகிய கால அரசியல் அனுபவங்களை அடிப் படையாகக் கொண்டது. உண்மைநிலைவரம் ஒன்றை மக்கள் தெரிந்து கொள்ள முடியாதபடி மறைக்கின்ற நடவடிக்கை இதுவாகும்" என்றும் அவர் கூறியுள்ளார்.

"இது நிச்சயமாக இந்தியாவுக்கு பிரச்சினைக்குரிய, அசௌகரியத்துக் குரிய நிலைமைதான். நீதி கிடைப்பதற்கு உண்மையை நிலைநாட்டுவது அவசியம். அந்த நீதிதான் அரசியல் தீர்வொன்றையும் அமைதியான சூழலையும் எட்டுவதற்கு அடிப்படை ஆதாரமாக அமையமுடியும். இப்படி இந்தப் படம் மக்களைச் சென்றடைவதைத் தடுப்பதன் மூலம் இந்தியா தவறிழைக்கிறது என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. போர் தவிர்ப்பு வலயம் படத்தில் வருகின்ற அநேகமான காட்சிகள் மனதை பெருமளவில் பாதிக்கக் கூடியவை என்று இந்திய திரைப்பட தணிக்கைச் சபை இன்னொரு காரணத்தையும் கூறியிருக்கிறது.

இந்தியத் திரைப்படத் தணிக்கைத் துறையின் தீர்மானம் தொடர்பில் மேன்முறையீடு செய்யும் எண்ணம் இல்லை. மலேசியா, நேபாளம் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளிலும் எல்லா மக்களும் இலகுவாகப் பார்க்கக்கூடிய விதத்தில் இணையத்தில் படம் வெளி யிடப்படுகிறது.

மலேசியாவில் இந்தப் படத்தைக் காண்பித்த குற்றத்திற்காக 3 ஆண்டு கள் வரை சிறை செல்லக்கூடிய வழக்கொன்றை உள்ளூர் மனித உரிமைகள் ஆர்வலர்கள் எதிர்நோக்கியுள்ளனர். தமது படம் திரையிடப்படுகின்றமை தடுக்கப்படுகின்ற சம்பவங்களின் பின் னணியில் இலங்கை அரசே உள்ளது என்றும் அவர் கூறினார்.

அரசியலே காரணம்

அதேவேளை, போர் தவிர்ப்பு வலயம் என்ற சனல் 4 இன் திரைப்படத்தை இந்தியத் திரையரங்குகளில் வெளியிட இந்திய திரைப்பட தணிக்கைத்துறை அனுமதி மறுத்துள்ளதற்கு அரசியலே காரணம் என்று திரைப்படத் தணிக்கைத்துறையின் முன்னாள் உறுப்பினர் வழக்கறிஞர் வி. பாலு தெரிவித்துள்ளார்.

இந்தத் திரைப்படத்தை இந்திய திரையரங்குகளில் காட்ட அனுமதித் தால் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவை அது பாதிக்கும் என்று தணிக்கைத்துறையினால் கூறப்படும் காரணம் இந்திய தணிக்கைச் சட்டப்படி சரியானதே என்று கூறும் பாலு, ஆனால் இந்த மாதிரியான தடைகள் வெறும் சட்டப்பிரிவுகளின் அடிப்படையில் மட்டும் அளிக்கப்படுவதில்லை என்றும் தெரிவித்தார்.

இந்திய நாடாளுமன்றத் தேர்தல்கள் இன்னும் சில மாதங்களில் நடக்கவிருக்கிறது. முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றவாளிகள் என்று தண்டனை விதிக்கப்பட்டு இன்னமும் சிறையில் இருக் கும் ஏழு பேரின் விடுதலை, தமிழ் நாட்டு அரசியலில் ஒரு அரசியல் பிரச்சினையாக உருவெடுத்திருக்கிறது. இந்த பின்னணியில் இந்த திரைப் படத்தை திரையரங்குகளில் அனுமதித் தால் அரசியல்ரீதியிலான பிரச்சினை கள் உருவாகலாம் என்று இந்திய அரசு நினைப்பதும் இந்த முடிவுக்கான காரணமாக இருக்கும் என்றும் கூறினார் பாலு.

இணையத்தில் முழுமையாக கிடைக்கும் இந்த ஆவண படம் ஏற்கனவே பல மில்லியன் பேரால் பார்க்கப்பட்டு விட்ட நிலையில், இந்திய அரசின் திரைப்படத் தணிக்கைத் துறையின் இதுபோன்ற சான்றிதழ் மறுப்புக்கள் எந்த விதத்திலும் இந்த ஆவணப் படத்தை தடுத்துவிட முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

### தமிழக

கைதானவர்களை விடுதலை செய்ய வேண்டும் என தமிழக முதல்வர் ஜெயலலிதா விடுத்துள்ள அறிவிப்புக்கு தமிழகத்திலும் தற்போது எதிர்ப்புகள் கிளப்பியுள்ளன. அத்தோடு, மத்திய அரசான காங்கிரஸும் இதற்கு கடுமையான எதிர்ப்பையே தெரிவித்து வருகிறது.

ஜெயலலிதா எடுத்துள்ள இந்தத் தீர்மானமானது முழு தெற்காசியாவுக்கும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும். ஜெயலலிதா கூறுவதைப் போன்று அவர்கள் விடுதலை செய்யப் படக் கூடாது. இவ ரின் செயற்பாடு குறித்து தெற்காசியா மிகவும் அவதானமாகச் செயற்பட வேண்டும்" என்றார்.

அதேவேளை, ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவிக்கையில்,

இன்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, கருணாநிதி, விஜய்காந்த், வைகோ, நெடுமாறன் மற்றும் சிதம்பரம் போன்றோர் அரசியலை ஒரு கால் பந்தாட்ட விளையாட்டைப் போன்றே நடத்திக் கொண்டு வருகிறார்கள். தமிழகத்தில் தற்போது மின்சாரம், உணவு என்பவை இல்லாமல் அங்குள்ளவர்களே பெரிதும் துன்பகரமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டு வருகிறார்கள்.

ஆனால், இந்த அரசியல்வாதிகளோ அவர்களின் நாட்டு பிரச்சினைகளைப் பற்றி பாராமல் எமது நாடு விடயத்தில் மூக்கை நுழைத்து அரசியல் கால் பந்தாட்டம் நடத்துகிறார்கள். ராஜீவ் காந்தியின் கொலைக் குற்றவாளிகளை விடுதலை செய்ய வேண்டும் என ஜெயலலிதா அறிவித்துள்ளமையே இதற்கு சிறந்ததோர் உதாரணமாகும்.

முக்கிய குற்றவாளிகளான நான்கு பேரில் மூன்று பேர் இலங்கை நாட்டின் குடியுரிமையைப் பெற்ற தமிழீழ விடு தலைப் புலிகளின் உறுப்பினர்களாவர். ஒரு பிரதமரை கொலை செய்த குற்றவா ளிகள் இவர்கள்.

அதேநேரத்தில் இந்திய நாடாளுமன்ற தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரான அப்ஸல் குருவை காஷ்மீரின் பலத்த எதிர்ப்பையும் மீறி இந்திய மத்திய அரசு தூக்கில் போட்டது. அவ்வாறு இருக்கையில் ஒரு பிரதமரைக் கொலை செய்தவர்களை இந்திய அரசுஎவ்வாறு விடுதலை செய்ய முடியும்? அவ்வாறு செய்தால் இந்திய அரசு முஸ்லிம்களுக்கு ஒரு சட்டத்தையும், தமிழர்களுக்கு ஒரு சட்டத்தையும் விதிப்பதாகவே கருதப்படும்.

முருகன், நளினி, சாந்தன், பேரறிவாளன் ஆகியோரது விடுதலைக்கு காங்கிரஸ் கட்சியினர் தவிர இந்தியர்களும் கடும் எதிர்ப்பினையே தெரிவித்துள்ளார்கள்.

ஆனால், வடமாகாண சபை முதலமைச்சர் விக்னேஸ்வரனோ ஜெயலலிதாவின் அறிவிப்புக்கு ஆதரவு வழங்கியுள்ளார். இவரின் செயற்பாடு மிகவும் பிழையான ஒன்றாகும். இவர்களின் விடுதலையை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளவே முடியாது" என்றார்.

அத்தோடு, அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகளுக்கு கடுமையான எதிர்ப்பினைத் தெரிவித்தார்.

புலம்பெயர் தமிழர்களினதும், நாட்டிற்கு வெளியே வசிக்கும் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களின் பேச்சைக் கேட்டே தமிழ்க் கூட்டமைப்பு இவ்வாறு செயற்படுகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

அதுமட்டுமல்லாது, ஜெனிவா சமரை முறியடிக்க அரசு சூட்சுமமான முறையில் தயாராகி வருவதாகவும் சுசில் இதன் போது சுட்டிக் காட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது.

### இ.போ.ச.

இதனை அடுத்து இ.போ.ச. பஸ் சாரதி பயணிகளுடன் கிளிநொச்சி பொலிஸ் நிலையம் சென்றார். அங்கு முறைப்பாடு பதியப்படும் வரை பயணிகள் காத்திருக்க வேண்டி ஏற்பட்டது.

தூர இடங்களுக்கு செல்லும் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

(ஐ-426-400)

### திருக்கேதீஸ்வரம்

நடைபெற்றது.

இந்த நிகழ்வில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு ஆத்ம சாந்திப்பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

இதேவேளை,புனிதம் அறியாதவர்களினால் ஏற்படுத்தப் பட்ட மனிதாபிமானமற்றதும், இறை பயமற்றதுமான இந்தச் செயலை தாம் வன்மையாகக் கண்டிப்பதாக திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச் சபை தெரிவித்துள்ளது.

(ஐ-56)

### 81

தடவையாக இன்று காலையிலி ருந்து தோண்டப்படும் என்று மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட் ணம் தெரிவித் தார்.

இதேவேளை, திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்குச் செல்லும் பிரதான வீதியில் அமைந்துள்ள மக்கெய்சர் விளையாட்டு மைதானக் காணியில் கடந்த 12 ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியிலிருந்து மீட்கப் பட்ட எச்சங்கள் தொடர்பான இரசாயன பகுப்பாய்வு அறிக்கை இன்னும் ஒரு வாரத்துக்குள் கிடைக்கக் கூடும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

குறித்த புதைகுழி கண்டுபிடிக்கப்பட்ட பகுதியைச் சுற்றி பொலிஸார் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளனர் என்றும், பாதுகாப்புத் தரப்பினர் தவிர்ந்த வேறெவரும் உட் செல்ல இதுவரை அனுமதிக்கப்படவில்லை என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் ஆளுகைக்குட்பட்ட திருகோணமலை நகரசபையின் தலைவர் க.செல் வராஜா (சுப்ரா) நேற்று மாலை உதயனுக்குத் தெரிவித்தார்.

திருகோணமலை நகரசபைப் பகுதிக்குள் இந்தப் புதைகுழி கண்டு பிடிக்கப்பட்ட போதும் அதனைப் பார்வையிட நகரசபைத் தலைவராக இருக் கும் தனக்கும் அனுமதி மறுக்கப்பட்டுள் ளது என்று அவர் விசனம் தெரிவித்தார். இது பலத்த சந்தேகங்களை ஏற்படுத்துகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்ட இடத்தை திருகோணமலை நீதிமன்ற நீதிவான் இரண்டு தடவைகள் நேரில் வந்து பார்வையிட்டுச் சென்றுள்ளார் எனவும், இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலேயே குறித்த பகுதி முன்னர் இருந்து வந்துள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ஐ-சி)

# சம்பியன்களாகி அசத்தினர் சென்.சேவியர், சென்.செபஸ்ரியன்



சவேரியார்புரம் சென்.சேவியர் ஆண்கள் அணி



மருதமடு சென்.செபஸ்ரியன் பெண்கள் அணி

யாழ்ப்பாணம், பெப். 24

முசலி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான உதை பந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்தில் ஆண்கள் பிரிவில் சவேரியார்புரம், சென்.சேவியர் விளையாட்டுக் கழகமும் மகளிர் பிரிவில் மருதமடு சென். செபஸ்ரியன் விளையாட்டுக் கழகமும் வெற்றி பெற்றுச் சம்பியன்களாகத் தெரிவாகியுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அரிப்பு மகா வித்தியாலய மைதானத்தில் இந்த இறுதியாட்டங்கள் இடம்பெற்றன.

**சவேரியார்புரம், சென். சேவியர் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.**

முதலில் இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் சவேரியார்புரம் சென். சேவியர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அரிப்பு ஜோசப் விளையாட்டுக் கழக அணி மோதியது.

அதில் சவேரியார்புரம், சென். சேவியர் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.

தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் மருதமடு சென்.செபஸ்ரியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொக்குபடையான் சென்.ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

அதில் மருதமடு சென். செபஸ்ரியன் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவாகியது. (ற-23)

## கிரிக்கெட் ஆட்ட முடிவுகள்



யாழ்ப்பாணம், பெப். 24

யாழ்.கல்வி கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயது ஆண்கள் பிரிவு மென்பந்துச் சுற்றுத் தொடரில் யாழ். மத்திய கல்லூரி அணி சம்பியனாகத் தெரிவாகியது.

இரண்டாவது இடத்தை சென். ஜோன்ஸ் கல்லூரி அணியும் மூன்றாம் இடத்தை நாவாந்துறை ஆர்.சி. வித்தியாலய அணியும் பெற்றுக் கொண்டுள்ளன. (ற-23)

## கலைமதி வி.கழகத்தை வீழ்த்தியது திக்கம் அணி

யாழ்ப்பாணம், பெப்.24

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதை பந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

அவற்றில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் திக்கம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதியது. அதில் திக்கம் விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)

## காந்தன், நல்லதம்பி வெற்றி கிண்ணம் சம்பியனானது ஆவரங்கால் மத்தி

யாழ்ப்பாணம், பெப். 24

சுன்னாகம் சூராவத்தை நியூ வொரியஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய காந்தன், நல்லதம்பி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவானது.



கடந்த வியாழக்கிழமை நியூ வொரியஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதியது.

5 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. (ற-23)

## வலைப்பந்தாட்ட போட்டி முடிவுகள்



யாழ்ப்பாணம், பெப். 24

யாழ்.கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயது, 17 வயது மற்றும் 19 வயது பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டிகளில் வெற்றியீட்டிய பாடசாலைகளின் விவரங்கள் வருமாறு:-

15 வயது பிரிவு

* முதலாம் இடம்- வைத்தீஸ்வராக் கல்லூரி
* இரண்டாம் இடம்- சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
* மூன்றாம் இடம்- திருக்குடும்ப கன்னியர்மடம்

17 வயது பிரிவு

* முதலாம் இடம்- வேம்படி மகளிர் கல்லூரி
* இரண்டாம் இடம் - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
* மூன்றாம் இடம்- பாஷையூர் சென்.அன்ரனீஸ் றோ.க.த. வித்தியாலயம்

19 வயது பிரிவு

* முதலாம் இடம்- வேம்படி மகளிர் கல்லூரி
* இரண்டாம் இடம்- சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
* மூன்றாம்இடம்-திருக்குடும்ப கன்னியர்மடம் (ற-23)

## ஆனைக்கோட்டை, சண்டிலிப்பாய் இளைஞர் கழகங்கள் இறுதியில்

யாழ்ப்பாணம், பெப்.24

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையே நடத்தப்படும் 2014 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழாவில் ஓர் அங்கமான ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியின் அரை இறுதியாட்டங்களில் ஆனைக்கோட்டை இளைஞர் கழக அணி, சண்டிலிப்பாய் மேற்கு இளைஞர் கழக அணி ஆகியவை வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளன.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற அரையிறுதியாட்டங்களில் முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஆனைக்கோட்டை இளைஞர் கழக அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு இளைஞர் கழக அணி மோதியது.

மூன்று செற்களைக் கொண்ட அரையிறுதியாட்டத்தில் ஆனைக்கோட்டை இளைஞர் கழக அணி 2:0 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் முள்ளானை இளைஞர் கழக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் மேற்கு இளைஞர் கழக அணி மோதியது.

3 செற்களைக் கொண்ட அரையிறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் மேற்கு இளைஞர்கழக அணி 2:0 என்ற செற்கள் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.(ற-23)



யாழ். மத்திய கல்லூரி ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இதன்போது மாணவர்கள் பந்துப் பரிமாற்றப் போட்டியில் ஈடுபட்டிருக்கும் காட்சி. (த-20)

## கலாஜோதி, கலைஒளி விளையாட்டுக் கழகங்கள் இறுதியில் பலப் பரீட்சை

யாழ்ப்பாணம், பெப்.24

உடுவில் பிரதேசத்தைச் சேர்ந்த பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையே நடத்தப்படும் 2014 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழாவில் ஓர் அங்கமான ஆண்களுக்கான கபடிப் போட்டியின் அரையிறுதியாட்டங்களில் இணுவில் கலாஜோதி இளைஞர் கழக அணி மற்றும் இணுவில் கலைஒளி இளைஞர் கழக அணி என்பன வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.

நேற்று முன்தினம் சனிக்கிழமை சுன்னாகம் ஐயனார் இளைஞர் கழக மைதானத்தில் இந்த அரையிறுதி ஆட்டங்கள் இடம்பெற்றன.

முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் தாவடி விநாயகர் இளைஞர் கழக அணியை எதிர்த்து இணுவில் கலாஜோதி இளைஞர் கழக அணி மோதியது.



அதில் இணுவில் கலாஜோதி விளையாட்டுக்கழக அணி 28:7 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் இணுவில் கலைஒளி இளைஞர் கழக அணியை எதிர்த்து சுன்னாகம் ஐயனார் இளைஞர் கழக அணி மோதியது.

அதில் இணுவில் கலைஒளி இளைஞர் கழக அணி 31:11 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ற-23)




# கட்டடக் கலைஞர்களுக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி

கட்டடத்துறையினரால் இந்திய கேரளா, கொச்சினில் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியொன்று இந்த வாரம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த உலகக் கிண்ண போட்டியின் ஆரம்ப நிகழ்வுகளின் ஓர் அங்கமாக இலங்கை அணி பங்குபற்றவுள்ளது. இந்தப் போட்டித் தொடரில் பங்குபற்றுவதற்காக 16 வீரர்கள் கொண்ட குழுவை இலங்கை கட்டட நிறுவனம் (SLIA) அனுப்பவுள்ளது. இந்த அணிக்கு கட்டட கலைஞரான துசித இலங்கமகே தலைமை தாங்கவுள்ளார். இந்திய கட்டட நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கிரிக்கெட் போட்டித் தொடருக்காகப் பங்குபற்றும் இலங்கை அணிக்கு இளம் கட்டடக்கலை திருவிழா மற்றும் Orange Electric ஆகியன அனுசரணை வழங்குகின்றன.

இந்தப் போட்டியில் கலந்து கொள்ளும் இலங்கை அணியில், 40 வயதுக்கு மேலாக 5 வீரர்களும் 30 வயதுக்குட்பட்ட 10 வீரர்களும் 30 வயதுக்கு கீழான ஒரு வீரரும் இடம்பெறுகின்றனர். இரண்டு நாள்களைக் கொண்ட இந்த கிரிக்கெட் போட்டித் தொடருக்கு இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், ஐக்கிய அரபு ராஜ்ஜியம் மற்றும் இலங்கை ஆகிய அணிகள் பங்குபற்றுகின்றன.

# டோனியிடம் விசாரணை




அந்நிய மண்ணில் இந்திய அணியின் தோல்விக்கான காரணம் குறித்து அணித்தலைவர் டோனி, மற்றும் பயிற்சியாளர் பிளட்சரிடம் இந்தியக் கிரிக்கெட் சபை நிர்வாகிகள் விசாரிக்க உள்ளனர்.

கடந்த 2011இல் இந்திய அணிக்கு பயிற்சியாளர் ஆனார் சிம்பாப்வேயின் டங்கன் பிளட்சர். அன்று முதல் இன்று வரை அந்நிய மண்ணில் தொடர்ந்து அடிதான் கிடைத்து வருகிறது. அதாவது இங்கிலாந்துடன் 0-4, ஆஸ்திரேலியாவுடன் 0-4 என, டெஸ்ட் தொடரை இழந்த இந்திய அணி, தென்னாபிரிக்கா (0-1) மற்றும் பலம் குறைந்த நியூசிலாந்திலும் (0-1) கோட்டை விட்டுத் திரும்பியது.


இதனால், டெஸ்ட் அணித்தலைவர் பதவியில் இருந்து டோனி, பயிற்சியாளர் பிளட்சர் என்று இருவரையும் நீக்க வேண்டுமென கோரிக்கை எழுந்துள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் அந்நிய மண்ணில் இந்திய அணி சந்தித்த தொடர் தோல்விகள் குறித்து இருவரிடமும் விசாரிக்கவுள்ளதாகத் தெரிகிறது. தவிர, எதிர்வரும் 28ஆம் திகதி புவனேஸ்வரில் நடக்க உள்ள இந்தியக் கிரிக்கெட் சபை செயற்குழுக் கூட்டத்திலும் இந்தப் பிரச்சினை பற்றி விவாதிக்கப்பட உள்ளது. (த)

# உதைபந்தாட்டப் போட்டிகளை கண்டுகளிக்க பாப்பரசருக்கு பிரேஸில் ஜனாதிபதி அழைப்பு



பிரேஸிலில் நடைபெறவுள்ள உதைபந்தாட்டப் போட்டிகளைக் கண்டுகளிப்பதற்கு அந்நாட்டு ஜனாதிபதி பரிசுத்த பாப்பரசருக்கு உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுத்துள்ளார்.

எதிர்வரும் ஜூன் மாதம் 12 ஆம் திகதி பிரேஸிலில் உதைபந்தாட்டப் போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன. பாப்பரசரை சந்தித்த ஜனாதிபதி டில்மா ருசெப் , பிரேஸிலின் உதைபந்து நாயகன் பீலே கையொப்பமிட்ட ரீ-சேர்ட் ஒன்றும் பாப்பரசருக்கு வழங்கியுள்ளார். (த)




# மன்செஸ்டர் யுனைட்டெட் வெற்றி

கிரிஸ்டல் பலசிலில் இடம்பெற்ற இங்கிலாந்து பிரிமியர் லீக் உதைபந்தாட்டப் போட்டியில் வெய்ன் ரூனி இரண்டு கோல்களைப் போட்டு, மன்செஸ்டர் யுனைட்டெட்டை வெற்றிக்கு இட்டுச் சென்றுள்ளார்.

வெய்ன் ரூனி இரண்டு மாதங்களுக்குப் பின்னர் முதன் முதலாக இந்த போட்டியில் கலந்து கொண்டார். அதேவேளை, இவர் தற்போது புதிய ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளார்.

இந்த ஒப்பந்தத்திற்கு அமைய எதிர்வரும் 2019ஆம் ஆண்டு வரை அவர் 14 கோடி அமெரிக்க டொலர்களை வருவாயாக பெற முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# ஐ.பி.எல். பாதுகாப்பு குறித்துப் பேச்சு

எதிர்வரும் இந்திய பிரிமியர் லீக் போட்டிகளில் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து உட்துறை அமைச்சுடன் பேச்சுக்களை நடத்த தாம் தயாராக உள்ளதாக இந்திய விளையாட்டுத் துறை அமைச்சர் ஜிற்றெண்ரா சிங் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து எமக்கு இது வரை எந்த அறிவித்தல்களோ அல்லது அழைப்புகளோ உட்துறைஅமைச்சிடமிருந்து கிடைக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய பிரிமியர் லீக் போட்டிகளுக்கான பாதுகாப்பு வழங்குதல் தொடர்பில் விளையாட்டுத் துறை அமைச்சுக்கு எந்தவிதமான கடப்பாடுகளும் இல்லை என்ற போதிலும், அதிக வருவாயை தரும் 20/20 இந்திய பிரிமியர் லீக் கிரிக்கட் போட்டிகள் இந்தியாவுக்கு வெளியே இடம்பெறும் பட்சத்தில் அது இந்திய கிரிக்கட்டின் தன்மையை பாதிக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஒலிம்பிக் போட்டிகளில் முறைகேடு

ரஷ்ய குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் முறைகேடு நடந்துள்ளதாகவும், விசாரணை நடத்தக் கோரியும் 18 லட்சம் கையெழுத்திட்டு போராட்டம் நடத்தியுள்ளனர். ரஷ்யாவின் சோச்சி நகரில் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இந்தப் போட்டியில் ஸ்கேட்டிங் பிரிவில் ரஷ்ய நாட்டை சேர்ந்த வீராங்கனை அட்லீனா சொத்னிகோவா தங்க பதக்கம் வென்றார். ஆனால் இந்த விடயத்தில் முறைகேடு நடந்துள்ளது என எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

ரஷ்ய நடுவர்களால் முடிவு அறிவிக்கப்பட்ட நிலையில், போட்டியில் பல்வேறு முறைகேடுகள் நடந்துள்ளன என கூறி 18 லட்சத்துக்கும் அதிக மானோர் கையெழுத்திட்ட மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டு உள்ளது.

அதில், மறுதீர்ப்பு வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டு உள்ளது. போட்டியில் பங்கேற்ற நடுவர்கள் பெரும்பாலும் கிழக்கு பகுதி மாநிலங்களை சேர்ந்தவர்கள். நடுவர்களில் ஒருவர் 1998ஆம் ஆண்டு நடந்த குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் சூதாட்டத்தில் ஈடுபட முயன்ற யூரி பால்கோவ். மற்றொருவரான ஆல்லா ஷேகோவ்ட்சேவா ரஷ்ய நாட்டின் ஸ்கேட்டிங் அமைப்பு தலைவரைத் திருமணம் புரிந்தவர்.

இது குறித்து வெள்ளிப் பதக்கம் வென்ற தென்கொரிய வீராங்கனை கிம் கூறுகையில், புள்ளிகள் நடுவர்களால் வழங்கப்பட்டுள்ளது என்றும், எனவே அது குறித்து பேச நான் தகுதியானவள் அல்ல எனவும் தெரிவித்துள்ளார். எனது வார்த்தைகளால் எதுவும் மாறிவிடப்போவதில்லை. தற்போது நான் நிம்மதியாக இருப்பதாக உணர்கிறேன். ஏனென்றால் இவ்விவகாரம் முடிந்து போன விசயம் எனவும் மேலும் தெரிவித்துள்ளார். வெற்றி பெற்றது குறித்து அட்லீனா கூறுகையில், இது எனது தங்க பதக்கம், என்னால் இதனை நம்ப முடியவில்லை. (த)



## மீண்டும் மரடோனா

உதைபந்தாட்ட உலகின் முடிசூடா மன்னான மரடோனா மீண்டும் களமிறங்க உள்ளார். ஆர்ஜென்டினா அணியின் முன்னாள் அணித் தலைவரான மரடோனா வுக்கு 53 வயது ஆகிறது.
இந்நிலையில் தற்போது மீண்டும் வந்து களத்திற்குள் குதிக்க திட்டமிட்டுள்ளார். ஆர்ஜென்டினா பிரிமெரா டிவிசன் லீக் தொடரில், சிறிய கழக மான டெபோர்டிவோ ரீஸ்ட்ரா அணிக்காக பங்கேற்க இருக்கிறார்.
1998ம் ஆண்டு கடைசியாக விளையாடிய மரடோனா,எதிர் வரும் மார்ச் மாதம் 23ம் திகதி களமிறங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (400)



மரடோனா

## இந்திய அணியின் புதிய பயிற்சியாளராக அன்ரி பிளவர்?



அன்ரி பிளவர்?

இந்திய அணி அன்னிய மண்ணில் தொடர் தோல்விகளை சந்தித்து வருவதால் அணித்தலைவர் டோனி மற்றும் பயிற்சியாளர் பிளட்சர் ஆகியோர் கடும் விமர்சனத்திற்கு ஆளானார்கள்.
தென்னாபிரிக்கா மற்றும் நியூசிலாந்து சுற்றுப்பயணத்தில் இந்திய அணி தொடர் தோல்வியை சந்தித்தது.
இதனையடுத்து அணித்தலைவர் டோனி மற்றும் பயிற்சியாளர் பிளட்சர் கடும் விமர்சனங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.
டெஸ்ட் போட்டிகளுக்கு விராட் கோஹ்லியை அணித்தலைவராக நியமிக்கலாம் என்ற கருத்து மேலோங்கி வருகின்றது.
இந்நிலையில் காயத்தை காரணம் காட்டி டோனி ஆசியக் கிண்ணத் தொடரில் பங்கேற்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதற்கிடையே பயிற்சியாளர் பிளட்சரை நீக்க கிரிக்கெட்ச் சபை முடிவு செய்துள்ளது.
இவருக்கு பதிலாக சிம்பாப்வே அணியின் முன்னாள் அணித்தலைவரும், இங்கிலாந்து அணியின் முன்னாள் பயிற்சியாளரான அன்ரி பிளவரை பயிற்சியாளராக நியமிக்க கிரிக்கெட் சபை முடிவு செய்து அவரை தொடர்பு கொண்டு பேசியதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.
ஆனால் இதனைக் கிரிக்கெட் சபை மறுத்துள்ளது.
இது தொடர்பாகக் கிரிக்கெட் சபையின் செயலாளர் சஞ்சய் பட்டேல் கூறுகையில், இந்திய அணிக்கு பயிற்சியாளராக இருக்குமாறு அன்ரி பிளவரை தொடர்பு கொண்டு பேசியதாக வெளியான தகவல் தவறானது. இதில் எந்த உண்மையும் இல்லை. இது தொடர்பாக எந்தவித விவாதமும் நடைபெறவில்லை.
அடுத்த மாதம் தான் பயிற்சியாளர் தெரிவு நடைபெறுகிறது என்றும், யாரை நியமிப்பது என்று இதுவரை முடிவு செய்யவில்லை எனவும் தெரிவித்துள்ளார். (400)

### வீடு வாடகைக்கு

மனோகரா சந்திக்கும், ஐந்து சந்திக்கும் இடையில் சகல வசதியுடன் வீடு வாடகைக்கு உண்டு.
பார்வையிடும் நேரம்
திங்கள் செவ்வாய் - 3Pm - 6Pm
தொடர்புகளுக்கு : 072 5001982, 077 9123826

### சர்வதேச ஆங்கில பரீட்சைகள்

ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்
IELTS (Duration: 40 hrs with free 4 mock exams)
- Latest training materials.
- Skills development in all four categories.
- Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.
- Depend on individual needs, the student can access other English Modules FREELY.

விரிவுரைகள் Oxford University UK postgraduate ஆல் வழங்கப்படும்
IELTS பரீட்சை பதிவுகளை எந்தக்கிளையிலும் இலசமாக மேற்கொள்ள முடியும்

Spoken English
அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள். அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ். அச்சடிக்க பாடப்புத்தகங்கள். மல்ரிமீடியா ஊடான கற்பித்தல். நவீன வசதிகளுடன் கூடிய வகுப்பறைகள்.
புதிய பிரிவுகள் ஆரம்பம்

City & Guilds A1, A2, B1, B2 (ESOL) Diploma International English for Speakers of other Languages
சித்தியடைவதற்கான 100% உத்தரவாதம்
திருமணம் செய்து நிரந்தர விசாவில் London செல்பவர்கள், உயர்கல்விக்கு UK செல்வோருக்கு பிரித்தானிய அரசால் கோரப்படும் ஆங்கில பரீட்சைகள் எமது நிறுவனத்திலே கற்று எமது நிறுவனத்திலேயே பரீட்சைக்கு இலகுவாக தோற்றமுடியும்.

DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403
நெல்லியடி M.M.V வீதி. Tel.:021-226 2470
சாவகச்சேரி கண்டி வீதி. (HNB அருகில்) Tel.:021-227 0775
சுன்னாகம் Jet மோட்டேர்ஸ் சந்தி Tel.:021-224 1970

## வீனஸ் சம்பியன்



வீனஸ்

டுபாய் ஓபன் தொடரின் ஒற்றையர் பிரிவில், அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ் சம்பியன் பட்டம் வென்றார்.
டுபாயில் பெண்களுக்கான டபிள்யூ.டி.ஏ., தொடர் நடந்தது. இதன் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ், பிரான்சின் அலிஷ் கார்னட்டை சந்தித்தார்
இதில் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய வீனஸ் வில்லியம்ஸ், முதல் இரண்டு செற்களையும், 6-3, 6-0 என்ற நேர்செற்களில் கைப்பற்றி சம்பியன் பட்டம் வென்றார். (400)

### SPOKEN ENGLISH WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை A/L எழுதியோர், O/L எழுதியோர், இளைஞர் யுவதிகள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
"எமது 3 மாத பயிற்சி நிறைவில் சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பிவழங்குவதற்கான உத்தரவாதம் வழங்கப்படும்"
வார நாள் (செவ்வாய்,வியாழன்) பிரிவுகள் ஆரம்பம் 27.02.2014
1. காலை 09.00-11.00 2. காலை 11.00-01.00
ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்களும் எமது இப் பயிற்சி நெறியில் இணைந்து பயிற்சி பெற முடியும்
* பல்கலைக்கழகங்களுக்கான மாணவர்களும் ஆசிரியர்களும் கற்று பயன்பெற்ற பாடநெறி
SAAMSON Language School 279, ஆஸ்பத்திரி வீதி, யாழ்நகர். 077 621 4567

### பணிநிலை வேண்டுகை

நேரச்சு இயந்திர இயக்குநர்
Offset Machine Minder
(KORD, KORS)
- அனுபவமுள்ளவர்கள் மட்டும்

விண்ணப்பதாரர்கள்
2014 பெப்ரவரி 24, 25, 26 ஆம் திகதிகளில் காலை 10.00 முதல் 4.00 மணிவரை நேரில் வரவும்.
பாரதி பதிப்பகம்
இல.430, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

## அப்ரிடி போட்டிகளில் பங்கேற்பதில் சிக்கல்



அப்ரிடி

பாகிஸ்தான் சகல துறை ஆட்டக்காரர் சயிட் அப்ரிடிக்கு தாடையில் காயம் ஏற்பட்டுள்ளது.
இதனால் அவர் ஆசியக் கிண்ணக் கிரிக்கெட்டில் பங்கேற்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.
பாகிஸ்தான் அணி பயிற்சிப் போட்டியில் விளையாடியபோது வேகப்பந்து வீச்சாளர் ஜுனைட் கான் வீசிய பந்தில் அப்ரிடி ஸ்வீப் ஷாட் அடிக்க முயன்றார்.
அப்போது துடுப்பில் பட்டு எட்ஜ் ஆன பந்து அவருடையதலைக்கவசத்தில் தாக்கியது. இதனால் அவரது தாடை அருகே காயம் ஏற்பட்டது.
இதுதொடர்பாக பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளர் மொயின் கான் கூறுகையில், அப்ரிடிக்கு பயப்படும் படியான காயம் இல்லை என்றாலும், அடுத்த இரண்டு நாள்களுக்கு அதிகமாக பேசக்கூடாது என மருத்துவர் அறிவுறுத்தியுள்ளார். பேசினால் அவருடைய தாடையில் பாதிப்பு ஏற்படும் என தெரிவித்துள்ளார். (400)

- இத்தாலி உடன் பறக்க சட்ட ஆலோசனை
- செங்கன் நாடுகளான ( ஸ்பெயின், ஜேர்மனி, நெதர்லாந்து) சட்டரீதியாக செல்லலாம்
- கனடா படிக்க உழைக்க 2 வருட விசா
- IELTS இல்லாமலே நியூசிலாந்து, சைப்பிரஸ் செல்லலாம்
- சைப்பிரசில் பகுதி நேரமாக ஒரு இலட்சம் வரை உழைக்கலாம்
- நியூசிலாந்தில் 2 வருடத்தில் PR பெற்றால் ஆஸி பறக்கலாம்
- எல்லா நாடுகளுக்கும் Visit Visa ஆலோசனைகள்

திசைகாட்டி (பிறை) லிமிற்
175, பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
021 2219016, 021 5689090
www.thisaivisa.Com

### இந்து மதம் போதிக்க ஆசிரியர்கள் அவசரமாகத் தேவை

துன்னாலைப்பகுதியில் 28.02.2014 அன்று ஆரம்பமாகவுள்ள இந்து இலவச அறநெறிப்பாடசாலைக்கு இரண்டு ஆசிரியர்கள் உடன்தேவை.
- கவர்ச்சிகரமான வேதனம் வழங்கப்படும்

1) இந்து மத போதனாசிரியர் - வகை (1)
மாணவர்களுக்கு புறஜெக்ரர்மூலம் கவர்ச்சியாக இந்து சமய தத்துவங்கள், நீதிநூல்கள், அறநெறிகள் போதிக்கக்கூடிய பட்டதாரி ஆசிரியைகள் தேவை. வெள்ளிக்கிழமைகளில் மாத்திரம் பணி
2) இந்துமதப்போதனாசிரியர்கள் - வகை (2)
தேவார திருவாசகம், திருமுறைகள், பக்திப்பாடல்களை உரிய முறையில் பயின்றுபட்டம் பெற்ற ஆசிரியைகள் தேவை. வெள்ளிக் கிழமைகளில் மாத்திரம் பணி

நேர்முகத்தேர்வு : 26.02.2014 பி.ப. 3 மணி
பின்வரும் முகவரியில் இடம்பெறும்
Ms.v. இந்துஜா
பொதுமுகாமையாளர்
(கௌரவ இயக்குநர்சபைக்கட்டளைப்படி)
175, பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
021 2219016, 021 5689090